# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 153 சித்திரை 15 ஆம் நாள் சனிக்கிழமை 28 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## இந்திர விழா ஏற்பாடுகள் வல்வையில் கோலாகலம்

### ஆயிரக்கணக்கில் மக்கள் குவிவர் என எதிர்பார்ப்பு





யாழ்ப்பாணம், ஏப்.28
வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் இந்திர விழாவை வெகு கோலாகலமாகவும் சிறப்பாகவும் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் இம்முறையும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெறும். வடக்கின் பல பாகங்களில் >> 25

## யாழ். குடாநாட்டில் பொலிஸாரினது 'லீவு' உடன் நிறுத்தம்

### தலையெடுக்கும் வாள்வெட்டுக்குழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாணப் பிராந்தியப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 9 பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் மறுஅறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளன. வடக்கு மாகாண மூத்த >> 06

## கொக்குவிலில் வாள்வெட்டு; குடாநாட்டில் எண்மர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28
கொக்குவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இருவரும், ஆவாக் குழுவின் ஒளிப்படத்தில் >> 06

## சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.28
சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க நுகர்வோர் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. >> 06

## புகையிலைத்தடையை 2022 வரை நீக்கவும்

### வேலணை சபையில் தீர்மானம் அது மைத்திரிக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 28
புகையிலைச் செய்கையாளர்களுக்கான மாற்றுப்பயிர்கிடைக்கும்வகையில் 2022 ஆம் ஆண்டு வரையில் புகை >> 06

## அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு கடும் எதிர்ப்பு

### தமிழ் பேசும் கட்சிகளிடம் இருந்து கிளம்பியது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
நிறைவேற்று அதிகார அரச தலைவர் ஆட்சி முறைமையை முற்றாக ஒழிக்கக் கோரி ஜேவிபியினால் கொண்டுவரப்படவுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை சிறுபான்மையினக் கட்சிகள் எதிர்த்துள்ளன.
தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய >> 06

கூட்டமைப்பினரைத் தாக்கிக் கொன்ற

## ஈ.பி.டி.பியினர் இருவரை பிடிப்பதற்கு நடவடிக்கை

### பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 28
2001ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைத் தாக்கிப் படுகாயப்படுத்திய குற்றவாளிக >> 25

## உலகத் தொழிலாளர் தினத்தன்று புதிய அமைச்சரவை பதவியேற்பு

### மைத்திரி திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.28
உலகத் தொழிலாளர் தினத்தன்று காலையில் புதிய அமைச்சரவையை நியமிக்கவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்தள்ளார். அந்தப் புதிய அமைச்சரவை >> 25

## தொழிலாளர் நாளன்று விடுமுறை அறிவியுங்கள்

### தனியார் நிறுவனங்களிடம் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28
தொழிலாளர் தினம் மே 7ஆம் திகதி கடைப்பிடிப்பதாக அரசு அறிவித்த போதும் அதனை வடக்கு கிழக்கில் மே முத >> 25

## சிறை அலுவலர்கள் மீது யாழ். நகரில் தாக்குதல்



>> 25

## 20ஆவது திருத்தத்தை கூட்டமைப்பு ஏற்குமா?

### தீர்வு, தேர்தல், நிறைவேற்று முறை ஒழிப்பு மூன்றும் ஒன்றாக நிகழவேண்டும் என வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 28
புதிய அரசமைப்பு ஊடாக அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கு இடையில் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் வகையில் கொண்டுவரப்படும் 20ஆவது திருத்தத்தை அதன் தற்போதைய வடிவத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட >> 06

## புத்தரின் புனிதப் பொருள்கள் யாழ். மக்களின் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 28
புத்தரின் ஒரு தொகை புனித தாதுப் பொருள்கள் யாழ்ப்பாண மண்ணுக்கு வரலாற்றில்முதல்தடவையாகக்கொண்டு வரப்பட்டு யாழ்ப்பாண மக்க >> 06

## பட்டதாரிகள் நியமன வயதை 40ஆக அதிகரிக்க வலியுறுத்து

### அரச தலைவருக்கு கடிதம் எழுதினார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப்.28
வடக்கு, கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்போது அவர்களுடைய வயதெல்லையை 35 இலிருந்து 40 வரை அதிகரிக்கவேண்டும் எனவும், மாவட்ட விகிதாசாரப்படியே அவர்களுடைய நியமனங்க >> 06

## கிம் ஜோங் – மூன் ஜெ இன் நேற்றுச் சந்தித்துப் பேச்சு



பியாங்யாங், ஏப். 28
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தென்கொரிய அதிபர் மூன் >> 06

## மைத்திரி - மாரப்பன இடையே பனிப்போர்!

### அமைச்சரவை மாற்றத்தில் அயலுறவுத்துறை புதியவருக்கு

கொழும்பு, ஏப். 28
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும் இடையில் உச்சக்கட்டப் பனிப்போர் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இதனால் நடைபெறவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தில் மாரப்பனவின் அயலுறவுத்துறை அமைச்சுப் பதவி பறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. >> 06

## எரிந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு,ஏப்.28
பேருவளை மஸ்ஸலவில் எரிந்த நிலையில் ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டது. இரண்டு மாடி வீடொன்றின் மேல் மாடியில் இருந்து நேற்று முன்தினம் சடலம் மீட்கப்பட்டது.
சடலமாக மீட்கப்பட்ட நபர் நீண்ட காலமாக அந்த வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தவர்என்றும் 40வயதுமதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.
மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## ஆணின் சடலம் மீட்பு

சிலாபம்,ஏப்.28
சிலாபம்காக்கப்பள்ளியபகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.
இந்த சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் குருதிக் காயங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## மனைவியை கொன்றுவிட்டு கணவரும் உயிர்மாய்ப்பு

கொழும்பு,ஏப்.28
மனைவியை வெட்டிக் கொலை செய்து தானும் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டார் கணவர். இந்தச் சம்பவம் ஊவா பெல்வத்தையில்நேற்று இடம் பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத் தகறாறு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனக் கூறப்பட்டது. அயலவர்களால் பொலிஸாருக்குவழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சடலங்களைப் பொலிஸார் மீட்டனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## வாகன விபத்தில் இளைஞன் சாவு

கொழும்பு,ஏப்.28
பாணந்துறையில்இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம்நேற்று இடம் பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
காலி நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிளில்ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்துஅருகில்இருந்தசுவர் ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக்கூறப்பட்டது. இதில்படுகாயமடைந்த இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

# நல்லிணக்கத்தைவெளிக்காட்ட பாடசாலைசிறந்ததோர்தளம்

## மைத்திரி தெரிவிப்பு

அநுராதபுரம்,ஏப்.28
**தேசிய நல்லிணக்கச் செய்தியை சமூகத்துக்குக் கொண்டு செல்வதற்கு பாடசாலைசிறந்ததோர்தளமாகும். இவ்வாறு அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அனுராதபுரம் ஸாஹிரா கல்லூரியின் பொன்விழாவும் கட்டடத்திறப்புவிழாவும்நேற்றுநடைபெற்றன. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும்தெரிவித்ததாவது: "பிரபல பாடசாலைகளுக்கான போட்டித் தன்மைக்கு மத்தியில், ஒரு பாடசாலைக்கு அதிகளவு மாணவர்களை உள்வாங்குவதால் அப்பாடசாலையின்நிர்வாகத்தி லும் மாணவர்களின் புறச்செயற்பாடுகளிலும் வளங்களை பெற்றுக்கொடுப்பதிலும் ஏற்படும் பிரச்சினைகள்தொடர்பாகதேசிய கல்விக்கொள்கையை வகுக்கின்றபோது கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்த நிலைமை வேறுபட்டது. அந்த அனைத்து நாடுகளைப் பார்க்கிலும் இலவசக்கல்விக்காக எமதுநாட்டில்மேற்கொள்ளப்படும் முதலீடுகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து முழுத் தேசத்துக்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பாடுபடவேண்டியதுஅனைவரினதும் பொறுப்பாகும் என்றார்.
இந்தநிகழ்வில்வடக்கு,வடமத்திய பிரதான சங்க நாயக்க தேரர் அநுராதபுரம் சம்போதி விகாராதிபதி சங்கைக்குரிய நுகத்தென்னே பஞ்ஞானந்த நாயக்க தேரர், அமைச்சர்களான ரவுப் ஹக்கீம், துமிந்த திசாநாயக்க, சந்திராணி பண்டார,பி.ஹெரிசன்,வடமத்திய மாகாண ஆளுநர் எம்.பி.ஜயசிங்க அதிபர் ஏ.எம்.ஜெளபர், துமிந்த திசாநாயக்க, சந்திராணி பண்டார, பி.ஹெரிசன். கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாரச்சி ஆகியோர் உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும்பழையமாணவர்கள்கலந்து கொண்டனர். (ந-ரி5)



## ஹபாயாவுக்கு ஆதரவாக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஏப்.28
திருகோணமலைசிறி சண்முக இந்து மகளிர் கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியைகள் ஹாபாயா அணிவதற்கு எதிராகஇடம்பெற்றகண்டனஆர்ப்பாட்டத்துக்குஎதிராக கிண்ணியாவில் ஜும் ஆ தொழுகைக்குப் பின்னர் கிண்ணியா பழைய மருத்துவமனைச் சந்தியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
விடமாட்டோம் விடமாட்டோம் எங்கள் கலாசாரத்தை விட்டுக் கொடுக்க மாட்டோம், மாறமாட்டோம் மாற மாட்டோம் எங்கள் கலாரசார ஆடையை விட்டு மாற மாட்டோம், சீண்டாதே சீண்டாதே முஸ்லீம்களை சீண்டாதே என்பன போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியைக்கு ஹபாயா ஆடையை அணிவதற்கு தடை விதித்ததையடுத்தே இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுஎனக்கூறப்பட்டது. (ந.ரி4)

## ஹபாயா விவகாரம் தொடர்பில் ஓரிரு தினங்களுக்கு அறிக்கை

திருகோணமலை,ஏப்.28
திருகோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரி முஸ்லிம்பெண்ஆசிரியர்கள்தமது மத வரையறைக்குட்பட்ட ஆடையானஹபாயாஅணிவதில்ஏற்பட்டபிரச்சினைதொடர்பில்ஆராய்வதற்கு உயர்மட்ட குழு ஒன்றை அமைத்து அந்தக்குழுவினரைஅந்தவிடயம் தொடர்பான அறிக்கையை ஓரிரு தினங்களுக்குள் சமர்பிக்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பணித்துள்ளார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்பிரதித்தலைவரும்விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் அந்தப் பாடசாலையில் மத வரையறைக்குட்பட்ட ஆடைகளை முஸ்லிம் ஆசிரியர்கள் அணிவதில் இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பாக கல்வி அமைச்சர்அகிலவிராஜ்காரியவசத்தை நேற்று சந்தித்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டது.
முஸ்லிம் பெண் ஆசிரியர்கள் தமது முகத்தை வெளிக்காட்டிய நிலையில் ஹபாய ஆடை அணிவதற்கு பிரச்சினை இல்லை என்று தெரிவித்த கல்வி அமைச்சர் இது தொடர்பிர் ஒரு வாரத்துக்குள் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.
திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் உறவு நீண்ட காலமாக நல்ல விதமாக நீடித்துவரும் நிலையில் இந்தச் சம்பவத்தினால் சில மனக்கசப்புகள்ஏற்படகாரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்த பிரதி அமைச்சர் ஹரீஸ் இந்தநிலை நாட்டின் சூழலுக்கு உகந்தவிடயமல்ல என்பதையும்கல்வி அமைச்சருக்கு சுட்டிக்காட்டினார். (ந.ரி4)

## இடர் முகாமைத்துவம் தொடர்பில்செயலமர்வு

திருகோணமலை,ஏப்.28
இடர்முகாமைத்துவம்தொடர்பில்திருகோணமலை மாவட்டத்தில் கடமையாற்றும் சிறுவர்மற்றும்மகளீர்தொடர்பானதுறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்று இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக செயலர் கே. அருந்தவராஜா தலைமையில் செயலமர்வு நடைபெற்றது. இடர்களின் போது தாங்கள் கடமையாற்றுகின்ற பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள், மகளீர்மற்றும்ஏனையசிறப்பு தேவையுடையவர்கள் தொடர்பில் எவ்வாறுதிடீரெனசெயற்படவேண்டும்அதற்கான முன் ஆயத்தங்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் உட்பட பல விடயங்கள் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டன.
வெளிக்கள உத்தியோகத்தர்களாகிய தாங்கள் தமது செயற்பாடுகளை தமது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் முன்னிலைப்படுத்தி செயற்படும்போது அதன் மூலம்உரியமக்கள்நன்மையடையக்கூடும் என்று மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார். இதில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எஸ்.சுகுணதாஸ், துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ந.ரி4)

## போதைப்பொருளுடன் வெளிநாட்டவர்கைது

கொழும்பு,ஏப்.28
தலங்கமயில் பிலெக் மென்டி எனப்படும் போதை பொருளுடன் வெளிநாட்டவர் உள்ளிட்ட மூன்று பேர் நேற்று முன்தினம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால்கைதுசெய்யப்பட்டனர். பொலிஸாருக்குக்கிடைத்தஇரகசியத்தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 82 கிராம் பிலெக் மென்டி போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அதன் பெறுமதி 12 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டது. பிலெக் மென்டி போதைப்பொருள் இலங்கையில் கண்டுபிடித்த முதல் சந்தர்ப்பம் இதுவாக கருதப்படுகின்றது. மேலதிக விசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

கொழும்பு,ஏப்.28
பொரளையில் பல கொள்ளைச் சம்பவங்களுடன்தொடர்புடைய ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டனர்.
இவர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக்கிடைத்தஇரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போதே இவர்கள்கைதுசெய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 5 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பணமும் 5 பவுண் நகையும்மீட்கப்பட்டனஎனக்கூறப்பட்டது. இவர்கள் பொரளை கடுவெல மற்றும் நாரஹென்பிட்ட பகுதியைச்சேர்ந்தவர்கள்என்று தெரிவிக்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ந.ரி4)

## வாகன விபத்தில் ஒருவர்உயிரிழப்பு ஏழு பேர் காயம்

கொழும்பு,ஏப்.28
வெல்லவாய பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர்உயிரிழந்ததுடன்7பேர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அம்பாந்தோட்டையில் இருந்து தங்காலை நோக்கி பயணித்த கார்ஒன்றுஎதிரேவந்தகார்ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.
விபத்தில் காயமடைந்தவர்கள் தங்காலைமருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில்சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்தார்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ந.ரி4)

# சு.கவிலிருந்து விலகமாட்டேன்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.28
தேசிய அரசில் அங்கம் வகிக்கின்றமையால் ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்துவது என அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தியே அரசை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் எனவும், ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவது எனவும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்குள் தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

“சிறிலங்கா சுதந்திர கட்சியின் எவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப்போவதில்லை, மகிந்த தரப்பில் இணையப்போவதுமில்லை.

சிறிலங்கா சுதந்திர கட்சியைப் பலவீனப்படுத்தும் வகையிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் வகையிலோ இப்போதுள்ள சிறிலங்கா சுதந்திர கட்சிக்காரர்கள் எவரும் செயற்படவில்லை.

நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையுடன் தேசிய அரசிலும் அமைச்சரவையிலும் செயற்பட்டு வருகின்றோம்.

ஒரு சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கொண்டுள்ள கருத்து முரண்பாடுகள் மற்றும் தனிப்பட்ட காரணங்களை கொண்டு முரண்பட முடியும். எனினும் நாம் எடுத்த பணியைச் செய்து முடிக்கும் வரையில் தேசிய அரசாகப் பயணிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ளது. தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கம் வகிப்பதை ஐக்கிய தேசியக் கட்சிக்காகவென அர்த்தப்படுத்தக் கூடாது. நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்காரார்கள் அல்ல.

வெற்றிடமான அமைச்சுப்பதவிகளுக்கு எமது கட்சி உறுப்பினர்களே நியமிக்கப்படுவார்கள். அதேபோல் நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வேண்டிய அவசியமும் இல்லை. எமது அரசியல் சகாப்தம் சிறிலங்கா சுதந்திர கட்சியில் தான் முடிவுக்கு வரும். நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவும் மாட்டோம், மகிந்த தரப்புடன் இணையவும் மாட்டோம். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுடன் நாம் முரண்படவும் அவசியம் இல்லை. தொடர்ந்தும் இரண்டு கட்சியினரும் இணைந்து தேசிய அரசில் ஒன்றாக பயணிக்க முடியும் என்றார்.

(ந.ரி5.31)



# மணல் கடத்தியவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஏப்.28
மட்டக்களப்பில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். மட்டக்களப்பிலிருந்து மஞ்சத்தொடுவாய்ப் பகுதிக்கு மணலைக் கடத்த முற்பட்ட வேளையே இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்கவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கடத்தலுக்காகப் பயன்படுத்திய டிப்பர் ரக வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



# வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப்.28
மட்டக்களப்பில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வாழ்வாதார மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கமைய தொழில் விருத்திக்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலர் உதயகுமார் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தத்திட்டங்களுக்காக 225 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு 310 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் 158 சலவைத் தொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் மட்டக்களப்பு மாவட்டத் திட்டமிடல்பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், பிரதியமைச்சரின் இணைப்பாளர் ஜோன் பாதர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# புகைத்தல் உற்பத்திக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு. ஏப்.28
புகைத்தலுக்கு எதிராக மட்டக்குளியில் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டது.

புகைத்தலால் நாளொன்றுக்கு சராசரியாக 72 பேர் உயிரிழக்கின்றனர். வருடத்துக்கு இந்த எண்ணிக்கை 25 ஆயிரம் முதல் 26 ஆயிரம் பேர் வரையாகும். ஆயிரக்கணக்கான பெண்களின் கணவர்மார்களையும், ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் தந்தையர்களையும் கொலை செய்யும் புகைத்தல் உற்பத்தி நிறுவனம் தங்கள் இலாபத்தில் 92 வீதத்துக்கும் அதிக தொகையை பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கே வழங்குகின்றது.

அந்த நிறுவனத்துக்கு கண்டனத்தை தெரிவிப்பதற்காகவும், இவர்களால் இறந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவுமே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இளைஞர்கள் தாய்மார்கள், சர்வமதத் தலைவர்கள் எனப் பலர் இதில் பங்குபற்றினர். (ற)

# அங்கவீனமுற்ற இராணுவ சிப்பாய்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு.ஏப்.28
நிவாரண நிதியை மோசடி செய்த நபர்களுக்கு எதிராக விசாரணை நடத்தும்படி இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் மற்றும் அங்கவீனமுற்ற சிப்பாய்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் பேரணி அரசதலைவர் செயலகம் வரை சென்றது.

பேரணியை இடைநிறுத்தும் வகையில் கலகத்தடுப்பு பொலிஸாரால் தடுப்பு வேலிகள் இடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அரசதலைவரின் செயலாளரிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றைக் கையளிப்பதற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இராணுவத்தினரை விற்பனை செய்து பிழைப்பு நடத்திவரும் நபர்களுக்கு எதிராக விசாரணை நடத்தும்படி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டதை அடுத்து அங்கவீனமுற்ற சிப்பாய் ஜயசேன கருத்து தெரிவிக்கையில்,

இராணுவத்திலிருந்து காணாமல் போன மற்றும் அங்கவீனமுற்ற சிப்பாய்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு 30 இலட்சம் ரூபா படி நிதி உதவி வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. எனினும் 3 வருடங்கள் ஆகியும் இந்த நிதி உதவி வழங்கப்படவில்லை.

இதுகுறித்து அரசதலைவரிடம் எழுத்துமூலம் இன்று முறையிட்டுள்ளோம். ஒருவாரத்துக்குள் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் எமது போராட்டம் தொடரும்.

இன்று 101 இராணுவ சிப்பாய்களின் குடும்பங்கள்தான் வீதிக்கு வந்தோம்.

எதிர்வரும் காலத்தில் நாடு முழுவதிலும் போராட்டத்தை முன்னெடுப்போம் - என்றார். (ந.ரி4)

# மணப்பெண் அலங்காரத்துடன் நேர்முகத்தேர்வுக்கு சென்ற பெண்

மாத்தறை.ஏப்.28
பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நேர்முகத் தேர்வுக்கு மணப்பெண் ஒருவர் சமுகமளித்துள்ளார். இந்தச் சம்பவம் மாத்தறையில் நடந்துள்ளது. மாத்தறை மாவட்டம் கெட்டவலகமவில் வசிக்கும் பட்டதாரியான கே. ஆர். அமாலி ப்ரிய தர்ஷன ஜயரத்ன என்பவர் மணப் பெண் கோலத்துடன், கணவருடன் நேர்முகத் தேர்வுக்குச் சென்றார்.

மணமகனின் வீட்டிற்கு புதுத் தம்பதிகளை வரவேற்கும் வைபவத்துக்குக் கலந்து கொள்ளும் நாளில் இந்தப் பெண்ணுக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையிலேயே மணப்பெண் கோலத்துடன், நேர்முகத் தேர்வுக்குச்சென்றார் என்று கூறப்படுகிறது. (ற-ரி5)



# வியானா கால்வாய்க்கு பாதுகாப்பு வேலி அமைக்க மைத்திரி பணிப்பு

பதுளை,ஏப்.28
பதுளை மஹியங்கனை பிரதான வீதியில் வியானா கால்வாய்க்கு சமாந்தரமாக உள்ள பாதுகாப்பற்ற மாபாகடப்பிரதேசத்தில் பாதுகாப்பு வேலியை துரிதமாக அமைக்குமாறு அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன பணித்துள்ளார். இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சரத் சந்திரசிறிக்கே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மஹியங்கனை வீதியில் வியானா கால்வாய்க்கு சமாந்தரமாக செல்லும் பாதையின் நீளம் 13 கிலோமீற்றராகும். அதில் 8 கிலோமீற்றர் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கும் 5 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் உரியதாகும். மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய 8 கீலோமீற்றர் நீளமான பகுதியில் 5 கிலோமீற்றர் தூரத்துக்கு பாதுகாப்பு வேலியை அமைக்கும் பணி மகாவலி பாதுகாப்பு அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது.

எஞ்சியிருந்த பகுதிகளில் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுவதை கவனத்திற் கொண்டு இந்த நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அரசதலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த கட்டுமானப்பணிகளுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள 26.5 மில்லியன் ரூபா நிதியை உடனடியாக வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற பிரதேசங்களிலும் பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு அரசதலைவர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ற-ரி5)

# இராணுவ அதிகாரியின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,ஏப்.28
தியத்தலாவையின் ககா கொல்லை என்ற இடத்தில் பேருந்து குண்டு வெடிப்பு தொடர்பாக விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரியின் விளக்கமறியல் தொடர்ந்து நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதேஎதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ருவன்குணசேக்கரஉத்தரவிட்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி ககா கொல்லை என்ற இடத்தில் பேருந்தில் குண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பில் ஏழு இராணுவத்தினரும் ஐந்து விமானப் படையினரும்பொதுமக்கள்ஏழு பேருமாக19 பேர்காயங்களுக்குள்ளாகினர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இராணுவ அதிகாரி ஜானக்க லெஸ்லி குமார சந்திரசேன என்பவரே இராணுவ முகாமிலிருந்து குண்டை கொண்டு வந்துவெடிக்கச்செய்தார் என உறுதிப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ந.ரி4)

# பரு. சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் உணவு கையாளும் நிலையத்திற்கு சீல்

பருத்தித்துற. ஏப். 28

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிபிரிவில்மேலும்ஒருஉணவு கையாளும் நிலையம் நீதிமன்றின் உத்தரவின் பிரகாரம் நேற்றுமுன்தினம் சீல் வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது

பொது சுகாதார பரிசோதகர்காளல் தாக்கல் செய்யப்பட்ட 22 வழக்குகளில் 17 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் இயங்கிய இந்த உணவு கையாளும் நிலையத்தை சீல் வைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து அதிகாரிகளால் சீல்வைக்கப்பட்டதெனத்தெரிவிக்கப்பட்டது.



இந்தவருடத்தில்இதுவரை5உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார விதிமுறைகளுக்குமுரணாகச்செயற்பட்டதால்நீதிமன்றின்உத்தரவின்பேரில் சீல் வைக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. சுகாதார மருத்துவ அதிகாரிபிரிவுக்குட்பட்டவணிகநிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் நடாத்திய திடீர் பரிசோதனையின் போதுதிகதிகாலாவதியானஉணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, பூச்சிமொய்த்தஉணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, சுகாதார விதிமுறைகளைக்கடைப்பிடிக்காது உணவுப் பொருள்களைக் கையாண்டமை சுகாதார விதிமுறைகளை மீறும் வகையில் நடமாடும் உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பில் புலோலி, பொலிகண்டி பொது சுகாதாரப் பரிசோதகரால்நீதிமன்றில்வழக்குகள்தாக்கல் செய்யப்பட்டன.

இதில் விசாரணை செய்யப்பட்ட 17 வழக்குகள் குற்றம் நிரூபிக்கப்பட்டு வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மொத்தமாக 2 இலட்சம் ரூபாதண்டம்விதிக்கப்பட்டதுளனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம். ஏப். 27

திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய சந்திர வழிபாடு நூல் வெளியீட்டுநிகழ்வு காரைநகர் துருவாசகர்பிட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு காரைநகர் பிரதேச செயலகர் ச. தனுஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிலாபம் சர்வதேச பாடசாலை ஸ்தாபகத் தலைவர் கிருஸ்ணன் கமலநாதன். சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சு. கலாதீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## சித்திரைக் கஞ்சியும் புராணப் படிப்பும்

யாழ்ப்பாணம். ஏப். 28

சித்திரைக்கஞ்சியும்சித்திரபுத்திரனார் புராணப்படிப்பும் அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலயத்தில்நாளைஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

# போரில்கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தத் தீர்மானம்

## கரவெட்டிப்பிரதேசசபையில்காரசாரவிவாதங்களின்பின்னர்முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.28

பிரதேசசபைஅமர்வுகளின்போதுமாவீரர்களுக்குஅஞ்சிலிசெலுத்தவேண்டும்என்பதைதீர்மானமாகக்கொண்டு வாருங்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருடைய கருத்தைத் தொடர்ந்து கரவெட்டிப் பிரதேச சபையில் பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் தாங்களும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்பதை அங்கே பதிவு செய்திருந்தனர். இறுதியில் போரில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலிப்பது என்று முடிவுசெய்யப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபை அமர்வு நேற்றுக் காலை சபைத் தலைவர் தங்கவேலாயுதம் ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபைக்குத் தேர்வான 31 உறுப்பினர்களில் 29 உறுப்பினர்கள் மாத்திரம் கலந்து கொண்டனர். இந்த அமர்வின் போதே குறித்த விடயம் தொடர்பில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

சபை அமர்வில் கருத்துத் தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் எஸ். புஸ்பவசந்தன்: சபைக் கூட்டங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இது தோடர்பாக சபை உறுப்பினர்கள் சிலருக்கும் தமிழ்க் கூட்டணி உறுப்பினர்களுக்குமிடையே கடும் வாக்குவாதம் இடம்பற்றது. இதன்போதுகருத்துரைத்ததவிசாளர் கடந்த கூட்டத்திலும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அதனை ஒரு பிரேரணையாகக் கொண்டு வாருங்கள் எனத் தங்களிடம் கேட்டிருந்தேன். அதனைநீங்கள்செய்யவில்லை. இனி மேலாவதுபிரேரணையாகக்கொண்டு வாருங்கள் என்றார். இதனைக் எழுத்தில் தரமுடியாது கோரிக்கையை ஏற்க வேண்டும் என புஸ்பகாந்தன் வாதப் பிரதிவாதம் செய்தார். இதற்கு தமிழரசுக் கட்சி உறுப்பினர் கே. பரஞ்சோதி. சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ச.இராமநாதன் மற்றும் வைத்தியநாதன் உள்ளிட்டோர் பதில் கருத்துக்களை முன் வைத்தனர்.

"நாங்கள் எல்லோரும் தமிழர்கள் தான். புலிகளுக்காக எதுவும் செய்வோம். ஆனால் உங்கள் தலைவர் சங்கரி ஒரு துரோகி என்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ச. இராமநாதன் தனது கருத்தைப்பதிவுசெய்தார். அதே சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த வைத்தியநாதன் கருத்துரைக்கும்போது நாங்களும்போராளிகள் தான். குறித்தவிடையத்தைப் பிரேரணையாகக் கொண்டு வாருங்கள் ஆதரிப்போம் என்றார். இவ்வாறு கூட்டணி உறுப்பினர்களுக்கும், ஏனையோர்களுக்கும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமிழர்விடுதலைக்கூட்டணி உறுப்பினருடைய குறித்த கோரிக்கையை பிரேரணையாக அல்லாமல் உடன் எடுத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தனர். இறுதியில் தவிசாளர் மாவீரர்கள் மட்டுமல்லாது போரில் உயிரிழந்த அனைவரையும்நினைவுகூர்ந்துஅஞ்சலிப்பது என்று தீர்மானிப்போம் என்றார். இதனை சபையினர் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இதே வேளை மண்டானில் உள்ள திண்மக்கழிவுக் களஞ்சியத்தில் அவற்றைத்தரம்பிரிக்கஉள்ளூரைச்சேர்ந்த பைக்கோவண்டிகளைவைத்திருக்கும் 4நிறுவனங்கள்மறுப்புத்தெரிவித்துள்ளனர். திண்மக்களஞ்சியத்தில்பெருவாரியாக போத்தல்கள் இருப்பதனால் அவற்றை அப்புறப்படுத்த பைக்கோ வண்டிகளின் ரயர்கள் பழுதடைந்து விடும் எனக் கூறி விட்டனர். திண்மக் கழிவைத்தரம்பிரிக்கசெயின்கொண்ட பைக்கோவண்டிதேவை. அவைவடக்கில் எங்கும் இல்லை. அநுராதபுரத்தில் மாத்திரம் உண்டு. அங்கிருந்து வாடகைக்கு அமர்த்த அந்த வண்டி இங்கு வந்து செல்லவே ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கேட்கிறார்கள். அதனை விட அவ் வண்டிகளின் வேலைக்கு மணித்தியாலத்துக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கேட்கிறார்கள். அது மிகக் கூடிய செலவாகும். ஆனால் பலாலியில் உள்ளஇராணுவத்தினர்தமதுசெயின் பைக்கோ மூலம் தரம் பிரிக்க ஆயிரம் லீற்றர் எரிபொருளையும் உணவுக்கான பணத்தையும் கேட்கிறார்கள். இதற்குமொத்தமாகஒரு இலட்சம்ரூபா தான்செலவாகும். ஆதலால்இராணுவ வாகனத்தைப்பெற்றுக்கொள்ளலாமா எனத் தவிசாளர் கேட்டார். இதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் புஸ்பகாந்தன் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். ஆனால் ஏனைய கட்சிகளைச்சேர்ந்தஅனைத்துஉறுப்பினர்களும் இராணுவ வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம் என ஏக மனதாகத் தெரிவித்தனர். இது தொடர்பாக கூட்டணி உறுப்பினர்களும் விமர்சனங்களை முன் வைத்தனர். இருப்பினும் திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்து அப்புறப்படுத்த இராணுவ செயின் பைக்கோவைப் பயன்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து தாம் தெரிவாகியுள்ள உபகுழுக்களின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாககூட்டணி உறுப்பினர் புஸ்பகாந்தன் தெரிவித்தார். இதற்கு உமக்கு நேரம் தருகிறேன். யோசித்து முடிவை மீள் பரிசீலனை செய்யுங்கள் எனத் தவிசாளர் புஸ்பகாந்தனுக்கு அறிவுறுத்தினார். (21.73)

## நினைவஞ்சலியும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம். ஏப். 28

ஈழத்தின் புகழ்பூத்த நாடகக்கலைஞராகிய அமரர் அ.பிரான்சிஸ்ஜெனத்தின் மறைவின் ஓராண்டுஅஞ்சலி நிகழ்வும் "ஈழத்து அரங்கில் பிரான்சிஸ் ஜெனம்தன்மையும்படர்க்கையும்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வும் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளபுனிதபெனடிக்ற் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைமாலை 3.30 மணிக்கு நாடக அரங்கக்கல்லூரியின்ஸ்தாபகர்குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இன்று முதல் பாலின் விலை அதிகரிப்பு

சாவகச்சேரி. ஏப். 28

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டறவுச் சங்கத்தினர் பாலின் கொள்வனவு விலையை இன்று சனிக்கிழமை தொடக்கம் 8 ரூபாவாக அதிகரித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாலின் விலை லீற்றர் 70 ரூபாவாக கொள்வனவு செய்யப்படுமெனவும் பண்ணையாளர்கள் தரமான பாலை சங்கத்தின் பால்சலையில் ஒப்படைத்து அதிகரித்த விலையினைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுவரை ஒரு லிற்றர் 62 ரூபாவாக கொள்வனவு செய்யப்பட்ட பால் எட்டு ரூபா அதிகரித்து இன்று தொடக்கம் 70 ரூபாவாக கொள்வனவு செய்யப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.28

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபபூஜையுடன் ஆரம்பமாகவுள்ளது.

## நூல்களின் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம். ஏப். 28

சுதுமலை சங்களை சமூக செயற்பாட்டாளர்கள் நடத்தும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் மொழிபெயர்த்த சுதந்திரம் (தென்னாசியக் கவிதைகள்), மை சோய்ஸ் ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் புராண படன வித்தகர் செ. கந்தையா அரங்கில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஐயாத்துரை சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன் கந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஏப். 28

யாழ் நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பாதைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் விளம்பரப்பலகைகளைஅகற்றிமக்களின்சிரமங்களைநீக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ் மாவட்ட போக்குவரத்து பொலிஸார் யாழ் வணிகர் கழகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந் நடவடிக்கைகளிலிருந்து தவறும் வர்த்தகர்களின் பொருள்கள் மற்றும் விளம்பரப்பலகைகள் பொலிஸ் நிலையத்திற்குஎடுத்துச்செல்லப்படுவதுடன்அவர்களுக்குஎதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கூடிய கவனம் எடுத்து தங்கள் விற்பனை பொருள்களையும், விளம்பரப்பலகைகளையும் அகற்றி ஒத்துழைப்பு வழங்கும்படி யாழ் வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.




## வெசாக்விழாவுக்கான முன்னாயத்தங்கள்

யாழ்ப்பாண பாதுகாப்பு படை தலைமையகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணபட்டினமும்தர்மஎழுச்சியும்'வெசாக்விழாவுக்கானமுன்னாயத்தங்கள் நடைபெறுகின்றன.
யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தின் முன்பகுதியில்நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்1ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## மாநகர முதல்வர் தொடர்பில் மாகாண முதல்வருக்கு மனு

### யாழ். மாநகர சபையின் காங்கிரஸ் உறுப்பினர்கள் வழங்கினர்

யாழ்ப்பாணம். ஏப்.28



யாழ்ப்பாண மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் அதிகார துஷ்பிரயோகம் செய்து வருகின்றார்என்றுமாநகர சபையின் தமிழ் தேசியமக்கள்முன்னணியின் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

அது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி நேற்று அவர்கள் மனு ஒன்றையும் முதல்வரிடம் கையளித்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் இரண்டாவது சபைக் கூட்டம் நடைபெற்ற போதும் சபையின் நிதிக் குழு உட்பட எந்தவொரு சபையின் உபகுழுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. சபையின் எந்தவொரு அனுமதியுமின்றி நிதிக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. சபையின்எத்தகைய அனுமதியுமின்றிவீதிச் சீரமைப்புக்கான கேள்விப்பத்திரக் கோரல் பத்திரிகையில் முதல்வரின் பெயரில் வெளியாகியுள்ளன. இந்தச் செயற்பாட்டுகளைமாநகரமுதல்வர்தன்னிச்சையாகக்கையாண்டுள்ளார் என்பதனைத் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம் என்றும்

மாநகர சபை முதல்வரால் ஒப்பமிடப்பட்டும் மாநகர சபை இலச்சினையுடனான கடிதத் தலைப்பில் "மாநகர முதல்வரின் பிரத்தியேக இணைப்பாளர்" நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச்செயற்பாடானது மாநகர சபைசட்ட விதிகளுக்குமுரணானது என்பதுடன் மாநகரமுதல்வர் தனதுபதவிக்கான அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. இவற்றைக்கருத்திற்கொண்டுஇவற்றுடன்தொடர்புடையவர்கள்மீது உரிய விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து சபையின் செயற்பாடுகளைச்சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டுநடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். என்றும் முதலமைச்சருக்கு கொடுக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் மநகர முதல்வர் ஆர்னோல்ட்டுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது உப குழுக்கள் அமைப்பதற்குச் சிறப்பு அமர்வு ஏற்பாடு செய்வதால் அதற்குச் செலவு ஏற்படும் என்பதற்காக எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள மாநகர சபையின் அமர்வில் குறித்த விடயத்தைக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. என்றும் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகங்களுக்குத்தெளிவுபடுத்தப்படும் - என்றார். (21.8.37)

## நீர்வேலிகந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம் ஏப் 28
நீர்வேலி கந்தசுவாமி கோவில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 6மேணிக்கு வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து 8.30மணிக்கு சுவாமி தேரில் அலங்கரித்து வீதிவலம் வருதலும் இடம்பெறும். தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் திங்கள்கிழமை இரவு 7மணிக்கு திருக்கல்யாண திருவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

### விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர்

# மண் அகழ்வை உடன் நிறுத்துவதோடு அகழ்ந்த மண்ணை மீளத் தரவேண்டும்

### பிரதேச மக்கள் கோருகின்றனர்



யாழ்ப்பாணம், ஏப். 28

அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி, நாவலடிப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் முன்னர் அகழ்ந்து எடுத்து ஆயுதக்கிடங்கு அமைத்த மண், மீண்டும் ராணுவத்தினரால் அகழப்படுகிறது. அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். ஏனைய இடங்களில் இராணுவத்தினர்மண் அகழ்வதும்தடுக்கப்படவேண்டும். முன்னர் அகழ்ந்தெடுக்கப்பட்டதொன்கணக்கானமண்ணைமுன்னர்அகழ்ந்தெடுத்த பகுதிகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோருகின்றனர்.

குறித்த பகுதிகளில் மண் அணைக்கட்டின்மண்ணை இராணுவத்தினர்அகழ்ந்து சென்றமைக்கு மக்கள் எதிர்ப்புதெரிவித்தசம்பவம் சில நாள்களுக்கு முன்னரும் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

பொதுமக்களின் காணிகளிலும், கடற்கரையோரத்தை அண்மித்துள்ள காணிகளிலிருந்தும், விவசாய நிலங்களிலிருந்தும் மண்ணை அகழ்ந்து தமது பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தினர்.

அவ்வாறுபலகிலோமீற்றர் நீளத்துக்குமண் அகழப்பட்டிருக்கிறது. அந்த இடங்கள் அதலபள்ளமாகக் காணப்படுகின்றன. அந்தஇடத்தை மீளநிரப்பிச்சீரமைக்கமுன்னர் அகழ்ந்தெடுத்த மண்ணை மீளவும் அந்த இடங்களில் போடவேண்டும். அதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மயிலிட்டிஆயுதக்கிடங்கை இடம்மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கான பணிகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

ஆயுதக் கிடங்கின் பாதுகாப்புக்காகமக்களின் விவசாய நிலங்களில் உள்ள மண் அகழ்ந்து பாதுகாப்புஅரண் அமைக்கப்பட்டது. அந்த மண்ணைசிலநாள்களுக்கு முன்னர் இராணுவத்தினர் டிப்பர்களில் அகழ்ந்து சென்றுள்ளனர். விடுவிக்கப்பட்ட பகுதியில்விவசாயம்செய்ய ஆரம்பிக்கும்போது மண் தேவைப்படும்.

ஆகவே அந்த மண்ணை அகழ வேண்டாம் என்று மக்கள் கோருகின்றனர்.

"நான்கு டிப்பர்களில் மண்ணை ஏற்றிச்சென்றுவிட்டனர். இதனை அறிந்த ஊர்மக்கள் அந்த இடத்தில் ஒன்றுகூடிஇராணுவத்தினருடன் முரண்பட்டனர்.

வீதியை மறித்து எங்களுக்கு மேலாக மண்ணை ஏற்றிச்செல்லுமாறும் போராடினர்" என்று பிரதேசத்தச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

அதன்பின்னர், வலி. வடக்கு பிரதேச செயலாளருக்குத் தகவல் வழங்கப்பட்டது. வலி. வடக்கு தவிசாளரும் அந்த இடத்துக்கு விரைந்தார்.

இராணுவப் பொறியியலாளர் அந்த இடத்துக்கு வந்து வந்து இனி இவ்வாறான சம்பவம் நடைபெறாதென உறுதியளித்த பின்னரே மக்கள்எதிர்ப்பைக்கைவிட்டனர்.

பிரதேசசெயலகத்தின் தலையீட்டையடுத்துமண்அகழ்வு கைவிடப்பட்டதுஎன்றுஅங்குள்ளவர்கள் மேலும் தெரிவித்தனர். (4.7)

## சாரணியப் பவளவிழா மலருக்கான தகவல்கள் கோரப்பட்டுள்ளன

யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் சாரணியப் பவளவிழா மலருக்கான கட்டுரைகள், ஒளிப்படத் தொகுப்புக்கள், வரலாற்றுத் தகவல்களை தந்துதவுமாறு கல்லூரியின் பழைய மாணவர்கள், மற்றும் நலன் விரும்பிகளிடம் கோரப்பட்டுள்ளது.

குறித்த தரவுகளை எதிர்வரும் வைகாசி மாதம் 08 ஆம் திகதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (21)

### வலி. கிழக்கு பிரதேச சபையின்

# உப தவிசாளருக்கு கொலை மிரட்டல் என்று பொலிஸில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 28

வலி. கிழக்கு பிரதேச சபையின் உபதவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட மகேந்திரலிங்கம் கபிலனை வெட்டிக் கொலை செய்வதாக அலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றுநேற்றுஅச்சுவேலிப்பொலிஸில் முறையிடப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல்10மணிஅளவில். அலைபேசி மூலம் தொடர்புகொண்ட நபர் தன்னை வெட்டிக் கொலை செய்வதாக அச்சுறுத்தல் விடுத்து, நாகரிகம் அற்ற முறையில் பேசினார் என்றுமுறைப்பாட்டில்குறிப்பிட்ட கபிலன் அச்சுறுத்தல் செய்த சந்தேகநபரின் பெயர் குறித்தும் பொலிஸாருக்குத் தெரியபடுத்தியுள்ளார். அவரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அச்சுவேலி தெற்கு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிவலி. கிழக்குபிரதேசசபையின் உபதவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் மகேந்திரலிங்கம் கபிலன். சபையின் கன்னி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சில தனிப்பட்ட நபர்கள் அதிருப்தியடைந்திருந்ததாகவும், பயிற்றோலை வீதியின் வெள்ளநீர் வடிகால் அமைப்பைச் சீர் செய்வது தொடர்பாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை எதிர்க்கும் முகமாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக உபதவிசாளர் ம. கபிலன் தெரிவித்தார். (21.11)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 28
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினரின் ஏற்பாட்டில்இஸ்ரேலின் 70 ஆவது ஆண்டு நிறைவும் பலஸ்தீனத்தின் இருப்பும் என்ற தலைப்பிலான சிறப்பு கலந்துரையாடல்தேசியகலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் ( இல. 62, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி ) நாளை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கருத்துரையை இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையின்மனிதவள மேம்பாடும் அபிவிருத்தி பிரிவின் முன்னாள்பிரதிச்செயலாளர் சி. கிருஸ்ணானந்தன் ஆற்றவுள்ளார்.

## யாழ்...

பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது. மீண்டும் ஆரம்பமாகி உள்ள வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசத்தை உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவரும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"கடந்த சில மாதங்களாக அடங்கியிருந்த வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடிகள் மீளவும் ஆரம்பித்துள்ளன. அவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட அனுமதிக்க முடியாது. அவர்களைக் கட்டுப்படுத்த, குற்றங்களைத் தடுக்க இறுக்கமான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் தீவிரப் படுத்தவேண்டும். அதற்காகவே பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் மறுஅறிவித்தல்வரை காலவரையறையின்றி நிறுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸார் வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கேற்ப தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தட்டும்" என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொக்குவிலில் நேற்றுமுன்தினம் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஒருவர் வீடு புகுந்து வெட்டியதில் ஒருவர் படுகாயமடைந்தார். வேறு பல இடங்களிலும் சில வாரங்களாக வாள்வெட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. வீடு புகுந்து தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் மேற்குறித்த உத்தரவை மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் விடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பிராந்தியம், காங்கேசன்துறைப் பிராந்தியம் என்று இரண்டு பிராந்தியங்கள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் கோப்பாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சாவகச்சேரி, கொடிகாமம், மானிப்பாய், சுன்னாகம், வட்டுக்கோட்டை ஆகிய 9 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் பொறுப்பாக யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொறுப்பாக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4,26)

## அரசமைப்பின்...

கட் சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டன.

நிறைவேற்று அதிகார முறைமையை முழுமையாக இல்லாதொழிக்க வலியுறுத்தும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை எதிர்வரும் 8ஆம் திகதி தனிநபர் பிரேரணையாக ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி ஆகியன மக்கள் விடுதலை முன்னணியின் யோசனைக்கு ஆதரவளிப்பதில்லை என்று அறிவித்துள்ளன. எனினும், அனைத்துத் தரப்புகளின் ஆதரவையும் மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கோரியுள்ளன.

முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக சிறு பான்மையினக் கட்சிகள் கொழும்பில் நேற்றுமுன்தினம்கூடின. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசனின் அமைச்சில் சந்திப்பு நடைபெற்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொதுச்செயலர் நிசாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஈ.பி.டி.பியின் சார்பில் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ், ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான எஸ்.இராஜேந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு உத்தேச 20 ஆவது திருத்த வரைவு சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது.

"அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை மாற்றம் உட்பட ஏனைய விடயங்களும் உள்ளடங்கிய வகையில் புதியதொரு அரசமைப்பு அவசியம் என்று வலியுறுத்தப்படும் நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் யோசனை ஒரு விடயத்தை மட்டுமே மையப்படுத்தியதாக உள்ளது. அதை ஆதரிப்பது ஏற்புடையதல்ல" என்று கூட்டத்தில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

"நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையே சிறுபான்மையின மக்களின் பலத்தைக் காட்டுவதற்கும், பேரம் பேசுவதற்குமான வாய்ப்பாக இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட விடயங்களைக் கருதி நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஆதரவளித்திருந்தோம். அந்த நோக்கங்கள் நிறைவேறாது நிறைவேற்று அதிகார முறையை முற்றாக ஒழிப்பதற்கு ஆதரவளிக்க முடியாது" என்றும் சந்திப்பில் பங்கேற்ற பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது சம்பந்தமாக ஏனைய சில தரப்புகளுடன் பேச்சு நடத்துவது என்றும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## புகையிலைத்...

யிலைச் செய்கைக்கான தடையை நீக்குமாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேச சபையில் இந்தத் தீர்மானம் நேற்று எடுக்கப்பட்டது. அதனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்புவது என்றும் தீர்மானம் எட்டப்பட்டது.

சபையின் சிறப்பு அமர்வு தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2020 ஆம் ஆண்டு போதையற்ற நாடு என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக புகையிலைச் செய்கை நிறுத்தப்படவுள்ளது. ஆனால் இதற்கான மாற்றுப் பயிர் தொடர்பாக தெளிவான நடவடிக்கை இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. அதனால் புகையிலைச் செய்கையாளர்கள் கடும் பாதிப்பை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கைக்கான பயிர் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டு புகையிலைச் செய்கைக்குக் காலநீடிப்புத் தரவேண்டும், தடை பிற்போடப்படல் வேண்டும் என்று தீர்மானம் முன்வைக்கப்பட்டு அது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (4,7)

## 20 ஆவது...

மைப்பு வரவேற்காது என்று தெரிகின்றது.

நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்கிற கட்சியின் கொள்கையில் மாற்றம் இல்லை என்றபோதும் அரசியல் தீர்வு, தேர்தல் முறை மாற்றம் என்பவற்றைவிட்டுவிட்டு அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை மட்டும் ஒழிப்பதை ஏற்க முடியாது என்று தெரிவித்தார் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

"அரசியல் தீர்வு, நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிப்பு, தேர்தல் முறை ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் அரசமைப்புப் பேரவை ஏற்கனவே ஆராய்ந்தது. இதில் ஒன்றை மாத்திரம் எடுத்துச் செய்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. முக்கியமான பிரச்சினைகளுக்குச் சேர்த்தே தீர்வு காணவேண்டும். அதற்காக நாங்கள் இதனை எதிர்க்கின்றோம் என்று சொல்ல முடியாது" என்கிறார் சுமந்திரன்.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்காக 20ஆவது திருத்தச் சட்டவரைவு ஒன்று நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளமை தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று உதயன் கேள்வி எழுப்பியது அதற்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

20ஆவது திருத்தச் சட்டவரைவில் நிறைவேற்று அதிகார முறைமை ஒழிப்பைப் பற்றி மாத்திரம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் 2014ஆம் ஆண்டு மாநாட்டிலேயே நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. எமது அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை.

1978ஆம் ஆண்டுதான் நிறைவேற்று அரச தலைவர் முறைமை கொண்டு வரப்பட்டது. ஆனால் மிகப் பெரிய பிரச்சினையான இனப் பிரச்சினை 1948ஆம் ஆண்டிலிருந்தே தொடர்கின்றது. இனப் பிரச்சினையால்தான் பல லட்சம் பேர் உயிரிழந்தனர். நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையால் யாரும் உயிரிழக்கவில்லை. அதற்காக நிறைவேற்று அதிகார முறைமையை அகற்றவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை. அதை ஆதரிப்போம் என்று சொன்னாலும் அதைத் தனித்துச் செய்வது சரியானதல்ல.

அரசமைப்பு பேரவையில்கூட நிறைவேற்ற அதிகார முறைமை ஒழிப்புக் குறித்துப் பேசப்பட்டது. அரசியல் தீர்வு, நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழித்தல், தேர்தல் முறை ஆகிய மூன்றும் ஒரேயடியாக நடைபெற்றாக வேண்டும். இதில் ஒன்றை மாத்திரம் எடுத்துச் செய்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது. முக்கியமான பிரச்சினைகளுக்குச் சேர்த்தே தீர்வு கண்டாக வேண்டும் -என்றார். (உ-5)

## பட்டதாரிகள்...

ளும் இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அரச தலைவர், மற்றும் தலைமை அமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதில் வடக்குக் கிழக்குப் பட்டதாரிகளுக்கு போர் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக கூடுதல் காலம் செலவிட நேர்ந்துள்ளமையால் ஆகக்கூடிய வயதெல்லையை 35 இலிருந்து 40 வரை அதிகரிக்கவேண்டும்.

மேலதிக மாற்றுத் தொழிலாண்மைக் கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வடக்குக் கிழக்குப் பட்டதாரிகளுக்கு போர் காரணமாகக் கிடைக்காமல் போனமையால் அவர்கள் ஏனைய மாவட்டப் பட்டதாரிகளுடன் சமமாகப் போட்டிபோட்டுக் கூடுதல் புள்ளிகள் பெறமுடியாத நிலைஉள்ளது. வடக்குக் கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வியாபார முயற்சிகள் அதிகம் இல்லாமை காரணமாக அந்தத் துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் பெறும் சந்தர்ப்பம் இல்லாமையினால் அவர்கள் அரச தொழில் வாய்ப்புக்களையே எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் வேலை வாய்ப்பின்மை தேசியமட்ட அளவை விட அதிக அளவில் காணப்படுவதோடு, இந்தப் பிரதேசங்கள் கல்வித் துறைமற்றும் அபிவிருத்தியிலும் ஏனைய மாவட்டங்களைவிட மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த நிலையில் தேசியமட்டத்தில் புள்ளிகளை நிரைப்படுத்தித் தெரிவுகளை மேற்கொண்டால், வடக்குக் கிழக்குப் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் குறைந்து விடுமென்பதால் அவர்கள் மிகுந்த பாதிப்பை அடைவர்.

அதனால் புள்ளிகள் மாவட்ட மட்டத்தில் நிரைப்படுத்தப்பட்டு விகிதசம அடிப்படையில் சகல மாவட்டங்களுக்கும் சமமான வாய்ப்பை வழங்கும் பொருட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சகல மாவட்டங்களிலிருந்தும் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படக்கூடியநிலமை உருவாக்கப்படுவதால் சகலருக்கும் நியாயமும் சமவாய்ப்பும் கிடைக்கும் என்றுள்ளது. (உ-21)

## கிம் ஜோங்...

ஜெ இன் இருவரும், எல்லைக் கிராமமான பான் முன்ஜியோமில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

1953ஆம் ஆண்டு கொரியத் தீபகற்பப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், வட கொரிய அதிபரொருவர், தென்கொரிய எல்லைக்குள் சென்று சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்தது.

தென்கொரியாவும் வடகொரியாவும் பரம எதிரி நாடுகளாகவே கடந்த டிசெம்பர் வரை இருந்தன. மூன்றாம் உலகப்போர் சாத்தியமானால் அதன் தோற்றுவாயாக கொரியத் தீபகற்றம் இருக்கும் என்று குறிப்பிடப்படும் அளவுக்கு இருநாடுகளும் பகைமை பாராட்டி வந்தன. ஆனால், தென்கொரியாவில் அண்மையில் முடிந்த குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றதை அடுத்து ஏற்பட்ட சமரசம், இரு நாடுகளின் தலைவர்கள் நேரில் சந்தித்துப் பேசும் அளவுக்கு அனைத்தையும் மாற்றிப் போட்டுள்ளது. ஆறு தசாப்தத்துக்கும் மேலான பகைமை வெறும் நான்கு மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையானது பன்னாட்டுச் சமூகத்தின் புருவங்களை உயர்த்தியுள்ளது. (ம)

## புத்தரின்...

ளின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன என்று இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புத்தரின் புனித தாதுப் பொருள்கள் உயரிய, மேலான வணக்கத்துக்கு உரியவை. இவை எங்கு காணப்படுகின்றனவோ, எங்கு கொண்டு செல்லப்படுகின்றனவோ அங்கெல்லாம் வனப்பும், செழிப்பும் நின்று நிலவும் என்பது உலகம் தழுவிய புத்த சமயிகளின் நம்பிக்கையும், விசுவாசமும் ஆகும். கண்டி தலதா மாளிகையில் புத்த பகவானின் புனித தாது பொருள்களில் ஒன்றான புனிதப் பல் வைக்கப்பட்டு உள்ளது. இதனால்தான் தலதா மாளிகை மிகுந்த உயர்ந்த சிறப்பு பெற்று விளங்குகின்றது. கண்டி மாவட்டமும் வனப்பும், செழிப்பும் நிறைந்ததாக காணப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மண் வனப்பும், செழிப்பும் நிறையப் பெற்று மிளிர வேண்டும், யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை செழுமையும், செம்மையும் பெறவேண்டும் என்கிற ஒரேயொரு காரணத்துக்காக புத்த பகவானின் ஒரு தொகை புனித தாது பொருள்களை யாழ்ப்பாண மண்ணுக்கு வரலாற்றில் முதல் தடவையாகக் கொண்டு வந்து தரிசனத்துக்கு வைக்க உள்ளோம்.

நாளை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரை வீரசிங்கம் மண்டபத்தில் இவை மக்களின் பார்வைக்கு வைக்கப்படும். இவற்றைத் தரிசித்து யாழ்ப்பாண மக்கள் அனைத்து நன்மைகளையும் பெற்று உய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கின்றோம் -என்றார். (உ-5)

## கொக்குவிலில்...

இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் அறுவருமாக எண்மர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில், தெல்லிப்பழையைச் சேர்ந்த 25 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஏற்கனவே பொலிஸாரை வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டவர் என்று விசாரணைகளில் தெரியவந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொக்குவிலில் நேற்றுமுன்தினம் ஆவா குழுவைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் ஒருவர் வீடு புகுந்து இளைஞர் ஒருவர் மீது வாளால் வெட்டினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21,8)

## மைத்திரி...

அண்மையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு லண்டனில் நடந்தது. அதில் கலந்துகொள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சென்றிருந்தார். அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவும் சென்றிருந்தார். எனினும் இருவரும் நேருக்குநேர் முகங்கொடுத்துப் பேசவில்லையென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தொடர்பாடல் முடக்கத்தால் பொதுநலவாய உச்சிமாநாட்டுக்கு வருகைதந்த உலக நாடுகளின் தலைவர்களுக்கும் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்புகளைக்கூட ஒழுங்கு செய்ய முடியாமற்போனதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### குற்றத் தீர்மானம்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான குற்றத் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முயன்றமைக்குப் பின்னணியில் சட்ட ஆலேசனைகளை வழங்கியவர் மாரப்பனவே என்கிற சந்தேகம் அரச தலைவருக்கு ஏற்பட்டுள்ளமையே இந்தச் சிக்கலுக்குக் காரணம் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மூத்த சட்ட வல்லுநரான அமைச்சர் திலக் மாரப்பன இதற்கான ஆலோசனைகளை வழங்கியிருந்தார் என்ற உளவுத் தகவல் மைத்திரியின் காதுகளுக்குச் சென்றதை அடுத்தே அவர் நாடாளுமன்ற அமர்வை ஒத்தி வைத்தார் என்றும் கூறப்படுகின்றது. (உ-5)

## சமையல்...

இதன்படி, 12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு 245 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயுவின் விலை 1676 ரூபா என நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (21)

# உயிரைக் கொடுத்தாவது நாங்கள் 20ஆவது திருத்தத்தை முறியடிப்போம்

## தேசிய சுதந்திர முன்னணி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 28

அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை முழுமையான அதிகாரம் கொண்டதாக மாற்றும் மறைமுக நோக்கத்திலே நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாமலாக்கும் 20ஆவது திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவர முயற்சிக்கின்றது. உயிரைத் தியாகம் செய்தேனும் அதனைத் தோற்கடிப்போம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் கட்சிப் பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாமலாக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைத் தனிப்பட்ட தீர்மானமாக மேமாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. ஜனநாயகத் தீர்மானமாக இதனைக் கொண்டு வருவதுபோல் தெரிவித்துக்கொண்டாலும் இதன் நோக்கம் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் பிரிவினைவாதிகளின் தேவையை நிறைவேற்றுவதாகும். முழுமையான கூட்டாட்சி முறையை ஏற்படுத்தி நாட்டைத் துண்டங்களாகப் பிரிப்பதே பிரிவினைவாதிகளின் நோக்கமாகும். மைத்திரி - ரணில் அரசு முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்புச் சபையாக மாற்றியமைத்து அதனூடாகக் கூட்டாட்சி முறையை கொண்டுவரவே திட்டமிட்டிருந்தது. பெப்ரவரி 10ஆம் திகதி மக்கள் அரசுக்கு வழங்கிய தீர்ப்புக் காரணமாகப் புதிய அரசமைப்புத் தயாரிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளதுடன் அரசுக்குள்ளும் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. அதனால் புதிய அரசமைப்பின் ஊடாக கூட்டாட்சியை ஏற்படுத்த முடியாது என்பது பிரிவினைவாதிகளுக்கும் தெரியும். மைத்திரி - ரணில் அரசுக்கும் தெரியும்.



புலம்பெயர் அமைப்புகளும்பிரிவினைவாதிகளும் தங்கள் நோக்கத்தை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள இதன்பொறுப்பைத் தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு வழங்கியுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணி நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாமலாக்குவதாகத் தெரிவித்துக்கொண்டு அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தினூடாக வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை முழுமையானஅதிகாரம்கொண்டதாக மாற்றும் மறைமுக நோக்கத்தில் 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது.

13ஆம் திருத்தத்தினூடாக வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தில் கூட்டாட்சி முறை ஏற்படாமல் தடையாக இருப்பது நிறைவேற்று அரச தலைவர் முறைமையாகும். அந்தத் தடையை இல்லாமலாக்கும் பொறுப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவினால் முடியாமல் போனதைச் செய்யவே மக்கள் விடுதலை முன்னணி செய்ய முயற்சிக்கின்றது. இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ரோவின் ஓர் அங்கமாகவே இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணி செயற்படுகின்றது. நாட்டின் ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாமலாக்கும் 20ஆவது திருத்தத்தை முடியுமானால் மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரட்டும்.

நாங்கள் எமது உயிரைத் தியாகம் செய்தேனும் அதனைத் தோற்கடிப்போம். மக்கள்விடுதலைமுன்னணி கொண்டுவர இருக்கும் தீர்மானத்தைத் தோற்கடிக்கும் முதல் கட்டமாக, அதுதொடர்பான பொதுமக்களைத் தெளிவூட்டும் துண்டறிக்கைகளைஎதிர்வரும்3ஆம்திகதி நாடு முழுவதும் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (5,31)

# நாடாளுமன்றத்துக்குள்ளேயே 20ஆவது திருத்தத்தை கொண்டுவர விடக் கூடாது

## பொங்குகிறார் பெங்கமுவே நாலக தேரர்

கொழும்பு, ஏப். 28

நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பு உருவாக்கம் மற்றும் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாமல் செய்யும் விவகாரம் தொடர்பில் கூட்டு எதிரணியினர் பொறுப்பற்ற விதமாகவே செயற்பட்டு வருகினறனர். மக்கள் விடுதலை முன்னணியின், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும், 20ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்ற வளாகத்துக்குள்ளேயே கொண்டுவர அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு தேசிய ஒருங்கமைப்புப் பேரவையின் பேச்சாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கூட்டு அரசில் மக்கள் விடுதலை முன்னணி தமது அரசியல் நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தி வருகின்றது. தற்போது நிறைவேற்று அதிகாரம் மிக்க அரச தலைவர் முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளமையானது தமது கட்சியின் நலன் கருதியதாகும். தேசிய நலன் கருதி அல்ல. மக்கள் விடுதலை முன்னணியின் இந்தக் கருத்தைத் தற்போது பல கட்சிகளும் ஆதரித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் கூட்டு அரசிலிருந்து அரச தலைவரை விட அதிகாரமிக்கவராக உருவாக்கவேண்டும்என்ற காரணத்தால்அவர்கள் ஆதரவு வழங்க முன்வந்தனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி கிடைத்ததன் பின்னர் முன்னாள் அரச தலைவரும், அவரது கட்சியின் உறுப்பினர்களும் நாட்டுக்கு எதிராக கூட்டு அரசு கொண்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பில் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவிக்காமல் தமது கட்சியின் நலனை மாத்திரம் கருத்திற்கொண்டு செயற்படுகின்றனர். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் காரணமாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு மீண்டும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலமை காணப்படுகின்றது. 1978ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை காலமும் 19அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதில் 18 அரசியல் திருத்தங்களை ஐக்கிய தேசியகட்சியினர்கொண்டு வந்தனர். இந்தத் திருத்தங்களில் 13ஆவது அரசியல் திருத்தமும், 19ஆவது திருத்தமும் தொடர்ந்து அரசுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் திருத்தங்களாகவே காணப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை இல்லாமல் செய்தால் எதிர்காலத்தில் பெரிய விளைவுகள் தோற்றம் பெறும்.

அரச தலைவரின் இந்தச் சிறப்பு அதிகாரத்தைக் கொண்டே 30ஆண்டு காலமாக இடம் பெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. மக்கள் விடுதலை முன்னயிணின் நோக்கம் நிறைவேற்றப்பட்டால். புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும். மக்கள் விடுதலை முன்னயிணின் இந்த யோசனைக்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் செயற்பட வேண்டும். நாடாளுமன்றத்துக்கு இந்தத் தீர்மானத்தினைக் கொண்டு வரக் கூடாது. சில வேளை கொண்டு வந்தால் தலைமை அமைச்சர் தனது சூழ்ச்சிகளின் ஊடாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி விடுவார் - என்றார். (5.31)

# வெளிநாட்டவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி பம்பலப்பிட்டியில் கொள்ளை

## இளம்பெண் கைது

கொழும்பு, ஏப். 28

கனடா, ஆஸ்திரேலியாவிலிருந்து விடுமுறைக்காக இலங்கை வந்து, பம்பலப்பிட்டிப் பகுதியில் தொடர்மாடி குடியிருப்பொன்றில் தங்கிருந்த இருவரைக் கத்தி முனையில் அச்சுறுத்தி பணம், தங்கச் சங்கிலி மற்றும் பெறுமதி வாய்ந்த கமரா உள்ளிட்ட உபகரணங்களைக் கொள்ளையிட்ட இளம்பெண் உள்ளிட்ட நால்வரைப் பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக இளம்பெண்ணின் தொலைபேசி இலக்கத்தை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

55 மற்றும் 57 வயதுகளை உடைய கனடா, ஆஸ்திரேலியக் குடியுரிமையைக் கொண்ட ஆண்கள் இருவர் தமது விடுமுறையைக் கழிக்க இலங்கை வந்து பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்பொன் றில் தங்கியிருந்தனர். கடந்த 22 ஆம் திகதி இருவரும் கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இசைக் கச்சேரியொன்றைப் பார்வையிடச் சென்றனர். அவர்களுக்கு 24 வயதான இளம்பெண் அறிமுகமாகியுள்ளார்.

இளம்பெண்ணுடன்தொலைபேசிஎண்களைப்பறிமாறிக் கொண்டுள்ள இருவரும், தமது தோழியாக அறிமுகமான இளம்பெண்ணுக்கு இரவு உணவு விருந்தொன்றுக்காகத் தமது தொடர்மாடிக்குடியிருப்புக்கு வரவும் அழைப்பு விடுத்தனர்.

அவர் தொடர்மாடிக்கு இரவு உணவுவிருந்தொன்றுக்குச் சென்றார். அந்தத் தொடர்மாடிக்குச் சென்று இளம்பெண் இருந்த போது, அந்த குடியிருப்புக்கு மேலும் இருவர் வந்தனர். அவ்விருவரும் தம்மைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என அறிமுகம் செய்துகொண்டு குடியிருப்புக்குள் நுழைந்துள்ளதுடன், பின்னர் கத்தியைக் காட்டி அச்சுறுத்தி பணத்தைக் கொள்ளையிட்டுவிட்டு இளம்பெண்ணுடன் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பில் பம்பலபிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டாளர் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட வாக்கு மூலத்தில் தமக்குத் தோழியாக அறிமுகமான 24 வயது இளம்பெண்ணின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் அந்த இலக்கத்தை வைத்து விசாரணைகளை ஆரம்பித்தனர். இளம்பெண்ணைப் பொரளை சஹஸ்புர பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்ததுடன் அவருடன் இணைந்து கொள்ளையில் ஈடுபட்டதாக கூறப்படும் அவரது கணவன் எனக் கூறப்பட்ட நபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளம்பெண் பாதையோர விபசார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர் என்றும், அவரை விபசார குற்றச் சாட்டுக்காக ஏற்கனவே தாம் கைது செய்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். (5-71)

# 3டி கமராவைப் பயன்படுத்தி கொழும்பில் சத்திரசிகிச்சை

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் முதல் முறையாக 3டி கமராவைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.



தைரொய்ட் கட்டியை நீக்கும் சத்திரசிகிச்சை கொழும்பு தேசிய வைத்தியசாலையில்நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

தொண்டை, காது, மூக்கு தொடர்பான சிறப்பு வைத்தியர் ரிஸ்னி சகாப் உட்பட மருத்துவக் குழுவினால், பண்டாரவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான பெண்ணுக்கே இந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. வாயின் ஊடாகக் கமராவை நுழைத்து, வெட்டாமல் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 3டி கமரா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் முதன் முறையாக இந்தச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. (5)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை நியாயப்படுத்துகிறார் ஆளுநர்

கொழும்பு, ஏப். 28

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, ஏனைய பல நாடுகளிலும் இதே நிலையே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

"இந்த ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு 2.9 வீதத்தினால் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாவின் மதிப்பும், 4.8 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.
பிலிப்பைன்ஸ் நாணயத்தின் மதிப்பு, 4.4 வீதத்தினாலும், ஆஸ்திரேலிய டொலரின் மதிப்பு 2.7 வீதத்தாலும், இந்தோனேசிய நாணயத்தின் மதிப்பு 2.4 வீதத்தாலும் சரிவு கண்டுள்ளன.
இவ்வாறு நாணய மதிப்புக் குறைந்துள்ளதால், வெளி



நாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் போது அதிக ளவு நிதியைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்கள்.
ஆனால், அப்படியல்ல. நாங்கள் அமெரிக்க டொலரில் தான் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிறோமே தவிர, இலங்கை ரூபாவில் அல்ல" என்றும் தெரிவித்தார்.
இதுபற்றிக் கருத்து வெளியிட்ட மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, பொருளாதாரம் மற்றும் கணிதம் தொடர்பாக சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் இப்படித் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள் எனக் குறிப்பிட்டார். (5)

## ஆபத்தான போதைப்பொருள் இலங்கையில்

கொழும்பு, ஏப். 28
உலகின் மிக ஆபத்தான போதைப்பொருள் இலங்கையில் சிக்கியுள்ளது.
பிலெக் மெண்டி எனப்படும் இந்தப் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர் உள்ளிட்ட மூன்று பேர், ஆயத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.
தலங்கமப் பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.
பிலெக் மெண்டி போதைப்பொருள் இலங்கையில் கண்டுபிடித்த முதல்



சந்தர்ப்பம் இதுவாகக் கருதப்படுகின்றது. 82 கிராம் பிலெக் மெண்டி போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.
அதன் பெறுமதி 12 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. (5)



# கொழும்பில் ஆடம்பர வணிக வளாகம்

## இலங்கையும், சீனாவும் இணைந்து அமைக்கின்றன

கொழும்பு, ஏப். 28
கொழும்பு நகரில், மிகப்பெரிய ஆடம்பர வணிக வளாகத்தைக் கட்டும் பணிகளை இலங்கையும், சீனாவும் இணைந்து நேற்றுமுன்தினம் ஆரம்பித்தன.
தெற்காசியாவின் கவர்ச்சிகரமான கொள்வனவு நகராகக் கொழும்பை மாற்றும் இலக்குடன், இந்தப் பெரிய ஆடம்பர வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.
இந்தப் பெரிய வணிக வளாகத்தை அமைப்பதற்கான நிதியை வணிக வளாகத்தின் உரிமை நிறுவனமான, சொவற் லொஜிக் முதலிடவுள்ளது.
சீனாவின் அரச கட்டுமானப் பொறியியல் நிறுவனம் இந்த வணிக வளாகத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.
645 ஆயிரம் சதுர அடிக்கும் மேல் பரப்பளவு கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பெரிய வணிக வளாகச் சுற்றுச் சூழலுக்குச் சாதகமான அம்சங்களும் அமைந்திருக்கும்.
இந்தக் கட்டுமானப் பணிகள் 2020ஆம் ஆண்டில் நிறைவடையும் என்றும் கூறப்படுகிறது. (5)

## மே தினக் கூட்டம்: அமெரிக்கக் குடிமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 28
இலங்கையில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களால் போக்குவரத்துத் தடைகள் ஏற்படலாம் என்று, அமெரிக்கக் குடிமக்களுக்கு, இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
"இலங்கையில் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை மே தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.
கொழும்பு, காலி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் முக்கிய கட்சிகளின் மே தின நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதன்போது வீதிகள் மூடப்பட்டுப் போக்குவரத்துத் தடைகள் ஏற்படும் வாய்ப்பு காணப்படுகின்றமையால் மே தின நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களுக்கு அமெரிக்கக் குடிமக்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும்" என்று தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. (5)



# புத்தரின் புனித பொருள்கள் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டன



கொழும்பு, ஏப். 28
வெசாக்கை முன்னிட்டு இந்தியாவிலிருந்து புத்தரின் புனிதப் பொருள்கள் இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்தது.
சாரணாத்தில் இருந்து கொண்டுவரப்படும் புனிதப் பொருள்கள் இன்று தொடக்கம் மே மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை வரை அலரி மாளிகையில் தரிசனத்துக்காக வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
சாரணாத் புனித பொருள்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.
இதற்குத் தேவையான ஒழுங்குகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
சாரணாத்தில் உள்ள மூலகந்தக்குடி விகாரையில் புத்தபெருமானின் புனிதப் பொருள்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்தன.
மகாபோதி சங்கத்தின் நிறுவுனரான அநகாரிக தர்மபால இந்த விகாரையை மறுசீரமைத்து, சாரணாத்தின் பெருமையை உலகறியச் செய்வதில் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை என்று இந்தியத் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்தது. (5)

# எதிர்பார்த்த மாற்றத்தை 30ஆம் திகதி கூறுவேன்

## இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க



கொழும்பு, ஏப். 28
நாம் எதிர்பார்த்த மாற்றம் என்ன என்பதை நாளை மறுதினம் 30ஆம் திகதிக்குப் பின்னர் விளக்கத்துடன் ஊடகங்களுக்குத் தெரிவிப்பேன்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான மாற்றுக் கருத்துள்ள உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான வசந்த சேனாநாயக்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட புதிய பொறுப்புக்கள் மாற்றம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.
மறுசீரமைப்புக் குழுவால் முன்வைக்கப்பட்ட பதவிகள் அனைத்தும் நிறைவேற்றுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டுமானால், மூன்றில் இரண்டு உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும். அப்போதே, வாக்கெடுப்பொன்றைக் கோர முடியும். இதுவே கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜோசப் மைக்கல் பெரேரா கட்சியின் மையச் செயற்குழுப் பதவியிலிருந்து விலகியுள்ளார். அது அவரது கருத்து.
என்னைப் பொறுத்த வரையில் பொறுப்பிலிருந்து விலகி எதனையும் சாதிக்க முடியாது. உள்ளே இருந்துதான் போராட வேண்டும் - என்றார். (5)

# ஜே.ஆர். காலத்தில் என்றால் நடந்திருப்பதே வேறு

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க

கொழும்பு, ஏப். 28
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைத் தொடர்ந்தும் விமர்சித்து வரும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமாகிய ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட பொறுப்புக்கள் தொடர்பிலான மறுசீரமைப்புக்கு எந்த வித எதிர்ப்பும் இல்லையெனவும் அவர் கூறினார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் கட்சித்தலைவரை விமர்சித்தால், அமைச்சுப் பதவி பறிபோகும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.
தற்காலத்தில், கட்சியின் சில பின்வரிசை உறுப்பினர்கள் மூத்த உறுப்பினர்களைக்கூட வெளியேறுமாறு கூறும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (5)





தலவாக்கலை மாநகரில், அருள்மிகு சிறி கதிரேசன் ஆலய கும்பாபிஷேகம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுப்பட்டனர். (ற-ரி5)



## கல்லடிப் பாலத்தில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.28

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின், கல்லடி பாலத்துக்கு அருகிலிருந்து நேற்றுமுன்தினம் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர். சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## கராபிடிய மருத்துவர் சேவைப்புறக்கணிப்பு

காலி,ஏப்.28

கராபிடிய போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் நேற்று சேவைப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். இங்கிலாந்து நாட்டு மருத்துவரான ரிச்சட் பர்மின் மீண்டும் காலி கராப்பிடிய மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சைக்கு அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பணிப் புறக்ககணிப்பு காரணமாக வெளிநோயாளர் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை நிறுத்தப்பட் டுள்ள நிலையில் அவசர அறுவைச் சிகிச்சை மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)



## நடமாடும் வியாபார வண்டிகள்மீது போரதீவுப்பற்றில் பரிசோதனை

மட்டக்களப்பு, ஏப்.28

தேசிய உணவு வாரத்தை முன்னிட்டு போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள வெல்லாவெளி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நடமாடும் வெதுப்பக உணவு வியாபார வண்டிகள் வெல்லாவெளி பிரதேசத்துக்கு வெளியில் இருந்து முச்சக்கர வண்டி மூலம் விற்பனைக்காக கொண்டு வரப்படும் வெதுப்பக உணவுப்பொருள்கள் மற்றும் வண்டிகள் என்பன சுகாதார மருத்துவ அதிகாரியின் தலைமையில் நேற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனைக்ளில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றது என இனங்காணப்பட்ட உணவுப் பண்டங்கள் அழிக்கப்பட்டன.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டிகள் உணவு வியாபாரிகள் மற்றும், உரிமையாளர்கள் வெல்லாவெளி சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு உணவுச் சுகாதாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார பழக்க வழக்கங்கள், வெதுப்பக உணவுப்பொருள்களை குறைத்து போசாக்கான பொருத்தமான மாற்று உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் தொடர்பாகவும் உணவு வியாபாரத்தில் ஈடுபடும் நபர்களின் தனிநபர் சுகாதாரம், பொருத்தமான உடை, பாதுகாப்பு அங்கிகள் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டது.

போரதீவுப்பற்று பிரதேச சபை தவிசாளர் யோ.ரஜனி, சுகாதார மருத்துவ அதிகாரி வே.குணராஜசேகரம், மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் சி.லோகேஸ்வரன், பொதுச்சுகாதார பரிசோதகர்களான கு.குபேரன், சி.சிவபாதம், சி.ஜீவிதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# புதிய முறையில் தேர்தலை நடத்தினால் அரசு தோற்கும்

### அடித்துக்கூறுகிறார் கெஹேலிய



கொழும்பு, ஏப்.28

**மாகாணசபைத் தேர்தலை அரசு புதிய முறையில் நடத்தினால் தேசிய அரசு படுதோல்வியடையும். மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் அரசு தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று கூட்டு எதிரணி தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகிக்கும். உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பிற்போட்டமையின் பயனை அரசு பெற்றுக் கொண்டது.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கெஹேலிய ரம்புக்வெல தெரிவித்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"புதிய தேர்தல் முறைமையின் ஊடாக வாக்காளருக்கும் வேடபாளருக்கும்இடையில்உறவுநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசு மேற்கொள்ளும் விடயங்கள் விளைவுகளை தோற்றுவிப்பதாகவே காணப்படுகின்றன. மாகாண சபை தேர்தல் புதிய தேர்தல் முறைமைகளுக்கு அமைய இடம் பெற்றது. அரசு தனக்கு சாதகமான தீர்வுகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தே இந்த தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்தியது. ஆனால் அரசின் நோக்கத்தை நாட்டு மக்கள் மாற்றியமைத்து விட்டனர்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் முடிவடைந்த பின்னரும் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு பிரதேச சபை உறுப்பினர்களை நியமிக்க முடியாத நெருக்கடிகள்காணப்படுகின்றன.

புதிய தேர்தல் முறைமையானது பெரிய சிக்கல்களை கொண்டதாகவே காணப்படுகின்றது. மக்களுக்காக தேர்தல் முறைமைகளை கொண்டுவராமல் அரசின் தேவைகளுக்கு தேர்தல் திருத்தச் சட்டத்தை மாற்றியமைத்ததன் பெறுபேற்றைத் தேசிய அரசு பெற்று விட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறைமையை இரத்துச் செய்ய வேண்டுமாயின் அதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்படும் தினத்தில் நாளுமன்றத்தைக் கலைக்கும் விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப் பட்டால் மக்கள் விடுதலை முன்னணியினரது யோசனைக்கு கூட்டு எதிரணி ஆதரவு வழங்கும் என்றார். (ற.ரி5,61)

# கூட்டுஎதிரணியின் ஏற்பாட்டில் இருதினங்கள் மேதின நிகழ்வு

### பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

ஒன்றிணைந்த கூட்டு எதிர்கட்சியின் மே தினக் கொண்டாட்டங்களை இந்த முறை இரண்டு தினங்களும் கொண்டாட தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் வழமைபோல் மே மாதம் முதலாம் திகதியும் அரசு அறிவித்துள்ள 7 ஆம் திகதியும் இரு வேறு இடங்களில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார். கூட்டு எதிர்க் கட்சியின் மே தினக் கொண்டாட்டம் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"மே மாதம் முதலாம் திகதி கூட்டு எதிர் கட்சியில் உள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து கொழும்பு சாலிகா மண்டபத்தில் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. லங்கா சமசமாஜக் கட்சி இடதுசாரி தொழிற்சங்கங்கள் என்பன இதில் கலந்துகொள்ளவுள்ளன.

அதே போன்று கூட்டு எதிர் கட்சியின் மே தினக் கூட்டம் மே 7 ஆம் திகதி முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் காலியில் இடம்பெறவுள்ளது - என்றார்.

(ற.ரி5,31)

## சிகரெட்டுகளுடன் சீனப்பெண் கைது.

கொழும்பு, ஏப்.28

சட்டவிரோதமானமுறையில், வெளிநாட்டு சிகரெட்டுகளை இலங்கைக்கு கொண்டுவந்த சீனப் பெண் ஒருவர் ,நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

டுபாயிலிருந்து வந்த பெண், விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட போதே, கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணிடமிருந்து, டுபாய் தயாரிப்பிலான 20 ஆயிரத்து,980 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (றரி5)

## தொழிற்சாலை உரிமையாளர் உட்பட மூவருக்கு மறியல்

கொழும்பு, ஏப்.28

ஹொரண இறப்பர் தொழிற்சாலையின் உரிமையாளர், தொழிற்சாலையின் முகாமையாளர் மற்றும் ஆய்வு கூட உதவியாளர் ஆகியோர் மே 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹொரண நீதிவான் நீதிமன்றில் நேற்று இவர்கள் முற்படுத்தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

ஹொரண, பெல்லப்பிட்டிய பிரதேசத்தில்உள்ளதொழிற்சாலையின்அமோனியா அமிலம் அடங்கிய குழியை சுத்தம் செய்வதற்குச் சென்ற ஊழியர் ஒருவர் உட்பட ஐந்து பேர் கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்தனர். (ற-ரி5)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு, ஏப்.28

நவத்தேகமவெலிஅகார பிரதேசத்தில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சூதாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் அடங்கலாக நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்தமுறை பிரதேச சபைக்காக, சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு சபைக்கு தெரிவான உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சிலர் அந்த இடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து, 1 இலட்சத்து 6ஆயிரம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# மாகாணம் தழுவிய ஓவியப் போட்டி

சாவகச்சேரி ஏப் 28

வடக்குமாகாணப்பாடசாலைகளின் மாணவர்களின் ஓவியக்கலைத் திறன்களைவிருத்திசெய்யும்முகமாகசாவகச்சேரி தேவாலய சாலையில் ஓவியக்கூடம்அமைக்கப்பட்டுவருகின்றது.

இங்கு மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் மாணவர்களுக்கு ஓவியக்கலை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

கூடத்தின்ஆரம்பநிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு ஓவியப் போட்டியை நடத்த ஓவியக்கூடத்தினர் ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைகளில் தரம் 11, 12, 13ஆகியவகுப்புகளில் ஓவியப் பாடம் கற்கும் மாணவர்களை ஒரு பிரிவாகவும் பாடசாலை மாணவர்தவிர்ந்தஏனையோரை இன்னொரு பிரிவாகவும்கொண்டுபோட்டிகள் நடத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளின்மாணவர்களும் இதில் பங்குபற்றலாம். ஓவியங்கள் வரைவதற்கான கன்வஸ்தாள்கள் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும்.

போட்டிக்கானவிண்ணப்பங்களை எதிர்வரும்மே இரண்டாம்திகதிக்குமுன்னர் ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடம் இல.27தேவாலயசாலை சாவகச்சேரி எனும் முகவரியில் பெற்று விண்ணப்பிக்கமுடியும்.

கன்வஸ் தாளை மே 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம்திகதிவரை குறித்த முகவரியில் பெற்று ஜூன் 9ஆம் திகதிக்கு முன்னர் ஓவியங்களை ஒப்படைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தரைக்காட்சி ஓவியங்கள், சம்பிரதாய இலக்கிய வெளிப்பாட்டு ஓவியங்கள், சமகாலசமூகவெளிப்பாட்டுஓவியங்கள், நவீன பாணியிலான சமூக வெளிப்பாட்டு ஓவியங்கள் என்னும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்துஓவியங்கள்வரையப்படல் வேண்டும் இரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குபணப்பரிசில்களும்ஏனைய ஐந்து வெற்றியாளர்களுக்கு வரைதல் உபகரணங்களும் வழங்கப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ-9)

# அதிகரித்த வெப்பத்தைத் தணிக்க அதிகளவு தண்ணீர் அருந்துங்கள்

## சுகாதார அமைச்சு வலியுறுத்து



யாழ்ப்பாணம் ஏப் 27

நாட்டில்நிலவும்கடும்வெப்பநிலையால்ஏற்படும் உடற்பாதிப்புகளை தவிர்க்கும் முகமாகவும் உடல் வெப்பத்தை தணிக்கும் வகையிலும் அதிகளவு தண்ணீரை அருந்துமாறு சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் கடும் வெப்பநிலை நிலவுகின்றது. 33 பாகை செல்சியஸ் ஆக வெப்பநிலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக உடல்நிலையில்பாதிப்புஏற்பட்டுநீரிழப்பால் மயக்கம் மற்றும் நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அவற்றை தடுக்க அதிகளவு குடிதண்ணீரை அருந்த வேண்டும். அத்துடன் இயன்றளவு பப்பாசி, வெள்ளரி போன்ற பழவகைகள், இளநீர்போன்றவற்றைஉண்ணுமாறுசுகாதார அமைச்சுவேண்டுகோள்விடுத்துள்ளது. (எ-114)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள

# தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் 30லிருந்து தொடர் பணிப்புறக்கணிப்பு

## அரச தலைவருக்கு மனு மூலமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

**வடக்கு- கிழக்கில்தொடருந்துக்கடவைக்காப்பாளர்களாகச்சேவையாற்றும் அனைவரும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை அரச தலைவருக்குக் காலக்கெடு விதித்துள்ளனர். அதற்கு முதல் தீர்வு வழங்கத் தவறின்மறுநாள் 30ஆம்திகதி தொடக்கம்காலவரையற்றபணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

இது குறித்த கடிதம் வவுனியாஉதவிமாவட்டச்செயலர் ஊடாக அரச தலைவருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு - கிழக்கில்தொடருந்துக் கடவைக் காப்பாளர்களாகச் சேவையாற்றும் ஊழியர்களின் ஒன்றியத் தலைவர் றொகான் றாஜ்குமார் தெரிவித்ததாவது:

5 வருடங்களுக்கு மேலாக நாங்கள் தொடருந்துக் கடவைகளில்பொதுமக்களின், பயணிகளின்உயிர்களைப் பாதுகாத்து வருகிறோம். நாளொன்றுக்கு 200 ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது. அது எமக்கு எவ்வாறு போதுமானது? இந்தத் தொகைபோதுமானதுஎன்றா நீங்கள் கருதுகிறீர்கள்? வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதற்காலத்தில்200 ரூபாவைக்கொண்டுஎப்படி நாங்கள் வாழ்வது? எமது குடும்பம் எவ்வாறு வாழமுடியும்?

எங்களுக்குஅரசநியமனம் வழங்குமாறு பல தடவைகள்கோரியுள்ளோம்.

போராட்டமும் நடத்தியுள்ளோம். இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. இனியும் நாங்கள் நாளாந்தம் 200 ரூபாசம்பளத்துக்குப்பணிபுரியத் தயாரில்லை. எனவே எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். தொடருந்துக் கடவைக்காப்பாளர்களாக இல்லாவிட்டாலும் ஏனைய திணைக்களங்களில் என்றாலும் நியமனம் வழங்கவேண்டும் என்று நாங்கள்முன்னரேகோரியிருக்கிறோம். எனவே எங்கள் விடயத்தில் அரச தலைவர் சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும். தீர்வுவழங்கும் வரை எமது போராட்டம் தொடரும். இந்தமுறைநாம் ஆரம்பிக்கும் போராட்டத்தைக்காலவரையறையின்றித்தொடர்வதுஎன்றுஎமது மாவட்டசங்கங்களின்தலைவர்களுடனான கலந்துரையாடலில் முடிவு எடுத்துள்ளோம் என்று ராஜ்குமார் மேலும்தெரிவித்தார். (எ-4)

## பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில்

# 3ஆயிரம் குடும்பங்கள் வறட்சியால் பாதிப்பு

கிளிநொச்சி ஏப் 27

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 12 கிராம சேவகர் பிரிவில் 3 ஆயிரம்குடும்பங்கள்வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனஎன்றுபிரதேசசெயலாளர்சந்துரன்கிருஸ்னேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்டபூநகரிபிரதேசசெயலர் பிரிவின் கீழ் 19 கிராம சேவகர்பிரிவுகள்காணப்படுகின்றன. 19பிரிவுகளிலும் மொத்தம்7ஆயிரத்து680 குடும்பங்கள்வாழ்கின்றன. இந்தநிலையில் மாவட்டத்தில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 19 கிராம சேவகர் பிரிவுகளில் 9 கிராம சேவகர் பிரிவுகள் அதிக அளவில் வறட்சியை எதிர்கொண்டுள்ளதோடு மேலும் 3 கிராம சேவகர் பிரிவுகள் பகுதி அள்வில் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தற்போது3ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்பைஎதிர்நோக்குகின்றன. இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கும் குடும்பங்கள்குடிதண்ணீரைப்பெறுவதிலேயேஅதிகசிரமத்தை எதிர்கொள்கின் றன. தற்போது பிரதேச சபை 700 குடும்பங்களுக்கானதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. ஏனைய குடும்பங்களின் தண்ணீர் விநியோகத்துக்காக அவசரமாக தற்போது இடர் முகாமைத்துவப் பிரிவிடம் நிதி கோரியுள்ளோம்.

அது உடனடியாகவே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால் எஞ்சிய குடும்பங்களின் தண்ணீர் விநியோகத்துக் கான ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன-என்றார். (எ-105)

## 64 மில்லியன் ரூபாவில்

# சாவகச்சேரியில் மாமரச் செய்கை

யாழ்ப்பாணம்.ஏப்.28

சாவகச்சேரியில் 64 மில்லியன் ரூபாவில் மாமரச் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக 'ரொம் ஏசியா' மாமர இனம் அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின்கீழ் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு மாகாணத்தில் நவீனவிவசாயமயமாக்கல்திட்டம்ஐந்து ஆண்டுசெயற்றிட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது. நடப்பு வருடத்தில் இதற்காக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்கள் தெரிவாகியுள்ளன. இந்தமாவட்டங்களில்விவசாயம்சார்ந்தபல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. மாம்பழத்துக்கு பெயர் போன யாழ்ப்பாணத்தில் மாம்பழ உற்பத்தியைஅதிகரிப்பதற்குதிட்டம்ஒன்றுமுன்வைக்கப்பட்டுள்ளது. இது சாவகச்சேரியில் முன்னெடுக்கப்படும். இதன்மூலம் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள், மாமரச்செய்கைக்கான நீர்ப்பாசனவசதிகள், பராமரிப்பு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் கருவாடு உற்பத்தி அதிகரிப்பு



யாழ்ப்பாணம்.ஏப்.28

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் கருவாடு உற்பத்தி படிப்படியாக அதிகரித்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வள திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணமாவட்டத்தில்ஆழியவளை, தாளையடி, பருத்தித்துறை கிழக்கு, மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு மேற்கு, சண்டிலிப்பாய், சுழிபுரம், நெடுந்தீவு, வேலணை, யாழ்ப்பாணம் கிழக்கு, மேற்கு, சாவகச்சேரிஉள்ளிட்ட14பிரதேசங்களில் மீன்பிடிநடைபெற்று வருகின்றது.

21 ஆயிரத்து 268 மீன்பிடிக் குடும்பங்களைச் சேர்ந்த22ஆயிரத்து122மீனவர்கள்மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றனர். ஜனவரிதொடக்கம்மார்ச் வரையான இவர்களின் சராசரிமீன்பிடி35இலட்சம்கிலோகிராமாக காணப்படுகின்றது. இவ்வாறு பிடிக்கப்படும்மீன்கள்விற்பனைசெய்யப்படுவதுடன் அவற்றை உலர்த்தி கருவாடும் உற்பத்தி செய்யும் முறையும் மேற்கொள்ளப்படுகின்றது.

இது சராசியாக ஒரு மாதத்துக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரமாக காணப்படுகின்றது. இந்த எண்ணிக்கை சராசரியாக கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில்அதிகரித்துள்ளது. ஜனவரி மாதம் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 327 கிலோ கிராம் கருவாடு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் சுமார் ஒரு இலட்சத்து 99 ஆயிரம் கிலோகிராம்உற்பத்திசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இது கருவாடு உற்பத்தியின் அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. (எ-7)

# பனை அபிவிருத்தி சபைத் தலைவராக மீண்டும் சிவசங்கர்

யாழ்ப்பாணம், ஏப்.28

பனைஅபிவிருத்திச்சபைத்தலைவராகமீண்டும் மருத்துவ கலாநிதி ஆர்.சிவசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பனை அபிவிருத்திச் சபையின் 14ஆவது தலைவராக மருத்துவ கலாநிதி ஆர்.சிவசங்கர் நியமனம் பெற்றார். கடந்த மார்ச் மாதம் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியில் தான் பதவி விலகுவதாக ஒரு மாத கால முன்னறிவித்தல் கடிதத்தை அமைச்சு மற்றம் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு வழங்கியிருந்தார்.

எனினும் தற்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்இந்துமதஅலுவல்கள்அமைச்சிடமிருந்து தொடர்ந்து ஆர்.சிவசங்கரையே தலைவராக கடமையாற்றுமாறு க்டிதம் வந்துள்ளது. இதற்கமைவாக பனை அபிவிருத்தி சபைத் தலைவராக ஆர்.சிவசங்கர் பொறுப்பேற்கவுள்ளார் எனவும் பனைஅபிவிருத்திசபைதெரிவித்துள்ளது. (எ112)

ஆசிரியர் சங்க

## தொழிலாளர்தினம் மே முதலாம் திகதி

யாழ்ப்பாணம், ஏப். 28
இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், அரச அறிவியல் ஆய்வு மையம் என்பன இணைந்து நடத்தும் மே தின நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெறும்.
நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4)

யாழ்ப்பாணத்துக்கு

## 140 மில்லியன் ரூபா நிதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம். ஏப். 28
தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் 140 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலகங்களின்ஊடாகப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணமாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
நடப்புவருடத்தில்பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான நிதியினை தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு வழங்கியுள்ளது.
இந்த வேலைத் திட்டங்கள் பிரதேச செயலகங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.
உடுவில், கோப்பாய்பிரதேசங்களில் திராட்சைச் செய்கையினை ஊக்குவித்தல், பாஷையூரில் வலை பொருத்தும் மண்டபத்தை நிர்மாணித்தல், வடமராட்சி கிழக்கில் மீன்பிடித் துறையினை அபிவிருத்தி செய்தல், நயினாதீவு இறங்கு துறையைச் சீரமைத்தல், கரவெட்டிபிரதேசமருத்துவமனையில் இரண்டு மாடிக் கட்டடம்அமைத்தல், நெடுந்தீவு மருத்துவமனையின் அபிவிருத்தி, தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி பிரதேச செயலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில்அன்னாசிச்செய்கையினை மேற்கொள்ளல், ஊர்காவற்றுறையில் இளைப்பாறும் கூடாரங்கள் அமைத்தல், உடுப்பிட்டிப் பிரதேசத்தில் கிராமிய சுகாதார நிலையம்அமைத்தல், அராலி வடக்கு முருகமூர்த்தி ஆலய வீதி சீரமைப்புமற்றும்அரசஅலுவலர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிகளை நடத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## யானைகளைத் தடுக்க வேலிகள் அமையுங்கள்

### வடக்கு தென்னை பயிர்ச்செய்கை சபையால் முதலமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம். ஏப். 28
கிளிநொச்சி விசுவமடு காட்டைஅண்டியபகுதியில் யானைகள்பாதுகாப்புவேலிகளைஉடனடியாகஅமைத்துத்தருவதற்குநடவடிக்கை எடுக்குமாறு மாகாண முதலமைச்சருக்கு வடக்கு பிராந்திய தென்னைபயிர்ச்செய்கை கோரிக்கைக் கடிதம்ஒன்றைஅனுப்பிவைத்துள்ளதாக சபை தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.
விசுவமடு மேற்குபகுதியில் காட்டைஅண்டியபகுதிகளிலுள்ள கிராம மக்கள், யானைகளின் தொல்லையால் பல சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் அவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கு வழங்கப்படும் தென்னைகளை வழங்கமுடியமால்உள்ளது.
தென்னைவளரும்பருவத்தில்இரவுபகல்வேறுபாடின்றி யானைகள் அவற்றை நாசம் செய்கின்றன. 394 குடும்பங்கள்பதிவில்இருந்தாலும்இரவுவேலைகளில் வீடுகளில் தங்குவோர் குறைவாகவே உள்ளனர். யானைகளுக்கு பயந்து வேறு இடங்களில் மக்கள் பொழுதுகளை கழிக் கின்றனர். தென்னைகள் பயிரடப்பட்டு அதன் வளர்ச்சிப் பருவத்தின்போதே மானியம் வழங்க முடியும்.
தென்னைகள் அழிக்கப்பட்டதால் அந்தப் பகுதிக்கு மானியத்தை தற்காலிகமாகநிறுத்தவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அம்பாறை போன்ற மாவட்டங்களில் யானைகள் பிரச்சினைகளுக்குவேலிகள்அமைத்துக் கொடுக்கப்பட்டுதீர்வுவழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்குமாகாணத்தில்இந்த நிலை குறைவாகவே காணப்படுகின்றது. மாற்றுவழியாக வேலி அமைப்பதற்கு பதிலாக தேன் கூடு வைக்கும்முறைமுன்னேற்றம் தரும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். ஒருகுடும்பத்துக்கு இரண்டு தேன் கூடுகள் போதுமானது.
இதற்கு 4 ஆயிரம் ரூபா தேவைப்படும். ஆகவே யானைகள்தொடர்பில்பாதுகாப்பு வேலிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண முதலமைச்சர் சி.விக்கினேஸ்வரனுக்குஇந்தச்சபைகோரிக்கைக்கடிதம்ஒன்றைஅனுப்பியுள்ளது-என்றார். (எ-7)

# வடக்கில் புடைவைக் கைத்தொழில் மீண்டும் புத்துயிர் பெறுகின்றது!

யாழ்ப்பாணம் ஏப் 28
**வடக்கு மாகாணத்தில் கடந்த 35 வருடங்களுக்கமேலாக தேக்கநிலையிலுள்ள புடைவைக் கைத்தொழிலுக்கு புத்துயிர் கொடுத்து மீண்டும் புடைவை உற்பத்தியை மேம்படுத்த உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கைஎடுத்துள்ளது.**



நாட்டில்போர்ஏற்பட்டகாலத்தின்பின்னர்புடைவைஉற்பத்திக்கான்நூல்பெறுவதில் ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் உள்ளூர்உற்பத்திப்பொருள்களுக்குரியசந்தைவாய்ப்பகள் இன்மை காரணமாக புடைவைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த பலர் தொழில்களைக் கை விட்டு வேறு வேலைகளுக்குச் சென்றனர்.
இதனால்புடைவைக்கைத்தறி உபகரணங்கள் பல இடங்களில் மூடி வைக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.
இந்த நிலையில் நாட்டில் புடைவைக் கைத்தொழிலை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேலைத்திட்டமாக மாற்றுவதற்குபிரதேச செயலகம், புள்ளிவிவரத்திணைக்களம் ஆகியவற்றுடன் தொழில் மற்றும் கைத்தொழில் திணைக்களம் புடைவைக் கைத்தொழில் தொடர்பான விவரங்களைச் சேகரிக்கவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.
முதற்கட்டமாக கிராம அலுவலர்கள் மூலம் ஆரம்பத்தகவல்களைப்பெற்றுஇரண்டாம் கட்டமாக புள்ளிவிவர அலுவலர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் ஊடாக வினாக்கொத்து மூலம் விவரங்கள் சேகரிக்கஏற்பாடுகள்மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.
"முன்னர்கைத்தறிகள்மூலமும் இயந்திர கைத்தறி நிலையங்கள் மூலமும் பெருமளவு புடைவை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுக்கு போதிய சந்தை வாய்ப்புகள் கிடைத்தன. பின்னர் பிற நாடுகளிலிருந்துஇறக்குமதிசெய்யப்பட்ட புடைவை வகைகள் பெருமளவில் சந்தைக்கு கொண்டு வரப்பட்டதால் கைத்தறிபுடைவைகளுக்கு மவுசின்றி சந்தைப்படுத்த முடியாத நிலை எற்பட்டது" என்று கைத்தறி புடைவை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (எ-9)

## வடக்கு அரசியல் மாற்றத்துக்கு வாய்ப்பு: அவை மக்களை மையப்படுத்த வேண்டும்

### மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் கூறுகிறார்

வவுனியா, ஏப். 28
ஐக்கிய தேசிய கட்சியில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளமை போன்று, வடக்கு அரசியலிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதனை உணரமுடிகிறது. இங்கு ஏற்படுகின்ற மாற்றங்கள் மக்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட வேண்டும் என்பதுதான் எமது அவாவாக இருக்கிறது.
மக்களை அடிப்படையாக கொண்டு ஏற்படும்மாற்றங்களில்நாம் இணைந்துபணியாற்றுவோம்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்மருத்துவர்ப.சத்தியலிங்கம்தெரிவித்தார்.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து சில குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் நேற்று வழங்கப்பட்டன. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபையின் நிதி ஊடாக எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்விதமானபலவேலைத்திட்டங்களை கடந்த 5 ஆண்டுகளில் செய்து வந்துள்ளோம். வவுனியாவிலும் பல வேலைத்திட்டங்களைச்செய்துள்ளோம்.
வவுனியாமாவட்டம்முக்கியமாககவனிக்கப்படவேண்டியமாவட்டமாகஇருக்கிறது. காரணம்எமதுநகரசபை,பிரதேசசபைக்கு உட்பட்டபகுதிகளிலேஎமதுகுடிப்பரம்பலை மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கு எதிரான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக வவுனியாவடக்கு, செட்டிகுளம்போன்றபிரதேசங்களிலே இந்த வேலைத் திட்டங்கள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. அத்துடன் இப்போது தேசிய அரசியலிலும் மாகாண அரசியலிலும் பெரும் மாற்றங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.
ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்றுமுன்தினம் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அதுபோலவடக்குஅரசியலிலும்மாற்றங்கள்ஏற்படுவதற்கானசந்தர்ப்பங்கள்இருப்பதாக ஊடகங்கங்கள் வாயிலாக அறியமுடிகிறது. நீண்டகாலபோரால்பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு சார்பாகவும், இருப்பு சார்பாகவும் மாற்றங்கள் ஏற்படும் என்றால் அந்த மாற்றங்களோடு நாம் கைகோர்த்துச் செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆனால் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது மீண்டும் மக்களுக்கு எதிரான, மக்களை முன்னிலைப் படுத்தாதமாற்றங்கள்ஏற்படுவதாகஅறிய முடிகிறது. மக்களை மையப்படுத்தாத விடயங்களில் அவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.
இன்று வவுனியாவை பார்க்கும்போது இது எமது மாவட்டம் தானா என்று எண்ணத்தோன்றுகிறது. அரசின்வெசாக் கொண்டாட்டங்கள் இங்கு மேற்கொள்ள பட்டுவருகின்றன. மேதினம் 7 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எல்லா விதத்திலும்அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர்களோடு கை கோர்த்து உண்மையான மேதினத்தை எமது வடக்கு பிரதேசத்தில் நிகழ்த்த வேண்டும் என்று நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.
எனவே எமது மக்களின் வாழ்வின் மேம்பாட்டுக்காக எல்லோரும் இணைந்து உழைக்க வேண்டும் - என்றார். (4,110)

> **மக்களை மையப்படுத்தாத விடயங்களில் அவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.**





## இரணைதீவில் தரையிறங்கியது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

கிளிநொச்சி ஏப் 28
இரணைதீவில் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் மக்களுக்குஒருதொகுதிஉலர்உணவுப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.
முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் நேற்றுமுன்தினம் இரணைதீவுக்குச்சென்று போராட்டத்தில் ஈடுபடும் மக்களை சந்தித்தார்.
அவர்களின் தேவைகள் குறித்தும்தற்போதையநிலைமைகள் குறித்தும் கலந்துரையாடி மக்களுக்கு ஒரு இலட்சத்து 10ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்தார்.
புலம்பெயர் ஆதரவாளர்களின் நிதிப்பங்களிப்புடன் இரணைதீவு மக்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கும் நிகழ்வில் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரனுடன் அவரது கட்சியைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (எ)

## கொரியர்கள் கொண்டாட்டம்

சியோல், ஏப். 28
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இடையிலான சந்திப்பை அடுத்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி பெரும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் கொரிய மக்கள்.
தென்கொரியத் தலைநகர் சியோல், வடகொரியத் தலைநகர் பியாங்யாங் நகர்களில் பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடி தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டன.
உச்சிமாநாடு இடம்பெறும் பான்முன்ஜியோமிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடிய தத்தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். (ம)





# தீபகற்ப எல்லையில் மூன்-கிம் சந்திப்பு

பியாங்யாங், ஏப். 28
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் - தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் இருவரும் நேற்றுச் சந்தித்தனர். 1953ஆம் ஆண்டு கொரியப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இந்த இரண்டு நாடுகளின் அதிபர்களும் சந்தித்த முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்தது.
வடகொரியா அடுத்தடுத்து அணு ஆயுத, ஏவுகணை சோதனைகளை நடத்தியதால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் எழுந்தது. வடகொரியா மீது ஐ.நா. சபையும் அமெரிக்காவும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன. தென்கொரியாவும், ஜப்பானும் தம்மால் இயன்ற தடைகளை விதித்திருந்தன.
திடீர் திருப்பமாக தென்கொரியாவின் அழைப்பை ஏற்று அங்கு கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றது. அதன்பின் தென்கொரிய பிரதிநிதிகள் வடகொரியாவுக்குச் சென்று அந்த நாட்டு அதிபர் கிம் ஜோங் உன்னை சந்தித்துப் பேசினர்.
அப்போது ஏப்ரல் 27ஆம் திகதி இரு நாடுகளின் உச்சி மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி இரு நாட்டு எல்லையில் உள்ள அமைதி கிராமமான பான்முன்ஜியோமில் நேற்று உச்சி மாநாடு நடைபெற்றது.
மாநாட்டில் பங்கேற்பதற்காக எல்லைக் கோட்டுப் வந்திறங்கிய கிம் ஜோங் உன்னை, தென்கொரிய அதிபர் சென்று வரவேற்று தென்கொரியப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். மாநாட்டில் அணுவாயுதச் சோதனைக் குறைப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதுபோல் வடகொரியா மீது விதிக்கப்பட்ட தடைகளை விலக்குவது குறித்தும் பரிசிலிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## சொன்னதை செய்தார் அதிபர் மூன் ஜெ இன்

**“அயல்நாடான வடகொரியாவுடன் இணக்கமாவதற்கும் அந்த நாட்டுடள் நல்லுறவைப் பேணவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக நாம் தயங்குகிறோம் என்று அர்த்தமில்லை. நாம் போரை விரும்பவில்லை. இது தொடர்பில் நான் வடகொரியா சென்று அந்த நாட்டு அதிபர் கிம் ஜோன் உன்னைச் சந்திப்பேன். தேவையேற்படின் அவரை தென்கொரியாவுக்கும் அழைத்து வருவேன்**

சியோல், ஏப். 28
“வடகொரிய அதிபரைச் சென்று சந்திப்பேன், தேவையேற்படின் அவரை தென்கொரியாவுக்கு அழைத்து வரவும் நடவடிக்கை எடுப்பேன்” என்று தென்கொரிய அதிபராகப் பொறுப்பேற்கும்போது வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினார் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன்.
தென்கொரியாவின் முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை, பதவி விலகியதை அடுத்து புதிய அதிபராகப் பொறுப்பேற்ற முதலாவது உரையில், “தென்கொரியா பொருளாதாரத்திலும் பாதுகாப்பிலும் உயர் இலக்கை நோக்கி கட்டியெடுப்பப்படும். அயல்நாடான வடகொரியாவுடன் இணக்கமாவதற்கும் அந்த நாட்டுடன் நல்லுறவைப் பேணவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக நாம் தயங்குகிறோம் என்று அர்த்தமில்லை. நாம் போரை விரும்பவில்லை. இது தொடர்பில் நான் வடகொரியா சென்று அந்த நாட்டு அதிபர் கிம் ஜோன் உன்னைச் சந்திப்பேன். தேவையேற்படின் அவரை தென்கொரியாவுக்கும் அழைத்து வருவேன்” என்று தெரிவித்திருந்தார் மூன் ஜெ இன்.
மூன் ஜெ இன்னின் கருத்துக்கள் சாத்தியமற்றவை என்றே பொதுவாவக் கருதப்பட்டது. ஆனால், அவர், தான் எதைச் சொன்னாரோ அதைச் செயற்படுத்தினார். பன்னாட்டு ஊடகங்கள் பலவும் மூன் ஜெ இன்னின் நகர்வுக்கும் நடவடிக்கைகளுக்கும் பாராட்டுத் தெரிவித்து நிற்கின்றன. (ம)



## பாம்பியோ பதவியேற்பு

வொஷிங்டன், ஏப். 28
அமெரிக்காவின் 70ஆவது அயலுறவுத்துறை அமைச்சராக மைக் பாம்பியோ பதவி யேற்றார். டெக்ஸ் டில்லர்சன் தனது பதவியில் இருந்து விலகிய நிலையில் அவரின் இடத்துக்கே பாம்பியோ நியமனம் பெற்றார். அவர் சவூதி மற்றும் ஜெருசலேம் ஆகிய நாடுகளுக்கு தனது முத லாவது சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். (ம)



## பிரிட்டன் செல்கிறார் ட்ரம்ப்

லண்டன், ஏப். 28
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எதிர்வரும் ஜுலை மாதம் பிரிட்டனுக்குச் சுற்றுப் பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அண்மையில் சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை தனது தலைமையில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றை இணைத்துக்கொண்டு முன்னெடுத்தது அமெரிக்கா. இந்தத் தாக்குதல் தொடர்பில் மூன்று நாட்டு அதிபர்களும் விரைவில் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படியே பிரான்ஸ் அதிபர் மக்ரோன் அண்மையில் அமெரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அடுத்ததாக ட்ரம்ப் பிரிட்டன் செல்லவுள்ளார். ஜுலை 13ஆம் திகதி ட்ரம்ப் பயணம் மேற்கொள்வார் என்று வெள்ளை மாளிகை அறிவித்தது. (ம)



## ஊடகங்கள் கவனிப்பு

பியாங்யாங், ஏப். 28
கொரியத் தலைவர்களின் சந்திப்புக்கு, வழக்கத்துக்கு மாறாக மிகப்பெரும் முக்கியத்துவத்தை கொடுத்தன வடகொரிய ஊடகங்கள்.
கொரியத் தீபகற்பப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இதுவரை சில தடவைகள் பான்முன்ஜியோமின் இரண்டு நாடுகளின் உயர்மட்டக் குழுக்களும் ஒன்றுகூடி பேச்சில் ஈடுபட்டிருந்தன. ஆனால் இந்தச் சந்திப்புக்களுக்கு வடகொரிய ஊடகங்கள் பெரியளவில் முக்கியத்துவம் வழங்கவில்லை. விதிவிலக்காக கிம் ஜோங் உன் - மூன் ஜெ இன் இடையிலான சந்திப்புக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் வடகொரிய ஊடகங்களால் கொடுக்கப்பட்டது. (ம)



## 4 மாதங்களில் 48 பேருக்குச் சவூதியில் சாவுத் தண்டனை

ரியாத், ஏப். 28
கடந்த 4 மாதங்களில் 48 பேருக்கு சவூதியில் சாவுத்தண்டனை வழங்கப்பட்டது. இவர்களில் பாதிப்பேர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
பழமைவாதத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்துவரும் நாடுகளில் ஒன்றுதான் சவூதி. அண்மைக்காலமாக அந்த நாடு தனது பழமை வாதத்தை படிப்படியாக கைவிட்டு வருகிறபோதிலும், அதன் சட்ட நடவடிக்கைகள் இறுக்கம் குறையாதவையாக அப்படியேதான் இருக்கின்றன.



இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 48 பேர் சவூதியில் சாவுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. தனது அதிருப்தியையும் அது பதிவுசெய்தது. (ம)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## யாழ்ப்பாணம் வண்ணை, குளங்கரை மருதடி

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் (நாச்சிமார் கோவில்)

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## 28.04.2018



**28.04.2018 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவம் வசந்தமண்டப பூஜை தொடர்ந்து இரதத்தில் ஆரோகணித்தல்**

### தேரேறி வரும் தேவியே சரணம்!

வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சித் தாய் இன்று தேரிலே ஆரோகணிக்கின்றாள். உலகமெல்லாம் பரவி ஏற்றித்தொழும் ஆதிபராசக்தியானவள் இந்த நாச்சிமார் கோயிலிலே கோயில்கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ காமாட்சியாக வீற்றிருக்கிறாள்.

இன்று அழகிய சித்திரத்தேரிலே அருட்காட்சி தரும் அம்பிகை விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் வீதிவலம் வரும் அழகே தனி. தேரேறிவரும் தேவியாக இன்று அருள்காட்சி புரிந்து நல்வாழ்க்கையை நல்கவேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி வழங்கி உளமாரப் பிரார்த்தித்து வணங்கி வாழ்த்துகின்றோம். வண்ணை வாழ் அடியார் பெருமக்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுத் தேரேறி வரும் தேவியை வழிபாடியற்றி நல்வாழ்வு வாழவேண்டுமென்று ஆசிநல்கிப் பிரார்த்தித்து வணங்கி நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீனம்.**

### பிரதம குருவின் ஆசியுரை

யாழ். வண்ணை குளங்கரை மருதடி காமாஷி அம்பாளின் திருவருளுக்கு பாத்திரமாகி திருப்பாதங்களை பணிந்து எம்பெருமாட்டியினுடைய விளம்பி வருஷ மஹோற்சவம் பக்தி பூர்வமாகவும் மங்களமாகவும் பயணித்து இன்றைய தினம் இரதோற்சவமாகும். உயிர்களிடத்தில் உள்ள மும்மலங் களை நீக்கி, சம்ஹாரம் செய்து உயிர்களை இறைவன்பால் அழைத்து செல்லுதல் இரதோற்சவத்தின் சிறப்பு இத் தருணம் சகல அடியவர்களுக்கு எம்பெருமாட்டியின் திரு வருட்கடாட்சம் கிட்டி ஈழமணித்திருநாட்டிலே மக்கள் சாந்தி சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டு மென்று எம்பொருமாட்டியினை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சுபம்

"லோகா சமஸ்த சுகினோ பவந்து"
"கிரியாதிலகம், கிரியா ஜோதி"
சிவஸ்ரீ திவாகர பிரதீப் குருக்கள்
வட்டுக்கோட்டை.

### வண்ணை காமாஷி தேவஸ்தான ஆலய குருவின் ஆசியுரை

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக விளங்கும் வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாளின் திருப்பாதக் கமலங்களை வணங்கி எம் பெருமாட்டியினுடைய சம்ஹார உற்சவத்தின் சிறப்பானது இரதோற்சவமாகும். சகல அடியவர்களின் இன்னல்களை களைந்து இந்த பிரபஞ்சத்தில் சந்தோஷமாக வாழ எம் பெருமாட்டியை பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

**"சர்வே ஜனகா சுகினோ பவந்து"**
**"ஆகமப் பிரவீனா அம்பாள் உபாசகர்"**
**சிவஸ்ரீ திவாகர பிரணவக்குருக்கள்.**

### கருணை மிகு காமாட்சி அம்பிகை இன்று ரதமேறி வருகின்றாள்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி அருளை அள்ளி வழங்குவதற்காக எழுந்தருளி வீற்றிருக்கும் இடம்தான் நாச்சிமார் கோயில் என வழங்கும் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்.

இந்த அருள்மிகு ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா. கருணைமிகு காமாட்சி அம்பாள் இன்று ரதமேறி வீதி வலம் வருகின்றாள். அழகிய சித்திரத்தேரிலே அம்பிகை ஆரோகணிக்கும் நல்லருட்காட்சி இன்று வண்ணையிலே காணலாம். இந்த ஆலயம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயமாகும். முன்னாளில் நாவல் மரங்களும் மருதமரங்களும் நிறைந்திருந்த இடத்தில் கோயில்கொண்டிருந்த அம்பிகை வழிபாடு செய்கின்ற அடியார்களுக்கு அருள் சொரிந்து வினைதீர்க்கும் தாயாக எழுந்தருளி அருளாட்சி செய்கின்றாள்.

பொன்னாபரணஞ்செய்யும் வண்ணத்தவரின் குலதெய்வமாக விளங்கும் காமாட்சி அம்பாள் இங்கே மூலஸ்தானத்திலே வெகு பிரகாசத்துடன் வீற்றிருந்து ஒளிவீசி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இந்த வீதியால் போக்குவரத்துச் செய்கின்ற அடியார் பெருமக்கள் இங்கு இறங்கிவந்து விபூதி தரித்து, சந்தன குங்குமம் வைத்துக் கற்பூர தீபம் ஏற்றி வழிபட்டுச் செல்வது வழக்கமாகும்.

வருடந்தோறும் சித்திரா பௌர்ணமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு பதினைந்து நாள் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்த ஆலயத்தில் அம்பிகையின் அலங்காரம் பார்ப்பதற்காக ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு நாடித் தேடி ஓடி வருவார்கள்.

இங்கு நடைபெறுகின்ற திருவிழாக்களில் பத்தாம் திருவிழா மஞ்சம் மற்றும் கைலாசவாகனம், பெரிய சப்பரம், தேர், தீர்த்தம் என்பன சிறப்புத் திருவிழாக்களாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பூங்காவனத்தன்று அம்பாள் வீதி வலம் வருவதற்கென்று விதவிதமான வண்ண வேலைப்பாடுகளுடன் கூடிய புதிய வாகனம் ஒன்று கைவண்ணத்தில் உருவாக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

ஆகவே, இன்றைய தேர்த்திருவிழா நாளில் அம்பிகையின் அலங்காரம் கண்டு தரிசித்து அருள்பெற்றுய்ய வருமாறு அம்பிகை அடியார்களை இருகரங்கூப்பி அழைக்கின்றோம்.

"அம்பிகையை வழிபட்டால் அதிக வரம் பெறலாமே"

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**


செல்வ மஹால்
Chelva Mahal
1229,K.K.S. ROAD,
POONARI MARATHADI, JAFFNA.
021 221 9779, 076 319 9779

திவ்ய மஹால்
Thivya Mahal
Wedding, Puberty, Reception, Birthday party, Conference, Catering Services.
இல.1001, வண்ணார்பண்ணை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 614 1374

செல்வா பலஸ்
112, பூனாரி மரத்தடி, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8123

ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
Sri Lakshmi Plaza
திருமணம், கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள்
பிறந்தநாள் விழா விசேட
நிகழ்வுகள் இன்னும் பல..
இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு சந்தி (அருகில்), யாழ்ப்பாணம்.
E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550, 0044 746 657 8511

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ
ஸ்ரீ காளிகா சிற்பாலயம்
ஆலயங்களுக்குரிய சிற்பத்தேர், மஞ்சம், கைலாய வாகனம், ஆலய சிற்பங்கள், சிற்பமாதிரி சாஸ்திர முறைப்படி செய்து கொடுக்கப்படும்.
செல்லையா பாலச்சந்திரன்
பூநாறி மரத்தடி, K.K.S. Road, யாழ்ப்பாணம்.

B.K. Multi shop
B.K. மல்ரி சொப்
மின்சார உபகரணங்கள், T.V. அன்ரனாக்கள், PVC பைப் வகைகள், எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
No. 05,K.K.S. Road,
Kokuvil.
Tel : 021 221 7704.

Rube Since 1982 Jewellery
S.Nanthagopal
T.P. 077 734 4070
N.Gajaruban
T.P. 077 739 6176
ரூபி ஜுவல்லறி
No. 227–229, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021 221 6919
E-mail : info@rubejewelleery.com
Web: www.rubejewellery.com

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)
தற்போதைய முகவரி:
1091, காங்கேசன்துறை வீதி,
(நாச்சிமார் கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.
077 559 4147, 021 568 5333

சிறி அம்பாள்
எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்
Sri Ambal Electricals & Welders
கேற், கிறில், பாடசாலை மாணவர் மேசை, கதிரை மற்றும் இரும்பு வேலைகளும், வெல்டிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
இல.1039, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம்.
Prop:S.Sritharan
T.P: 077 659 5256
Regd: NAL/DS/832

அனைத்து விதமான சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை சுவையாக உண்டு மகிழ்ந்திட....
ஹோட்டல் நியூ செல்வா
Veg & Non Veg
HOTEL New Selva
மங்களகரமான நிகழ்வுகள் அனைத்திற்கும் நீங்கள் விரும்பிய உணவு வகைகளை முற்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
இல.1048, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:077 699 5009

# அருள்மிகு கைதடி வீரகத்திப்பிள்ளை





## வீரக

## தேர்

### தேர்த்திரு

### பிரதம குருவின் ஆசிச்செய்தி

கைதடியூரில் கோயில் கொண்டு எழுந்தருளி வேண்டியவர்களுக்கு வேண்டிய வரம் அருளும் வீரகத்தி விநாயகர் இன்று தேரேறி வருகின்றார். இந்திய ஸ்தபதிகள் யாழ்ப்பாணத்தில் தற்போது அநேக ஆலயங்களில் உள்ள தேர்களை ரதம் என்றே சொல்கிறார்கள். ஏனென்றால் தேரின் சில்லுகளில் இருந்து மேலே முடிவரையாவும் நிரந்தரமாகவும் உருக்கட்டைகளும் சித்திரமட்ட வேலைகளும் கால்கள் மேல் விதானம் மேலே கொடுங்கைகள் யாவையும் நிரந்தரமாக மரத்தால் செய்யப்பட்டு இருப்பதனால்தான். அதே வேளை இங்கு இன்று பிள்ளையாரைப் போன்று முருகப்பெருமானுக்கும் புதிதாக செய்யப்பட்ட சித்திரத்தேரில் வலம் வருகிறார். ஊர் கூடித்தேரிழுத்தல் என்பதற்கமைய ஊரின் நாலாபுற மக்களும் மிகவும் ஒற்றுமையாகவும் பக்தியோடும் தேரில் வரும் விநாயகப் பெருமானை மனமுருகி வழிபட்டு தேரிழுத்து அவரவர் மனதிலே வேண்டியதை விநாயகர் அருள் வழங்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி "

**பிரம்மஸ்ரீ.ச.ஜெயந்திநாதக்குருக்கள்**
**பிரதமகுரு - கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில்**

தெய்வ நம்
சைவக் கோயில்க
வெளிப்படுத்துவன எ
ஆலயம் கைதடி வீரக
செய்தி இதுவாகும்.
கி.பி. 17 ஆம் நூற்றா
அகற்ற பயன்படுத்திய
என்ற நாமத்துடன்
விளங்குகின்றது.

இவ்விநாயக
வந்தமை அற்புதமா
பெருங்கோயில்களி
பெருங்கோயிலாகப்
இடதுபுறக் கருவறை
ஆண்டுதோறும்
கோபுரங்கள் கட்டப்
எடுத்துச்செல்லுகின்ற
மேலும் 201

## தேர் சிறப்புற வாழ்த்துவோர்.


| | | |
|---|---|---|
| **கோபன் பந்தல்சேவை**<br>கோபன் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம் / கவிசயன் றான்ஸ்போட்<br>கைதடி கிழக்கு, கைதடி. | **ஐங்கரன் ஸ்ரோஸ்**<br>கைதடி கிழக்கு, கைதடி. | **விசா**<br>கைதடி |
| **நியூ றாஜிகா ஹாட்வெயர் அன் மல்ரி சொப்**<br>கைதடி மத்தி, கைதடி. | **P.S.FoodCity**<br>K.S.Ponnampalam<br>(Lanka Filling Station)<br>Kaithady Junction. | **சூரியன்**<br>கைத |
| **சிவராசா பிரகாஸ்**<br>கைதடி கிழக்கு, | **சந்தானம்** மல்ரி சென்ரர்<br>**Jey Group Pvt Ltd.**<br>கட்டடப் பொருள் விற்பனை நிலையம். கைதடி தெற்கு | **பிள்**<br>பல்பொரு<br>மானிப்பாய் வீ |
| **தர்மசீலன் மிதுலன்**<br>கைதடி | **ஆர்த்திகன் படமாடம்**<br>**அலுமினிய பிற்றிங்**<br>கைதடிச் சந்தி, கைதடி. | **விநாயகர்**<br>பிள்ளையா<br>கை |
| **ஸ்ரீ நிசா** பல்பொருள் வாணிபம்<br>கைதடி மத்தி. | **சிங்கராசா**<br>**அரைக்கும் ஆலை**<br>கைதடி மத்தி, கைதடி. | **சிவறஞ்ச** |
| **வேணுகா** சைவ உணவகம்<br>கைதடி சந்தி, கைதடி.<br>072 9940 024 / 07777 13244 | **றாம் ரேட்சென்ரர்**<br>லிற்றோ காஸ் 24 மணிநேர விநியோகஸ்தர்<br>மானிப்பாய் வீதி, கைதடி. 077 877 5976 021 205 7135 | **தீபன் க**<br>ன |
| **டனோயா**<br>**பந்தல்சேவை**<br>கைதடி தெற்கு, கைதடி. | **ஓம் முருகா** பல்பொருள் வாணிபம்<br>பிள்ளையார் கோயில் வீதி, கைதடி தெற்கு, கைதடி. 077 6027 054 | **சபேஸ்**<br>கைதடி |
| **தீபன் சைக்கிள் கடை**<br>கைதடி மத்தி, கைதடி. | **பராசக்தி களஞ்சியம்**<br>கைதடி தென்கிழக்கு, கைதடி. | **பிரிய**<br>கதி |

# ளையார் கோயில் முதலாய கோயில்களின்
# ரகத்திப் பிள்ளையார்
# ர்ச்சிறப்பு மலர் – 2018

## திருவிழா 28.04.2018 காலை 8.30 மணி



### சித்தர்கள் உலாவிய தலத்தில் சித்திர தேர்களின் உலா

...வ நம்பிக்கை நிரம்பிய தென்மராட்சியில் பார்த்த இடமெங்கும் சிறிதும் பெரிதுமாய் பல ...யில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்கள் அவ்வூர்களின் சமயப்பற்றை ...வன எனலாம். இக்கோயில்களுள் மிகப்பெரியதும் பழமையும் புதுமையானதுமான ...டி வீரகத்திப் பிள்ளையார் கோயில் என்பது மக்கள் மனதில் நீண்ட காலமாக பதிந்துள்ள ...கும். மேலும் பற்றை மறைவில் கண்ணுக்குப் புலப்படாதிருந்த இப்பிள்ளையார் சிலை ...நூற்றாண்டின் முற் பகுதியில் பற்றைகளை அகற்றிய போது தென்பட்டதுடன் பற்றைகளை ...படுத்திய ஆயுதம் பிள்ளையார் சிலையின் கையில் தறிபட்டதனால் கைதறிப்பிள்ளையார் ...த்துடன் காட்சியளித்தார். கைதறி என்பதே மருவி கைதடியாகவும் ஊர்பெயராக ...றது.

...விநாயகரை புதரிலே கண்டெடுத்துக் கொட்டில் கோயிலில் கொலுவிருத்தி வழிபட்டு ...புதமானது. இவ்விநாயகப் பெருமான் ஊர்மக்களின் நம்பிக்கைக்கு உரித்தானதனால் ...யில்களின் நடைமுறையை பின்பற்றி மூன்று திருச்சுற்றுக்கள் அமைந்த ...லாகப் பிரகார மூர்த்திகளைக் கொண்ட கோயிலாகவும் பிள்ளையார் கருவறைக்கு ...ருவறையில் இராமலிங்கம் சுவாமி (சிவன்) என இரட்டைக் கருவறையாக அமைத்து ...ும் பெருந்திருவிழாக்கள் நடைபெற்று வருவது மட்டுமல்லாது இன்று இரட்டை ... கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற காத்திருப்பது இவ்வாலய வளர்ச்சியை ஊரறிய ...லுகின்றது.

...லும் 2014 ஆம் ஆண்டு ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டதன் பின்னர் புதுப்பெலிவு பெறச் செய்ய உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அடியவர்களை வீரகத்திவிநாயகப் பெருமான் உத்வேகப்படுத்தினார். ஆண்டுதோறும் ஆலயம் அழகுறும் காட்சி அடியவரை மெய்சிலிர்க்க வைத்தவண்ணமிருக்க இரதோற்சவத்தில் சித்திரதேரில் பிள்ளையார் வலம் வருவது போன்று இவ்வருடம் முருகன் வலம் வருவதற்கெனவும் புதிய சித்திரத்தேர் ஒன்றும் கிடைக்கப்பெற்றிருப்பது மேன்மையடையச் செய்கின்றது. அடியவர்களின் பல்வேறு பங்களிப்புகளுடன் பலவகை திருப்பணிகள் தற்போதும் நடந்த வண்ணமே உள்ளது. மேலும் யோகர் சுவாமி, மார்க்கண்ட சுவாமி, சந்த சுவாமி போன்ற சித்தர்கள் பலரும் இத்தலத்திற்கு வந்து தங்கி சென்றது மட்டுமல்லாது ஆலயத்திற்கு அருகில் யோகர் சுவாமி தான் தங்குவதற்கென அமைத்த குடிலில் மார்க்கண்ட சுவாமியை தங்க வைத்தார். மார்க்கண்ட சுவாமிகள் இப் புனித பதியில் வாழ்ந்த காலத்தில் தேர்த்திருவிழா உபயகாரர்களுடன் இணைந்து தேர்த்திருவிழாவிற்கான ஒழுங்குகளினை அதிகாலை 4.00 மணியளவில் இருந்தே செய்யத் தொடங்குவார். என்பதும் நினைவு கூறத்தக்கது.

இவ்வாறு இன்னும் பல தலச்சிறப்புகளை கொண்ட எமது ஆலயத்திலே இன்றைய தினம் பிள்ளையார். முருகன் சித்திர தேர்களிலே வலம் வந்து தேர்த்திருவிழாவின் திருவருட்பேறு எங்கனும் பரவி எங்கும் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிலவ வீரகத்தி விநாயகப்பெருமான் அருள் பாலிப்பாராக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**நம்பிக்கைப் பெறுப்பாளர்**
**பரிபாலன சபையினர்**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்.**


| | | |
|---|---|---|
| ...சாக ரேட் ...கைதடிச் சந்தி, கைதடி. | விவா எலக்ரிக்கல் அன் ஹாட்வெயர் கைதடிச் சந்தி, கைதடி. 021 205 7020 | ரூபன் களஞ்சியம் கைதடி மத்தி, கைதடி. |
| ...பன் நகலகம் கைதடி. | நியூ கணேசன் ஸ்ரோர் கைதடி சந்தி. | சின்னப்பா குடும்பம் கைதடி கிழக்கு. |
| ...ள்ளையார் ...ல்பொருள் வாணிபம் ...ாய் வீதி, கைதடிச் சந்தி | வல்லிபுரம் மதனபாபு பாடகர் கைதடி வடக்கு. 077 2030 180 | சுவிஷ்கன் ஸ்ரோர்ஸ் கைதடி. |
| ...பகர் களஞ்சியம் ...ளையார் கோயில் வீதி, கைதடி சந்தி | கதிர்வேவலன் ஹாட்வெயர் கைதடி சந்தி, கைதடி. 021 222 9525 | சுமித்திரன் ஸ்ரோர் கைதடி மத்தி, கைதடி. |
| ...ஞ்சன் குடும்பம் கைதடி | திலக்சன் பல்பொருள் வாணிபம் கைதடி. | வவி ஆட்ஸ் வர்ண வேலை குழுவினர் கைதடி. |
| ...் களஞ்சியம் கைதடி. | மகிந்தினி ஸ்ரோர்ஸ் கைதடி கிழக்கு, கைதடி. 0777 2042 96 | சிறிவாலாம்பிகை ஸ்ரோஸ் கைதடி மத்தி, கைதடி. |
| ...ஸ் ஐஸ்கிறீம் ...கைதடி மத்தி, கைதடி. | ஆரியபவான் சைவ உணவகம் கைதடிச் சந்தி, கைதடி. | நியூ ஆனந்தபவான் சைவ உணவகம் கண்டி வீதி, கைதடி. |
| ...ரியங்கா ...கதிரை வாடகை கைதடி கிழக்கு. | பிள்ளையார் அரைக்கும் ஆலை கைதடி கிழக்கு. | AVS Kaithady |


(Sup/16030/10)

சிறப்பிதழ் ஒழுங்கமைப்பு: பொ.தங்கராசா - கைதடி.

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2018

சத்தியக்காட்டு சந்தைச் சதுக்கம் மற்றும் சங்கரத்தை சந்தைச்சதுக்கங்களில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேசசபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT வரி நீங்கலாக) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக்கட்டணம் (VAT,NBT வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| சத்தியக்காட்டு சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 02 | 02 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 03 | 03 | 900,000.00 | 18,000.00 | 1,000.00 |
| | | | | |
| சங்கரத்தை சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 02 | 02 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 03 | 03 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 04 | 04 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |
| 05 | 05 | 975,000.00 | 19,500.00 | 1,000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2018.05.01 – 2018.05.17ம் திகதிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2018.05.18 பி.ப.2.00 மணிவரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2018.05.18 பி.ப.2.30 மணிக்கு

## நிபந்தனைகள்

01. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாக செலுத்தி தேசியஅடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2018.05.01 ஆம் திகதியில் இருந்து ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப் பிரதிகளில் பெற்று 2018.05.18 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.
02. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமான மாற்றங்களும் செய்தல் ஆகாது.
03. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்களில் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
04. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடிதஉறையிலிட்டு அரக்குமுத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" எனமுகவரியிட்டு கேள்வியடங்கிய கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது தலைமை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். மற்றைய இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
05. 2018.05.18 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமூகமளிக்கலாம்.
06. 2018.05.18 ஆம் திகதி பி.ப2.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
07. ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒருகடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரியமுறையில் சபையில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.
08. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
09. எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.அத்துடன் தான் வதியும் இடத்தின் கிராமஅலுவலரிடம் இருந்து வதிவிடச்சான்றிதழ், மற்றும் தேசியஅடையாள அட்டைப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டயலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாகேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரசஉடமையாக்கப்படும். பிரதேசசபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக் காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடியகேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையின் 15% பெறுமதிசேர் வரியாகவும் (VAT) 2% தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிகாமம் மேற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
14. வாடகைஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் 15 % பெறுமதிசேர் வரி(VAT), 2 % தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
15. மாதாந்தவாடகைப் பணத்தை அந்தமாதம் 30ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப்பணத்தினை செலுத்தத்தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
16. முற்குறிப்படப்பட்ட 14வது 15வது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத்தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டுச் செலுத்தப்பட்டபணத் தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மைசபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதிவழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிகாமம் மேற்கு பிரதேசசபையினால் தொகைகுறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்தகாலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
20. குத்தகைக்குப் பெற்ற கடையினர் மின்சார இணைப்புக்கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் மின்சாரக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி கடை மீளப் பெறப்படும்.
22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருடகாலத்தற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
    - மிகை இலாபம் ஈட்டியகுற்றம்
    - நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறியகுற்றம்
    - சந்தை உபவிதிகளை மீறியகுற்றம்

மேலதிக விபரங்களை அலுவலகநாட்களில் கடமைநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கௌரவ த.நடனேந்திரன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
**2018.04.27**
(CS 16608)(14.17)

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான **திருமதி வாசுகி சாந்தலிங்கம்** அவர்களின் தாயார்

**திருமதி**
**பாக்கியம் திருநாவுக்கரசு**

அவர்கள் கடந்த 22.04.2018 ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார். அவரது மறைவையொட்டி அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

**யாழ் கல்வி வலய இசையாசிரியர் கழகம்.**

**ES Printers**
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
450/=

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 796
சீட்டிழுப்பு திகதி 2018.04.26 வியாழக்கிழமை
J 14 30 37 63
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 61,891,924/-
நீல நிற டிக்கட்டுகள் 2018.04.28ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்டம் பிற்போடல்


எதிர்வரும் 30.04.2018 ஆம் திகதி நடைபெறவிருந்த பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு 06.05.2018 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும் என்பதனை பழைய மாணவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

Eng.**இ.சுரேஸ்குமார்** — **தலைவர்**
**ச.பிறேமிலன்** — **செயலாளர்**
(CS 16113)(14.17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.04.2018 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி தவமணி இராசரத்தினம்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.04.2018) சனிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30.04.2018 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்)**

**101,கச்சேரி நல்லூர் வீதி,**
**நல்லூர், 021 222 7022**
**இ.இராஜகுமாரன்**
**இ.சூரியகுமாரன்.**
(CS/16110)(11,17)

## மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் கனகசபைக் குருக்கள்**

(பிரதம குருக்கள், கரவை வெல்லன் விநாயகர் ஆலயம், கரணவாய் வெற்றிக்காட்டுப் பிள்ளையார் ஆலயம்)



**பிறப்பு** 24.05.1955 **இறப்பு** 27.04.2018

குருக்கள் பகுதி கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் கனகசபைகுருக்கள் நேற்று (27.04.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாராணியக்குருக்கள் - சுந்தரவல்லியஅம்மா தம்பதியரின் அன்புமகனும், செவ்வந்திநாதக் குருக்கள் - மரகதவல்லி அம்மா தம்பதியரின் அன்புமருமகனும், சரஸ்வதிஅம்மாவின் அன்புக்கணவரும், வேதாரணியேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), காயத்திரி, மைதிலி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி ) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாகரன் (அதிபர், யா/ உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியா சாலை), வைகுந்த வாசன் ஆகியோரின் அன்பு மாமனும், அக்சனா (மாணவி), ஹவிஷன் (மாணவன், யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.04.2018) வெள்ளிக் கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குருக்கள் பகுதி,**
**கரணவாய், கரவெட்டி.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

077 797 6132 / 077 494 9818

# பன்னாட்டுச் சதிச்செயலில் பறிபோகின்றன பாரம்பரிய விவசாயமும் விதைகளும்

ஆசி கந்தராஜா


உலகெங்கும் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் விவகாரம், சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. குறிப்பாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகள், சுற்றுப்புறச் சூழலின் சம நிலையை அழிப்பதில், முக்கிய பங்குவகிக்கின்றன. மலட்டுவிதைகள்சந்தைக்குவந்தபின்னர் காலாதி காலமாக எமது மண்ணுக்கு பெருமை சேர்த்த பாரம்பரியம் மிக்க மரம், செடி, கொடிகளில் பல சாகுபடி செய்யப்படாதது மட்டுமல்ல, அவை முற்றாக அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. இதனால் ஏற்படும் நீண்டகால பாதிப்புக்களை, பாமர விவசாயிகள் அறிந்திருக்க நியாயமில்லை.
ஆதிகாலம் தொட்டு அயல் மகரந்தச் சேர்க்கை மூலம்தான் தாவரங்கள் இனவிருத்தி செய்யப்பட்டன. ஒரு தாவரத்தின் மகரந்த மணிகள் அதே இன, இன்னொரு தாவரத்தின் சூல்முட்டையுடன் இணையும் போது, புதிய இயல்புகள் கொண்ட தாவரம் உருவாகிறது. இங்கு நடைபெறுவது இயற்கையான மரபணுக் கலப்பு.
இதேவேளை மா, தோடை, எலுமிச்சை, மாதுளை போன்ற மரங்களில், ஒட்டுக் கன்றுகள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கு வெவ்வேறு இயல்புகள் கொண்ட, ஒரே வகை தாவரத்தின் பதியன்களை (கிளைகள்) விவசாயிகளே இணைத்து, இரண்டு மரங்களினதும் நல்ல குணங்களைக் கொண்ட புதிய ரகங்களை உருவாக்கி விடுவார்கள்.



## மலட்டுத் தன்மையுள்ள விதைகள் தற்போது குவிகின்றன சந்தையில்

விதை வியாபார நிறுவனங்கள் பல, மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகளை இப்போது சந்தைப்படுத்தி வருகின்றன. இந்த விதைகள் அமோக விளைச்சலைக் கொடுக்கும் என்றும், அதிக மகசூலைத் தரும் என்றும் சொல்லப்படுவது ஓரளவு உண்மை என்றாலும், ஒருமுறை அந்த விதைகளைப் பாவித்து அமோக விளைச்சலைப் பெற்றால், அவற்றின் விதைகளைப் பாவித்து அடுத்தபோகம் பயிர் செய்யமுடியாது.

> விதை வியாபார நிறுவனங்கள் பல, மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகளை இப்போது சந்தைப்படுத்தி வருகின்றன. இந்த விதைகள் அமோக விளைச்சலைக் கொடுக்கும் என்றும், அதிக மகசூலைத் தரும் என்றும் சொல்லப்படுவது ஓரளவு உண்மை என்றாலும், ஒருமுறை அந்த விதைகளைப் பாவித்து அமோக விளைச்சலைப் பெற்றால், அவற்றின் விதைகளைப் பாவித்து அடுத்தபோகம் பயிர் செய்யமுடியாது.



இங்கு மரபணுக் கலப்பு அல்லது மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

பாரம்பரிய முறையில், விவசாயிகள் தங்கள் மகசூலில் இருந்து ஒரு பங்கு விதைகளை, அடுத்த சாகுபடிக்கு ஒதுக்கி வைப்பது வழக்கம். அதாவது, நெல் அறுவடை செய்யப்பட்டால், அதில் இருந்து ஒரு பங்கு தானியம், விதை நெல்லாக ஒதுக்கி வைக்கப்பட்டு, அடுத்த சாகுபடிக்கு பயன் படுத்தப்படும். ஆனால் மரபணு மாற்றப்பட்ட பயிர்களில் இது சாத்தியமில்லை. காரணம் விதை நிறுவனங்கள் தாங்கள் விற்கும் விதைகளில் Terminator (ரேர்மினேட்டர்) என்ற தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இருக்கிறார்கள். இதனால் இந்த விதைகளிலிருந்து விளையும் தானியங்களில் கருமுளை இருக்காது. இவை முளைக்கும் திறனற்றவை.

## பாரம்பரிய விதைகளை மலடாக்கும் சதிச்செயல்

இதில் இன்னுமொரு சிக்கலும் உண்டு. உதாரணத்திற்கு, ஒருவர் தன்னுடைய வயலில் பாரம்பரிய முறையில் கத்தரிக்காய் சாகுபடி செய்கிறார் என வைத்துக் கொள்வோம். அடுத்த வயலில், இன்னொருவர் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் சாகுபடி செய்தால் பாரம்பரிய முறையில் விளைந்த கத்தரிக்காய் விதைகளிலும், மரபணுமாற்றம் நிகழ்துவிடும். இதை சற்று விளக்கமாகச் சொன்னால், மகரந்த சேர்க்கை மூலம்தான், கத்தரிப் பூ, கத்தரிக்காயாக மாறமுடியும். மரபணு மாற்றப்பட்ட கத்தரி வயலில் இருந்து மகரந்த மணிகள், காற்று மூலம் அல்லது தேனீக்கள் மூலம் பாரம்பரிய வயலுக்கு பரம்பினால் அங்கு மகரந்தச் சேர்க்கை நடைபெறும். இதனால் பாரம்பரிய வயலிலும் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்கள் தான் உற்பத்தியாகும். ஒரு முறை இப்படி மரபணுக்கள் மாறிவிட்டால் அந்த மாற்றத்தை மீளப்பெற முடியாது.
ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது.
பன்னாட்டு விதை வியாபார நிறுவனம் ஒன்று வளர்முக நாடொன்றில் மலட்டு விதைகளை அறிமுகம் செய்ய முற்பட்டது. விவசாயிகள் அதற்குத் தயங்கினார்கள். சுற்றுச்சூழல் நலன் விரும்பிகளும் அதை எதிர்த்தார்கள். விதை நிறுவனம் அசரவில்லை. அங்குள்ள ஒரு கிராமத்தில் சில விவசாயிகளுக்கு மூளைச் சலவை செய்து, மரபணு மாற்றப்பட்ட விதைகளை இலவசமாகக் கொடுத்தது. விவசாயம் செய்வதற்கான செலவையும் தருவதாக ஆசைகாட்டி, சில வருடங்களுக்கு ஒப்பந்தம் போட்டார்கள். விவசாயிகளும் ஆங்காங்கே மரபணுமாற்றப்பட்ட விதைகளை விதைத்துப் பயிர் செய்தார்கள். இவை விளைந்து பாரம்பரிய பயிர்களிலும் பார்க்க அதிக விளைச்சலைக் கொடுத்தன.

இதேவேளை இவர்களின் மரபணுமாற்றப்பட்ட பயிர்களிலுள்ள மகரந்தமணிகள், அடுத்த வயலுக்குப் பரவி, பா்ரம்பரிய பயிர்களின் மரபணுவை மாற்றிவிட்டது. இதனால் கிராமத்திலுள்ள எல்லா பயிர்களும் கருமுளைகளற்ற, ம்லட்டு விதைகளையே உற்பத்தி செய்தன. இதன் நீட்சியாக எல்லா விவசாயிகளும் விதை தானியங்களுக்காக பன்னாட்டு விதை நிறு வனங்களையே தங்கி இருக்கவேண்டி வந்தது. அதன் பின்னர் அவர்கள் சொன்னதுதான் விலை, வைத்ததுதான் சட்டம் என்று ஆயிற்று.
Terminator (டேர்மினேட்டர்) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவான மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் வளர்ந்து, மலட்டு விதைகளை உற்பத்தி செய்தால், விதை வியாபாரிகள் எப்படி முளைக்கக்கூடிய விதைகளை உற்பத்தி செய்கிறார்கள்? என்ற கேள்வி எழுவது இங்கு நியாயமானது.
விகாரமாக்கல் தொழில் நுட்பத்தால் விருத்தி செய்யப்பட்ட தாவரங்கள் அவர்களிடம் இருக்கிறது. அவற்றை மூடிய வயலில் விதைத்து, கட்டுப்பாடான முறையில் மகரந்தச் சேர்க்கை நடத்துவார்கள். அந்தப் பயிர்கள் 'முளைக்கக்கூடிய' மலட்டு விதைகளைக் கொடுக்கும். அந்த விதைகளையே அவர்கள் விற்பார்கள். ஆனால் அதில் விளைந்த விதையை, அடுத்த போகம் விவசாயிகள் விதைத்தால் அவை முளைக்காது.
இதேவேளை இலங்கையில் விற்பனையாகும் இயற்கை முறையில் விருத்தி செய்யப்பட்ட சில கலப்பின விதைகளைப் பற்றியும் இங்கு சொல்ல வேண்டும். கலப்பின விதைகள் மலட்டு விதைகளல்ல. இந்த விதைகள் அடுத்த போகமும் முளைக்கும். ஆனால் இவை மேலும் கலப்படைவதால் முதல் போக விளைச்சலைக் கொடுக்காது. இதனால் இதை விதைத்தவர்களும், விதை தானியங்களுக்காக விதை நிறு வனங்களையே நம்பியிருக்க வேண்டும்.
ஈரான், வடகொரியா, இந்தியா போன்ற நாடுகள் அணு ஆயுத பரிசோதனை செய்த போது, அமெரிக்கா துள்ளிக் குதித்து அந்த நாடுகளின் மீது பொருளாதாரத் தடை விதித்தது. இந்தத் தடை அந்த நாடுகளுக்கு பெரிதாக எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. எனவே அதன் காரணத்தை ஆராய்ந்த பன்னாட்டு முதலைகள், விவசரயம்தான் பல நாடுகளைக் காக்கிறது என்பதைக் கண்டு கொண்டார்கள்.
பசிதான் மானிடத்தின் பொது மொழி! அது தான் எமது விவசாயியை துபாயில் கக்கூசு கழுவ வைக்கிறது! விவசாயியின் மனைவியையோ மகளையோ சவூதி சேக்கின் ஆறாவது மனைவிக்கு வேலைக்காறி ஆக்குகிறது! ஒருவனை பட்டினி போட்டு, உணவுக்காக அவன் இன்னொருவனை சார்ந்து வாழும் நிலை ஏற்பட்டால், அவனை அடிமைப்படுத்திவிடலாம் என்ற சூட்சுமம், அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. இதனால்தான் இவர்கள், பல நாடுகளின் விவசாயத்தை சீரழிக்கும் முயற்சியில் இறங்குகிறார்கள்.

*கட்டுரையாளர்:*
*விவசாய C ராசிரியர், சிட்னி*

நாளை
**29.04.2018**
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை 16

திதி : சதுர்த்தசி காலை 6.54 வரை
நட்சத்திரம் : சித்திரை பி.ப. 02.23 வரை
சுபநேரம் : 08.58 – 10.28 வரை
ராகுகாலம் : 04.28 – 5.58 வரை

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தனிநாட்டு கோரிக்கையின் தேவை தணியவில்லை

தமிழீழக் கோரிக்கையை, தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்துவிட்ட நிலையிலும், தொடர்ந்து அந்தக் கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தி, ஒருமித்த, பிரிக்கப்படமுடியாத நாட்டுக்குள் ஒரு தீர்வைக் காண்பதே தமது குறிக்கோள் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளநிலையிலும், தனிநாட்டுக் கோரிக்கையைத்தமிழர்கள் இன்றைய நிலையில், கைவிட்டுவிடக் கூடாது என்று வலியுறுத்தியிருக்கிறார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

தமிழ்அரசுக்கட்சியின்நிறுவுனரும்ஈழத்தின்காந்தி எனஅழைக்கப்படுபவருமானதந்தைசெல்வாவின்41ஆவதுநினைவுதின நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது கருணாரத்ன இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

தமது ஆதிக்கத்தின்கீழேதான்மற்றவர்கள்அடிபணிந்து செயற்படவேண்டும்என்ற நோக்கோடுதான்சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதுமே இயங்குகிறார்கள் என்பதால், தமிழர்கள் தமது தமிழ்அரசுக்கானதனிநாட்டுக்கோரிக்கையைவிட்டுக்கொடுக்கக் கூடாது என்பது அவரது வாதம்.

விக்கிரமபாகு கருணாரத்ன சிங்களத் தலைவர்கள் மத்தியில் நேர்மையும் துணிச்சலும் கொண்ட ஒருவர். தமிழர்களின் பிரச்சினையை தமிழர்களின் பக்கமிருந்து பார்க்கவும் உய்த்துணரவும் கூடிய பக்குவம் கொண்டவர். நீண்டகாலமாகவே தமிழர்களின் உரிமைகளுக்காக வெளிப்படையாகக் குரல் கொடுத்து வருபவர். பௌத்த, சிங்களபேரினவாதத்திற்குள்சிக்குண்டுள்ள பெரும்பான்மை மக்களின் வாக்கு ஆதரவைக் கொண்டிருக்காதவர் என்கிறபோதிலும், நாட்டின் அரசியல் குறித்துத் தீர்க்கமான பார்வையுடைய மிகச் சொற்பமான சிங்களவர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டுக்கூறக்கூடியவர். சிங்களப் பேரினவாதக் கூறுகளைப் பற்றிய நுட்பமான அறிவுடையவர்.

இன்று இருக்கும் அரசியல் களநிலவரத்தைப் பொறுத்தவரை தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழர்கள் கைவிட்டுவிடக்கூடாது என்று அவர்தான் கூறுகின்றார். அதாவது, பிரிக்கப்படமுடியாத ஒருமித்தநாட்டுக்குள்கூட்டாட்சித்தீர்வு என்று என்னதான்தமிழர்கள்காட்டுக்கத்தல்கத்தினாலும், சிங்களப் பெரும்பான்மைவாத ஆட்சியாளர்கள் அதைப் பொருட்படுத்தப்போவதில்லை, அத்தகைய ஒரு தீர்வைத் தரப்போவதுமில்லை என்பதைத்தான் அவர் குறிப்பிடுகின்றார்.

சிங்களவர்களிடம் மனோநிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதை அவர் இடித்துரைக்கின்றார். அத்தகைய மாற்றம் ஒன்று ஏற்படாத வரைக்கும் பிரிந்து செல்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு மாற்றுத் தீர்வு ஒன்று இல்லை என்பதைச் சொல்கிறார்.

சிங்களவர்களின் இந்தப் போக்குக் குறித்து, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்கூட அண்மையில் இதுபோன்றதொருகருத்தைத் தெரிவித்திருந்தார். தனிநாட்டுக் கோரிக்கையைக் கூட்டமைப்புக் கைவிட்டுவிட்டமையைச் சிங்களவர்கள் மதிக்கவேயில்லை, கணக்கில்கூட எடுத்துக் கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்திருந்தார்.

உண்மையும் அதுதான். தனிநாடு வேண்டும் என்று கேட்ட தமிழர்கள் ஆயுதப் போரில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டமையைச் சிங்களத் தலைவர்களும்சமூகமும் மதிக்கவேயில்லை. போரில்தமிழர்களைத் தோற்கடித்ததால்தான் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டார்கள்என்றும், வாய்ப்புக்கிடைத்தால் மீண்டும் அதுபோன்றதொரு பிரிவினைக் கோரிக்கையை அவர்கள் முன்னெடுப்பார்கள் என்றும் அச்சப்படுகின்றார்கள். கூட்டாட்சித்தீர்வு ஒன்றை நோக்கி முன்னேறுவது என்பது தமிழர்களுக்குத் தனிநாட்டைப் பிரித்துக்கொடுப்பதற்கான முயற்சிதான் என்று கருதுகின்றார்கள். அதனாலேயே தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள்.

தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதாக, பன்னாட்டுச் சமூகத்தின் வலியுறுத்தலைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புபகிரங்கமாகஅறிவித்தபின்னர்கூட, சிங்களவர்களின் அச்சம்நீங்கவில்லை. அந்த அச்சம்நீங்குவதற்கானவாய்ப்புகள் இல்லை என்பதையும் அதற்கான காரணத்தையும்தான் சொல்லியிருக்கிறார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

தமிழ் அரசியல் கட்சிகள் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியதொரு கருத்து இது. தனிநாடு பற்றிப் பேசுவதே பாவம்என்கிறநிலையைஎட்டிவிட்டதமிழ்க்கட்சிகள்அனைத்துக்கும் இது கசப்பானசெய்திதான் என்றாலும், தமது அரசியல் பாதையை மறுபரிசீலனை செய்யவேண்டிய கட்டாயத்தில் அவை உள்ளன என்பதை உணர்த்திச் சென்றிருக்கின்றது விக்கிரமபாகுவின் பேச்சு.

# தமிழ் மக்கள் பேரவையின் எதிர்காலம்




**2015** ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆதரவுடன் தெற்கில் மலர்ந்த அரசு, இனப்பிரச்சினைக்குத்தீர்வாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க முனைந்தது. இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பங்காளராக இணைந்து கொண்டது. அரசியல் கட்சிகள் தமது அரசியல் பேரங்களையும் அரசமைப்பு உருவாக்க முயற்சிகளையும் ஒன்றாகக் கலக்க முற்பட்டன. புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய அம்சங்களை முதன்மைப் படுத்துதல் கைவிடப்பட்டது. புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக தோற்றம் ஏற்படுமானால், பதவிக்கு வந்த மைத்திரி-ரணில் அரசு தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது என்ற அரசியல் காரணிகள் முதன்மைப்படுத்தப்பட்டன. தெற்கில் மீண்டும் மகிந்த பதவிக்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கம் முதன்மைப்படுத்தப்பட்டது. சிங்கள இனவாதத்துக்குப் பயந்த நிலையிலேயே அரசமைப்பு உருவாக்கல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அடிப்படையைப் புரிந்தோ புரியாமலோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த முயற்சிகளில் இணங்கிப்போகும் தன்மை காணப்பட்டது.

### திசைமாறத் தொடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் தமிழரும் கலந்து கொள்ளக் கிடைத்த முதலாவது வாய்ப்பாக இதனைக் கருதினர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை அரசமைப்பில் இடம்பெற வைக்க முடியும் என மனதார நம்பினர். இவர்களை இந்த முயற்சியில் ஈடுபடுமாறு பன்னாடுகளது அரசுகளும் நிர்ப்பந்தித்தன.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், பன்னாடுகளது அரசுகளும் சிங்கள இனவாதத்தை தெரிந்தோ தெரியாமலோ, குறைவாக மதிப்பிட்டு விட்டனர் போலும். புதிய அரசமைப்பு முயற்சி சிங்கள இனவாதத்தை உசுப்பிவிட்டது. மகிந்தவின் ஊழல்களைத் தாங்க முடியாமல் அவரைப் பதவியில் இருந்து நீக்கி மைத்திரி-ரணில் அரசைப் பதவியில் அமர்த்திய சிங்கள மக்கள், மீண்டும் மகிந்தவின் பக்கம் சாயத் தொடங்கினர். இந்த மகிந்த பூச்சாண்டியரால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் திசைமாறத் தொடங்கின. புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கு கூட்டு ஆட்சிக்குச் சமமான உரிமைகள் உள்ளன என தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குக் கூறியது. புதிய அரசமைப்பில் நாம் ஒற்றையாட்சியை மேலும் பலப்படுத்தி இருக்கிறோம் என மைத்திரி-ரணில் அரசு சிங்கள மக்களுக்குக் கூறியது. தமிழ்மக்களுக்கு புலியின் தலையையும், சிங்கள மக்களுக்கு பூனையின் வாலையும் காட்டும் முயற்சி வெளிப்படையாகவே நடந்தது. இவ்வாறாக இரு சமூக மக்களையும் ஏமாற்றும் இந்த அரசியல் நாடகத்தின் மத்தியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழர் வேண்டுவது என்ன என்பதை எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உரத்துச் சொல்ல வேண்டிய தேவை எழுந்தது. அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு புதிய யாப்பு முயற்சியைப் பலிக்கடா ஆக்கிய நிலையில் இந்தக் குரல் ஓர் அரசியல் கட்சியிடமிருந்து வராமல் பொது மக்கள் தரப்பிலிருந்து வரவேண்டும் என்ற தேவை உணரப்பட்டது.

இவ்வாறான பின்னணியிலேயே, தமிழ் மக்கள் பேரவை 2016 ஆம் ஆண்டு உதயமானது. தமிழ் மக்கள் மத்தியிலிருந்த அரசியல் ஆர்வலர்கள், வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுடன் சேர்ந்து இதனை ஆரம்பித்தனர். எந்த ஒரு கட்டத்திலும் இது ஓர் அரசியல் கட்சியாக மாற்றமடையாது என்ற கோட்பாட்டுடன் இது ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஸ் அணி), தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் ஆகிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயலாற்றத் தொடங்கின. தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்திற்கும் அது மேற்கொண்ட "எழுக தமிழ்" போன்ற நிகழ்வுகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டனர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

### தமிழ்மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' நிகழ்வுகள்

தமிழ் மக்கள் பேரவை ஓர் அரசியல் கட்சியாக இல்லாமல் வெகு ஜன அமைப்பாகச் செயலாற்றும் என்ற வகையில் தமிழர் பகுதிகளில் ஏற்கனவே இயங்கி வந்த தொழிற் சங்கங்களும், சிவில் சமூக அமைப்புக்களும் தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயலாற்ற முன்வந்தன. வடக்கிலும் பின்னர் கிழக்கிலும் "எழுக தமிழ்" நிகழ்வுகளைப் பலதரப்பினரின் ஒற்றுமையுடன் பேரவை வெற்றிகரமாக நடத்தியது. இவ்வாறாக தமிழர் தரப்பின் பல்வேறு தரப்புக்களையும் பின்னணிகளையும் கொண்ட வெகுஜன இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை பரிணமித்தது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் தமிழர் வேண்டுவதென்ன என்பதை அரசியல் கட்சிகளுக்கும், பன்னாடுகளுக்கும் வெகுஜனத்தின் குரலாக எடுத்துச் சொல்லும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க அமைப்பாக தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றது. இந்த அமைப்பைத் தோற்றுவித்த தலைவர்கள் ஆரம்பத்தில் இந்த வரலாற்றுக் கடமையின் தார்ப்பரியத்தை உணர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். ஆயினும், இந்தத் தலைவர்களில் முதலமைச்சர் உள்ளிட்ட எல்லோரும் தமது தொழில்சார் துறைகளில் முன்னணியில் இருப்பவர்கள். இவர்களுக்கு ஒரு வெகுஜன அமைப்பை உருவாக்குவதில் முன் அனுபவம்இருக்கவில்லை. அமைப்பை உருவாக்குவதற்குச் செலவழித்த நேரமும் குறைவு. இதனால் நேரம் கிடைத்தவர்கள் தமது தனிமனித ஆளுமைகளைப் பயன்படுத்தியும், தன்னிச்சையாகவும் அமைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டனர். இதில்நகைப்புக்கிடமானதுஎன்னவெனில், புதிய அரசமைப்பில் இடம்பெற வேண்டியது என்னவென வலியுறுத்த ஆரம்பித்த அமைப்பு, தனது செயற்பாடுகளை நெறிப்படுத்த ஒரு திட்ட வரைபை உருவாக்கத் தவறிவிட்டது. தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்த நாளில் இருந்து கணிசமான காலம்வரை இதற்கென ஓர் அலுவலகம் இருக்கவில்லை. இவ்வாறான குறைபாடுகள் பலராலும் பலமுறை சுட்டிக்காட்டப்பட்ட போதும், அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தமிழ் மக்கள் பேரவையின் தலைமை வெகுஜன அமைப்புத் தானாக வளர்ந்து விடும் என எதிர்பார்த்தது. அவர்களால் போதிய நேரத்தை இதற்கு ஒதுக்க முடியாத நிலையில் அமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் அவர்களின் ஓய்வு நேர முயற்சியாக ஆகும் நிலை ஏற்பட்டது.

தமிழ். அரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கனடாவின் (TET) தொலைக் காட்சிக்கு 2018 தை மாதத்தில் வழங்கிய நேர்காணலில், தமிழ் மக்கள் பேரவையின் "எழுக தமிழ்" போன்ற நட வடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட முடியுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அரசுடன் இணைந்து புதிய அரசமைப்புத் தொடர்பாகப் பேச்சுகளில் ஈடுபடும் அதே சமயத்தில், அரசின் போக்குக்கு எதிர்ப்பைக் காட்டுவது கடினமாக இருக்கும் எனக் கூறினார். அவ்வாறான முயற்சிகளைக் கூட்டமைப்புச் செய்யாமல் ஏனைய அமைப்பு ஒன்று செய்வதே சாத்தியமானதாக இருக்கும்; பயனுள்ளதாகவும் இருக்கும். அரசுடன் பேச்சு மேசையில் அமரும்போது "எழுக தமிழ்" போன்ற நடவடிக்கைகள் கூட்டமைப்புக் கும், தமிழர் தரப்பிலிருந்து அழுத்தம் இருக்கிறது என்பதை அரசுக்கு உணர்த்தப் பயன்படுகின்றன. எவ்வாறு சிங்களத் தீவிரவாதிகளால் தமக்கு அழுத்தம் இருக்கிறதோ அவ்வாறே தமிழ்த் தீவிரவாதிகளால் கூட்டமைப்புக்கும் அழுத்தம் இருக்கிறது என்று அவர்கள் உணர்கிறார்கள். அதேவேளை இவ்வாறான நிகழ்வுகள் தமிழ் தீவிரவாதத்தைத் தூண்டாமல் பார்த்துக் கொள்வது அவசியம். அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டும் சக்திகளுக்கு வாய்ப்பாகப் போய்விடும்" என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் இந்தப் பதில், தமிழ் மக்களின் உரிமைக்கான போரில் தமிழ் மக்கள் பேரவையின் பங்கை மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் முன்வைக்கிறது. அதாவது அரசியல் கட்சிகளுக்கு உள்ள சில கைவிலங்குகள் வெகுஜன அமைப்புக்களுக்கு இல்லை என்பதை அவரது பதில் எடுத்துரைக்கிறது.

### தமிழ்மக்கள் பேரவையின் இருப்பு அவசியம்

தமிழ் மக்கள் பேரவையின் நட வடிக்கைகளைப் பல தடவைகள் கடுமையான கண்டித்த சுமந்திரனே, தமிழ் மக்கள் பேரவையின் இருப்பின் அவசியத்தை உணர்ந்து இருக்கிறார். ஆகவே தமிழ் மக்கள் பேரவையின் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் கடமையாற்ற வேண்டிய தருணம் இது. வெறும் ஓய்வு நேர முயற்சியாக இதனைக் கருதாமல், வெகுஜன அமைப்பை பலப்படுத்த வேண்டிய தருணம் இது.

இங்கே முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பு. ஒரு மக்கள் அமைப்புக்கு ஜனநாயகக் கட்டுமானங்களும், ஜனநாயகச் செயற்பாடுகளும் இருப்பது அவசியம். ஆனால் தமிழ் மக்கள் பேரவையில் எடுக்கப்படும் தீர் மானங்கள் ஒரு கட்டுக்கோப்பான, நிறுவன ரீதியாகவோ ஜனநாயக நடைமுறைகளுக்கூடாகவோ எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்கள் பேரவையின் பங்காளிக் கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இணைந்து செயற்பட விழைந்தன. அதற்கு மக்கள் பேரவை பின்னிருந்து ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இந்தத்தேர்தலில் ஒரு தலைமையை வழங்கக்கூடிய சந்தர்ப்பம் தமிழ் மக்கள் பேரவைக்கு இருந்தது. ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட ஜனநாயக ரீதியான முடிவெடுக்கும் முறைகள் அங்கு நிறுவப்படாமல் இருந்ததால், இறுதியில் முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்தே இறுதி முடிவானது. இதனால் நடுவிலிருந்து பேரம் பேசக்கூடியதலைமை இல்லாமையால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இணைந்து செயற்பட முடியாமல் பிரிந்தன. தமிழ் மக்களின் வாக்குகள் சிதறின. இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க சமயத்தில் தமிழ் மக்கள் பேரவையின் நிறுவனப்படுத்தலில் இருந்த குறைபாடுகள் காரணமாக, முடிவெடுப்பதில் ஏற்பட்ட குழப்பங்களால் பேரவையின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் நடந்த தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்திலும் முதல்வர் விக்னேஸ்வரன் தமது அபிமானத்துக்குரியவர்களை அழைத்து வந்து அவர்களைப் பேரவையில் இணைத்துக் கொள்ளமாறு கோரினார். ஒரு வெகுஜன அமைப்பில் சேருவதற்கு எல்லோருக்குமே உரிமையுண்டு. ஆனால் ஒரு வெகுஜன அமைப்பில் அங்கத்தவர்களை இணைப்பதற்கும், நீக்குவதற்கும் நிறுவனமயப்பட்ட செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும். குறைந்தபட்சம் தலைமைக் குழுவில் இருந்தவர்கள் பலருடனாவது கலந்துரையாடியதாக இருக்க வேண்டும். தன்னிச்சையானதாக இருக்கக்கூடாது.



தமிழ் மக்கள் பேரவையில் முடிவெடுப்பதில் தனிநபர் ஆளுமைக்கான ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இது பேரவையில் உள்ள பலரையும் அதிருப்திக்கு உள்ளாக்கியதை உணர வேண்டிய தருணம் இது. இது தொடருமானால், பேரவையின் அழிவுக்கே வழிவகுக்கும். முக்கியமாகப் பெயரளவில் மக்கள் அமைப்பாக இருக்கா மல் அதற்கான சட்ட அமைப்பையும், நிறுவனமயப்பட்ட ஜனநாயகக் கூட்டமைப்பையும், வேலைத்திட்டங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நடந்து முடிந்த இனப்படுகொலைக்கு இலங்கையைப் பொறுப்புக் கூறவைத்தல் போன்ற விடயங்களையும் தாண்டி, தமிழர் தாயகத்தில் உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஏராளம் உள்ளன. காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான போராட்டம், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம், காணி விடுவிப்புக்கான போராட்டம் என்பவற்றுக்குத் தமிழ் மக்கள் பேரவை தலைமை தாங்க வேண்டும். இந்தத் தலைமையின் ஊடாக அரசியல் கட்சிகளுக்கு இப்பிரச்சினைகளைத் தீர்க்கச் சொல்லி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

### 'சிந்தனையாளர் குழாம்' இல்லாத குறை உணரப்படுகிறது

எங்களிடம் ஒரு சிந்தனையாளர் குழாம் (Think Tank) இல்லாத குறையை இன்று தமிழினம் கடுமையாக எதிர்கொள்கிறது. தமிழ் மக்கள் பேரவை ஆலமரமாக வளர்ந்து கிளை பரப்பியிருந்தால், தமிழ் மக்களின் அத்தனை பிரச்சினைகளையும் அதனால் இலாவகமாகக் கையாண்டிருக்க முடியும். சிந்தனையாளர் குழாம் ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையிடம் உள்ளது. ஆனால் அது செயற்றிறனின்றி உள்ளமை கவலையளிக்கிறது. கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி, இயற்கை விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் எமது மக்கள் பின்தங்கியே நிற்கிறார்கள். தமிழ் மக்கள் பேரவையின் தலைவர்களும் ஆளுமைப் பொறுப்பில் உள்ளவர்களும், இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு அதிக நேரம் ஒதுக்க முடியாத நிலை இருக்குமானால், அவர்கள் தமது பதவிகளுக்கும் பொறுப்புக்களுக்கும் ஏனையவரை நியமிக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்பதவிகளையும் பொறுப்புக்களையும் கையேற்க ஒருவரும் முன்வராத நிலை நிலவுமா னால், தமிழ் மக்கள் பேரவையைக் கலைப்பதற்குக் கூட தயங்கக் கூடாது. ஏனெனில் செயற்படாத ஓர் அமைப்பை வைத்திருந்து தமிழ் மக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்குவதை விடுத்து இயலாமையை ஒத்துக் கொண்டு விலகுவதே தர்மம் ஆகும்.

அவ்வாறு தமிழ் மக்கள் பேரவை கலைக்கப்படும் பட்சத்தில் அது நிறைவேற்ற நினைக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை எவர் பொறுப்பேற்பது என்ற கேள்வி எழலாம். "வரலாறு, வெற்றிடங்களை விடுவதில்லை." என்று சொல்லப்படுவதுண்டு. தமிழ் மக்கள் பேரவைக்கென வரலாற்றுப் பாத்திரம் உள்ளதால், அது இல்லாத விடத்து இன்னொரு செயற்றிறனுள்ள அமைப்பு அதன் இடத்தை நிரப்ப உருவாகும். அது வரலாற்று நியதி. ஆகவே செயற்படாமல் இருந்து கொண்டு வழியை மறித்துக் கொண்டு இருப்பதை விடுத்து, ஒதுங்கி வழி விடுவதே தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மையாகும்.

தெற்கில் ஊழலாலும் பொருளாதாரப் பிரச்சினைகளாலும், உட்கட்சிச் சண்டைகளாலும் மைத்திரி - ரணில் அரசு சிறிது சிறிதாகப் பலமிழந்து கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மகிந்த ராஜபக்சவின் எழுச்சியைக் காட்டுகின்றன. அவர் பிரதிநிதித்துவப்படுத் தும் சிங்கள இனவாதமும், மீண்டும் மேல் எழுந்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியைத் தங்க வைக்க மைத்திரி - ரணில் அரசு சிங்கள இனவாதத்தை திருப்திப்படுத்த முற்படுவதைத் தவிர்க்க முடியாது. மகிந்த ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்குலகமும் இந்தியாவும் மைத்திரி - ரணில் அரசின் இந்த நடவடிக்கைகளைத் தடுக்கப் போவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு இணங்கிப் போவதற்கு நிர்ப்பந்திக்கப்படும்.

அதேவேளை மைத்திரி - ரணில் அரசும் இதுவரை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள் கிடப்பில் போடப்படும். இந்த நிலையில் புதிய யாப்பு உருவாக்க முயற்சிகளை உயிருடன் வைத்திருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் நம்பியிருக்க முடியாது. அப்படியாக இருப்போமானால், அதில் பலியாகப் போவது தமிழ் மக்களின் அபிலாசைகளே. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்பு ஒன்று, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து தமிழ் மக்கள் தரப்பு நியாயத்தை சர்வதேசத்துக்கும் உரத்துச் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளது. தமிழ் மக்கள் பேரவையால் பிரேரிக்கப்பட்ட அரசமைப்புக்கான முன்யோசனைகளை தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியிலும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் பரப்ப வேண்டிய அவசியம் உள்ளது.

*நன்றி-நிமிர்வு*

## ஆசிரியருக்கான கடிதம்

## உரிய தரப்பினரது உறக்கம் கலையுமா?

யாழ்ப்பாணம்-பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன்-வசாவிளான் வரையான இ.போ.ச.பஸ் சேவைக்கு வாரத்தில் ஓரிரு நாள்களாவது பொழுது பட்டதும் தடிமன், காய்ச்சல் வந்து விடுகிறதோ என்று எண்ண வேண்டியுள்ளது. குறித்த பஸ் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்சேவை மாலை 7 மணியுடன் சேவையை நிறுத்திக் கொள்கிறது. அதற்குப் பதிலாக மாலை 7.30, 8.00 மற்றும் 8.40க்கென இ.போ.சவின் மூன்று பஸ் சேவைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஒரு மாதத்தில் பெரும்பாலான நாள்களில் இந்த மூன்று பஸ் சேவைகளும் தொடர்ச்சியாக நடத்தப்படுவதில்லை. 7.30 மணி பஸ் ஓடினால் 8 மணி பஸ் ஓடாது. 8.40க்குத் தான் போகலாம் என்பார்கள். சில நாள்களில் 7.30 மணி 8 மணி பஸ்கள் இரண்டுமே ஓடாது. 8.40க்குக் கட்டாயம் பஸ் போடுவோம் என்பார் நேரக் கணிப்பாளர். இந்த ஒழுங்கீனத்துக்குக் காரணம் கேட்டால், நேரக் கணிப்பாளர் 'பஸ் வரவில்லை, அதனால் ஓடாது' என்பார். கோண்டாவில் சாலை பொறுப்பாளருக்கு பல தடவைகள் இந்த ஒழுங்கீனம் குறித்து முறைப்பாடு செய்தும், எந்தவித மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்படவில்லை. முக்கியமான நேரத்தில் அதிலும் தனியார் பஸ்சேவை இல்லாத நிலையில், இத்தகைய ஒழுங்கீனத்தால் பயணிகளுக்கு, குறிப்பாக தினமும் தொழில் முயற்சிகளுக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் தரப்பினருக்கு இத்தகைய அசெகரியம் ஏற்படாது தவிர்க்க உரிய அதிகாரத் தரப்பினர் மனம் கொள்வார்களா?

*ஊர்க்குருவி*

## கடைக்கண் பார்வை படுமா?

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் பெருமளவு வீதி விளக்குகள் பொருத்தப்படாது இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றன. வீதி விளக்குகள் அமைப்பது தொடர்பாக பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களும் வலியுறுத்தி வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்த வருடம் வலி. கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் வீதி மின்விளக்குகள் இணைப்புக்கு 38இலட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

வலி. கிழக்குப் பிரதேச சபையில் அதிகாரக் கதிரைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, தமக்குள் வேண்டாத வாக்குவாதங்களில் காலத்தைப் போக்கிய பழைய முகங்கள் பல காணாமல் போனதுடன், இம்முறை துடிதுடிப்பும், செயலூக்கமும் கொண்ட புதிய இளம் உறுப்பினர்கள் அதிகாரத்துக்கு வந்திருப்பது வரவேற்கத்தக்கது. குறித்த பிரதேச சபையின் நிர்வாகத்துக்குக் கீழ் வரும் பகுதிகளில் உள்ளூர் சிறு வீதிகள் பல, கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்புக் காணாது குண்டும் குழியுமாக இருந்து வருவதைப் புதிய நிர்வாகத்தினர் கவனத்திற்கு எடுத்து அவற்றைப் புனரமைக்க நடவ்டிக்கை மேற்கொள்வது அவசியமானதொன்றாகிறது. பிரதேச சபைச் செயலரின் கீழான நிர்வாகத்தின் போது, பக்கச்சார்பான விதத்தில் புனரமைப்பு அவசியமான கிளை வீதிகள் கவனத்தில் எடுக்கப்படாது, தத்தமது தனிப்பட்ட தேவைகளுக்கமையவே கிளை வீதிகள் புனரமைப்புக்குத் தெரிவு செய்யப்பட்டதாக பொது மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுண்டு.

அந்த வகையில் பிரதேச சபையின் புதிய தவிசாளர் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 9ம் வட்டாரமான உரும்பிராய் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்புக்காக ஏங்கித் தவம் கிடக்கும் சிவன் வீதியும் ,அதனோடிணைந்த செல்லப்பா வீதியும் பிரதேச சபை நிர்வாகத் தரப்பினரது கவனத்தை ஈர்க்க வேண்டுமென விரும்புகிறேன்.

*எஸ். ரீ. ராஜா,*
*உரும்பிராய்.*

# சிறந்த கொடையாளி



கண்ணனிடம் பீமன் "எல்லோரும் இந்தக் கர்ணனைக் கொடையாளி என்று புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்னிடமும்தான் பொருள் இருந்தால் நானும் தான் வாரி வழங்கு வேன்"என்றான்.

"பீமா!உன் கொடைத் தன்மைக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன்" இதோ இங்கே இருக்கும் இந்த மலையை என் ஆற்றலால் அப்படியே பொன்னாக்கி விடுகிறேன். நீ வருபவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கு"என்றான். அதன்படியே அங்கிருந்த மலை பொன் மலையாயிற்று.

ஒருவாரம் கழிந்தது. அவ்விடம் வந்தார் கண்ணன். அந்த மலையில்சிறிது அளவே குறைந்து இருக்கக் கண்டார். அப்போது கோடரியால் மலையை வெட்டிப் பொன்னை எடுத்துக்கொண்டிருந்தான் பீமன். வருகின்றவர்களுக்கு எல்லாம் அந்தப்பொன்னை வாரிவழங்கிக்கொண்டிருந்தான். அங்கே வந்த கண்ணனைக் கண்ட வீமன் "வாரி வழங்கும் வள்ளல் என்று என்னை இப்பொழுது எல்லோரும் புகழ்கிறார்கள்"என்று பெருமையாகச் சொல்கிறார். அப்போது கண்ணன் "பீமா இந்த வா்ய்ப்பைக் கர்ணனுக்குத் கொடுக்கிறேன். அவன் என்ன செய்கிறான் என்று பார்ப்போம்"என்றார். பின்னர் கர்ணனை அங்கு அழைத்த அவர் "இந்தப் பொன் மலை உனக்குச் சொந்தம். உன் விருப்பம் போல் வாரி வழங்கு"என்றார்.

பின்னர் கண்ணனும் பீமனும் அங்கிருந்து புறப்பட்டனர். சிறிது தூரத்தில் அவர்களின் பின்னால் கர்ணனும் வந்து கொண்டிருந்தான். இதனைக் கவனித்த கண்ணன் "கர்ணா!வாரி வழங்கும் நல்ல வாய்ப்பை உனக்குத் தந்தேன். அதை விட்டு விட்டு எங்களைத் தொடர்ந்து ஏன் வருகிறாய்? என்று கேட்டார் கண்ணன்.

"பெருமாளே! நீங்கள் அங்கிருந்து புறப்பட்டவுடன் இரவலன் ஒருவன் வந்து நின்றான். அவனுக்கு என்ன கொடுப்பது என்று சிந்தித்தேன். அந்தப் பொன் மலையை அவனுக்கு அளிக்க விரும்பினேன். "இந்தப் பொன் மலை உனக்கே சொந்தம் எடுத்துக்கொள் என்று சொல்லி விட்டு இங்கு வந்தேன்"என்றான் கர்ணன்.

இதனைக் கேட்ட கண்ணன் வீமனைப் பார்த்தார். வீமன் தலைகுனிந்தான். சிறந்த கொடையாளியைவீமன்கண்டுகொண்டான்.





## வர்ணம் தீட்டுவோம்


# வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பிராணிகளின் நடத்தை

சூரியன் பிரகாசமாகக் காய்ந்துகொண்டிருந்தான். தரையில் ஈரப் புகை எங்கும்காணப்படவில்லை. எங்கும் வரண்டே இருந்தது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மலைப்பாம்பு ஒன்று வெளிநாட்டு மிருகக் காட்சிச் சாலையில் ஒரு மூலையில் ஆகாரமில்லாமல்உறங்கிக்கிடந்தது. எதிரே இருந்த பன்றிக் குட்டியையும் தொடவில்லை. காரணம் அப்பொழுது இந்தியாவில் மழைகாலம். தான். இந்தியாவில் தான் இருக்கிறேன் என்ற நினைப்போடு அது உறங்கிக் கொண்டிருந்தது. அதாவது தான் கொண்டு வரபப்பட்ட நாட்டின் பருவ நிலையின் நினைவிலேயே அது செயற்பட்டது என்று மிருகக் காட்சிச்சாலையிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியாவில் இருந்துகொண்டு வரப்பட்ட நெருப்புக்கோழி கோடை காலத்தில் முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. ஆஸ்திரேலியாவில் அப்பொழுது இள வேனிற்காலம். இளவேனிற்காலத்தில்தான் ஆஸ்திரேலிய நெருப்புக்கோழி குஞ்சு பொரிக்குமாம். வேற்று நாட்டில் கோடைகாலமாக இருந்ததாலும் தான் பிறந்த வளர்ந்த நாட்டின் பருவநிலையின் தன்மைக்கேற்ப பிராணிகள் செயற்படுகின்றன. இதேபோன்று ஆஸ்திரேலியாவில் இளவேனிற் காலத்தில் குஞ்சு பொரிக்கும் அன்னப் பறவைதான் கொண்டு வரப்பட்டிருக்கும் நாட்டில் கோடை என்று தெரியாமல் ஆஸ்திரேலிய பருவ நிலையை நினைவில்கொண்டே செயற்பட்டது என்று கூறுகின்றனர். மிருகங்கள் தாங்கள் எந்த நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டனவோ அந்த நாட்டு பருவ நிலையை மறந்து தாங்கள் வசிக்கும் நாட்டின் பருவ நிலைக்கு ஏற்ப செயற்பட சிறிது காலம் ஆகும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.








# வானவில் வாழ்வு

வானவெளியைப் பாரம்மா
வண்ணக்கோலம் தெரியுது
வானம் செய்த விந்தை இதோ
வர்ணத் தோரணம் இட்டவர் யார்?

வானில் ஏழு வர்ணங்கள்
வடிவாய்த் தெரியுது பாரம்மா
இயற்கை ஓவியன் வானத்தே
எழுதிய சித்திரம் இதுதானோ

ஊதா சிவப்பு, கருநீலம்
உயர்ந்த மஞ்சள் பச்சையுடன்
சீராய் நீலம் செம்மஞ்சளுடன்
செறிந்தே தோன்றும் கட்சியிதாம்

ஆகா அழகுக்காட்சியும்தான்
அதோ மறைந்து போகிறதே
வான வில்லும் நிலைக்காதோ
வாழ்வும் பல நாள் நிலைக்காதோ?



# பூனை

- இனிப்புச் சுவையை அறிய முடியாத விலங்கு பூனை
- பூனைகளால் நிறங்களைப் பார்க்க முடியாது
- பூனை தன் தலையைச் சொறிந்து கொள்ள தன் முன்னங்கால்களைப் பயன்படுத்தாது தனது பின்னங்கா ல்களைத்தான் பயன்படுத்தும்.
- பூனைக்கு முன்னங்கால்களில் 10 விரல்களும் பின்னங்கால்களில் எட்டுவிரல்களும் உள்ளன.
- பூனை இரையை அப்படியே விழுங்கும். மெல்லுவது கிடையாது.
- பூனைக்கு 30பற்கள் உள்ளன.
- வாலில்லாத பூனைகள் உள்ள நாடு ஐஸ்லாந்து.
- பூனையின் முகத்தில் காணப்படும் மீசையைக்கொண்டு தான் செல்லும் வழியை அறிந்துகொள்கிறது.

# நம்ப முடியாத உண்மைகள்

- கங்காருக் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரந்தான் இருக்கும்
- நத்தையின் வேகம் மணிக்கு 23அங்குலம்.
- உலகிலேயே முதல் வரியில்லாத நாடு - வட கொரியா
- பிரான்ஸில் 1756-06.30அன்று 9வயதுச் சிறுமி ஒருத்தி ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.
- கடலில் வாழும் மீன்கள் கடல்நீரைக்குடிக்கின்றன. ஆனால் நன்னீரில் வாழும் மீன்கள் நன்னீரைக்குடிப்பதேயில்லை.
- மலேசியாவில் உள்ள ஒரு வகை மீன் மரங்களின் மேல் ஏறுகிறது.
- 1793ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தை நெற்றிக்கண்ணுடன் பிறந்தது.
- யானையின் துதிக்கையில் மட்டும் 40ஆயிரம் நரம்புகள் உள்ளன.
- இரையே இல்லாமல் பாம்பு 25மாதங்களும், தவளை 16மாதங்களும் மூட்டைப்பூச்சி 6 மாதங்களும் உயிர்வாழுமாம்.
- மிருகங்களுள் மிகச் சிறிய இதயமுள்ளது சிங்கம்தான்.

Status Photo / Video Life Event

உட்காரந்து பேசி ஒரு முடிவு எடுக்கலாம்......
ஒரு முடிவு எடுத்துட்டு வந்து உட்கார்ந்திருக்க அவன் கிட்ட பேச முடியாது......!!

பெற்றோர்களின் அருமை தெரிய வேண்டுமென்றால்.......
"சொந்தக்காரர்களோடு தங்கிப்பார்"
சொந்தக்காரர்களின் அருமை தெரிய வேண்டுமென்றால்........
"காசு இல்லாமல் வாழ்ந்து பார்"

உடலுக்கு கேடு விளைவிக்கும் பொருட்கள் சூப்பர் மார்க்கெட்டில்.........
உடலுக்கு வலிமையும், குளிர்ச்சியும் தரும் உணவுகள் தெருக்களில்..........!!

தானா பெரியவங்க காலில் விழுந்தா அது தமிழ்ப்புத்தாண்டு...........

தள்ளாடி விழுந்தா அது ஆங்கிலப்புத்தாண்டு...........!!

அந்த காலத்தில் நாம் எல்லாம் என்பது வார்த்தை அல்ல.......
அவர்களின் வாழ்க்கை.........!!

உண்மையை காட்டும் கண்ணாடிகளை யாருமே விரும்புவதில்லை......
எல்லோருக்கும் தேவைப்படுவது அழகாய்க்காட்டும் கண்ணாடிகள் தான்....!!

# பேஸ்புக்

ஐய்யய்யோ அதுக்குள்ள கத்திரி வெயில் ஸ்டார்ட் ஆயிரிச்சே...




மூதேவி இது 'சேம்பிள்'தான் கத்திரி வெயிலுக்கு இன்னும் ரெண்டு மாசம் இருக்கு....




**முருகேசு:** ஒரு வாரமா எனக்கு மிரட்டல் வருது சேர்...
**பொலிஸ்:** மொட்டைக்கடிதமா?
**முருகேசு:** இல்ல சேர் டெலிபோன்
**பொலிஸ்:** கொலை மிரட்டலா..?
**முருகேசு:** இல்ல சேர்
**பொலிஸ்:** வேறென்ன?

டெலிபோன் கட்டணத்தை செலுத்தாவிட்டால் இணைப்பைத் துண்டித்து விடுவோம்ன்னு மிரட்டுறாங்க சேர்...






8 வருடங்களுக்குப் பின் தெலுங்கில் வெளியாகும்

# நயன்தாராவின் 'லேடி ரைகர்'

நயன்தாரா நடிப்பில் 2010ஆம் ஆண்டில் மலையாளத்தில் வெளியான படம் 'எலெக்ட்ரா'. உளவியல் படமான இதில் மனீஷாகொய்ராலா, பிரகாஷ்ராஜ்மற்றும்பலர்நடித்திருந்தனர். இதனை இயக்குநர் ஷியாம் பிரசாத் இயக்கியிருந்தார்.

தற்போது எட்டுவருடங்கள்கழித்து தெலுங்கில்மொழிமாற்றம் செய்யப் பட்டு வெளியிட இருக்கிறார்கள். தெலுங்கில் இதற்கு 'லேடி டைகர்' எனப் பெயர் வைத்திருக்கிறார்கள்.

இதற்கு முன் நயன்தாரா நடித்த 'நானும் ரௌடி தான்', 'இரு முகன்', 'மாயா', 'டோரா', 'அறம்' ஆகிய படங்கள் தெலுங்கில் மறுதயாரிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. அவற்றுக்குக் கிடைத்த வரவேற்புகளால் இப்போது 'எலெக்ட்ரா' வையும் வெளியிட இருக்கிறார்கள்.

எதிர்வரும் மே மாதம் வெளியிடப்படும் என தெலுங்கு வட்டா ரங்கள் கூறுகின்றன.


**நண்பன் 1 :** டேய் உன்ர மகன் அப்படியே உன்னை மாதிரியே இருக்கிறான்ரா..

**நண்பன் 2 :** நாத்ாரி! மெதுவாப் பேசுடா அவன் பக்கத்து வீட்டுப் பையன்.




ஆசிரியர்: அமெரிக்கா எங்கே உள்ளது?
மாணவன்: தெரியாது சேர்!
ஆசிரியர்: மேசைக்கு மேல் ஏறி நில்லுடா..!
மாணவன்: ஏறி நின்றால் தெரியுமா சேர்?

**எந்தக் கஷ்டமும் இல்லாம வாழுறதில இல்ல 'கெத்து'**




**எல்லாக்கஷ்டத்தையும் சமாளிச்சு மேல வாறதிலதான் 'கெத்தே' இருக்கு**



# இன்றைய நாள்

**மேடம்:** சுற்றத்தினரிடம் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவர். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** அவசியமில்லாமல் கடன் பெற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வது அவசியம். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது அவசியம். இலாபம் சுமார். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். சுப நிகழ்வில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** சஞ்சலம் நீங்க இஷ்ட தெய்வ வழிபாடு தேவை. தொழில், வியாபாரத்தின் இடையூறுகளை உடனே சரி செய்வது நல்லது. மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** முக்கிய பணி நிறைவேற கூடுதல் உழைப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் கிடைக்கும்.

**தனுசு:** பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** அவமதித்தவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** மனக்குழப்பம் தீர இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடு ஆறுதல் தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

## கேள்வி அறிவித்தல்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)– 2018
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிவீதி புனரமைப்புக்குப் பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.comஇல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 01.05.2018 ஆம் திகதியிலிருந்து 18.05.2018 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து 01.05.2018 ஆம் திகதியிலிருந்து 18.05.2018 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 18.05.2018 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று 20.07.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ருபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41 (3)2/PSDG /01/2018 | கண்ணாடிப்பிட்டி திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் கழிவுகளை தரம் பிரிக்கும் தொட்டிகள் அமைத்தல் | 2.462 | 03 மாதம் | C8 | 24,650.00 | 16.08.2018 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 15.05.2018 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** (AKN/442)(11,17) **28.04.2018**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 30.03.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி இந்திராதேவி-பாலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30.04.2018 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**56, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

## இரண்டாம் ஆண்டு நினைவு

### அமரர் தியாகராசா ஸ்ரீநாகேஸ்வரன்



மண்ணில் 08.04.1968 — விண்ணில் 20.04.2016

திதி : வளர்பிறை சதுர்த்தசி

நெஞ்சமதில் குலவிளக்காய் நிறைந்து நின்று
எண்ணமதில் என்றும் நீக்கமற நிலைத்த எம் அன்புத் தெய்வமே !
வண்ணமலர் வாசமாக உள்ளத்தில் வீற்றிருந்தீர்
கண்ணிமைக்கும் நேரத்துக்குள்
காலன் உமைக் கவர்ந்து சென்ற கொடுமையை
எண்ணிக் கலங்குகின்றோம் நேற்றுவரை நிஜமாகி
இன்று நினைவாகி இதயங்கள் நொருங்கி
இமைகள் நனைய எம்மையெல்லாம் தவிக்க விட்டு
இரு ஆண்டுகள் ஆனதையா ஆண்டுகள்
ஜென்மங்கள் ஆனாலும் ஆறாது எம் துயரம்
எம்மை தேற்ற. ஆற்ற யாருமின்றி வழியின்றிக்
கனத்த இதயங்களுடன் அனுதினம் தவிக்கின்றோம்
எமது பாச தீபமே உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

**அன்புடன் ஆருயிர் மனைவி,**
**சித்தப்பா, சித்தி, பெரியம்மா குடும்பத்தினர்.**

(CS 16057) (14.17)

# மரண அறிவித்தல்

# திருமதி தையமுத்து ஐயம்பிள்ளை



புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையமுத்து ஐயம்பிள்ளை நேற்றுமுன்தினம் (26.04.2018) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஐயாத்தை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னு, கந்தையா, பர்வதம், ஆறுமுகம், கண்ணம்மா, செல்லம்மா, சின்னம்மா, தம்பிப்பிள்ளை மற்றும் பிள்ளையம்மா (பிரான்ஸ்) ஆகியோரின்அன்புச்சகோதரியும்,நாகேஸ்வரி(சுவிஸ்),கமலேஸ்வரி (பிரான்ஸ்), உமேஸ்வரி(தேசிய சேமிப்பு வங்கி-யாழ். மேற்தரகிளை), ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலிங்கம் (பபா -NSB -யாழ் ), பிரபாகரன் (பிரபா - பாமசி & குறோசரி) ஆகியோரின் அன்பு மாமியும், கஜேந்திரன், கார்த்திகாயினி -சுஜீவன், காயத்திரி- கணேஸ், செந்தூரன், கௌதமன், அபிநயா, அருணன், அர்ஜீன், சாந்தகுமார் ஆகியோரின் பேர்த்தியும், கரிஸ், கர்ணி, கத்தரின், சைலன், லக்ஸ்மன். இலியா, சோபியா, மிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (30.04.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**315, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பொ.பிரபாகரன் (பிரபா பாமசி)**
**077 844 5649**

(cs 15094) (13.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்கள்



திரு. த. பாலகுமார்






திருமதி கு. கணேஷ்



திருமதி நி. டினேஷ்

ஆகியோர் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 28.03.2018 நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் கல்வி-மாணி (BED) பட்டம் பெற்றமையையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.



செல்வி கு. சுபாஜினி

யா /சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

## வீடு, காணி விற்பனைக்குண்டு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. முற்பகல் 10 மணிக்குப் பின்பு பார்வையிடலாம்.

(CS/16108)(11.17)

**071 627 4916**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் மூன்று பேர் உள்ள குடும்பத்திற்கு வாடகைக்கு வீடு உடன் தேவை.

(IN 6610) (4.17)

**077 521 2692**

## காணி வீடு விற்பனைக்குண்டு

56/02, பழம் றோட், கந்தர்மடத்தில் அமைந்துள்ள வீட்டுடன் சேர்ந்த 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**078 839 7317** (CS/16109) (11.17)

## பணிப்பெண் தேவை

வயோதிய தாய் ஒருவரை பராமரிப்பதற்கு தங்கி நின்று பணி புரியக்கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 076 989 4676**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் குற்றமற்ற 1992 இல் பிறந்த பூராடம் கி.பா 22. உயரம் 5' 1" உடைய கொழும்பில் பணிபுரியும் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனை (உள்நாடு அல்லது வெளிநாடு) பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS/16117) (07)

**077 036 6059**

## வீடு வாடகைக்கு

புதிய அத்தியடி வீதியில் **4 Rooms, 3 Halls** மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உள்ளன)

**பார்வையிடும் நேரம் - 9.00 - 5.00 வரை.**

(CS/16111)(11.17)

**021 222 4976, 070 212 2338**

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்குபிரதேச சபை
## சபைநிதி வேலைத்திட்டம் (Council Fund)- 2018

1. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்டகேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் கட்டட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(1) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சாா்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தைக் கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமானதரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 225 0144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம், என்னும் இடத்தில் 01.05.2018ஆம் திகதியிலிருந்து 21.05.2018 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2500/- (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு 22.05.2018 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று–24.07.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02/CF/02-2018 | மெய்கண்டான் பாடசாலை ஒழுங்கை புனரமைத்தல் | 1.452Mn | 03 மாதங்கள் | C9 வீதி | 14,530.00 | 21.08.2018 |
| 02 | NP/14/41(17)/02/CF/03-2018 | பண்ணாகம் 4ஆம் ஒழுங்கை புனரமைத்தல் | 1.698Mn | 03 மாதங்கள் | C 9 வீதி | 16,990.00 | 21.08.2018 |
| 03 | NP/14/41(17)/02/CF/04-2018 | மாவடிவைரவர் வீதி, சித்தன்கேணி புனரமைத்தல் | 1.694Mn | 03 மாதங்கள் | C 9 வீதி | 16,940.00 | 21.08.2018 |
| 04 | NP/14/41(17)/02/CF/05-2018 | நெல்லியான் வைரவர் கோவில் வீதிபுனரமைத்தல் | 1.195Mn | 03 மாதங்கள் | C 9 வீதி | 11,950.00 | 21.08.2018 |
| 05 | NP/14/41(17)/02/CF/10-2018 | செல்லையா வாத்தியார் வீதி புனரமைத்தல் | 2.232Mn | 03 மாதங்கள் | C 8 வீதி | 22,330.00 | 21.08.2018 |
| 06 | NP/14/41(17)/02/CF/11-2018 | ஓடக்கரை இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல் | 0.585Mn | 02மாதங்கள் | C 9 வீதி | 5,860.00 | 21.08.2018 |
| 07 | NP/14/41(17)/02/CF/07-2018 | வட்டுக்கோட்டை கலட்டிவீதி | 0.341Mn | 02மாதங்கள் | C 9 வீதி | 3,415.00 | 21.08.2018 |
| 08 | NP/14/41(17)/02/CF/08-2018 | வட்டுக்கோட்டை ஓடக்கரை இணைப்பு வீதி புனரமைத்தல் | 1.200Mn | 03 மாதங்கள் | C 9 வீதி | 12,003.00 | 21.08.2018 |
| 09 | NP/14/41(17)/02/CF/09-2018 | தலைமை அலுவலக வாகனதரிப்பிட நிலக்காறை அமைத்தல் | 0.420Mn | 03 மாதங்கள் | C 9 கட்டடம் | 4,209.00 | 21.08.2018 |

10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபைக் கட்டடத்தில் 15.05.2018 அன்றுபி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்விகோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்குப் பூரணஅதிகாரம் உண்டு.

**திரு.த.நடனேந்திரன்**
**தலைவர்,பெறுகைக் குழு, வலிகாமம் மேற்குபிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**27.04.2018.**

(IN/6609)(11.17)

# மரண அறிவித்தல்கள்

## நேசரெட்ணம் செல்வரெட்ணம் (நேசம்)

**பிறப்பு : 15.06.1932 இறப்பு : 27.04.2018**



நல்லூர் செட்டித் தெருவினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நேசரெட்ணம் செல்வரெட்ணம் (நேசம்) நேற்று (27.04.2018) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - விசாலாட்சி தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வரெட்ணத்தின் (ஓய்வூதியர் யாழ். மாநகர சபை) அன்பு மனைவியும், யசிந்தா (ஓவியர்), ஜனத்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபந்தினியின் (கனடா) அன்பு மாமியாரும், கஜானன், அபிராமி, விக்னேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ்ற் மணியம்) மற்றும் பாக்கி யம், நீலாவதி (மலேசியா), காலஞ்சென்ற நவரெட்ணராஜா மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.04.2018) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**51/15, செட்டித்தெரு,**
**நல்லூர்.**

**தகவல்: யே.நிரோஷானந் (பெறாமகன்)**

**தொ.பே: 077 808 4927** (CS 16138)(10)

## திருமதி
## செல்வநாயகி அம்பலவாணர்



அராலி வடக்கைப்பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி அம்பலவாணர் (24.04.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை தவமணி தம்பதியரின் அன்பு மகளும் பகீரதி காலஞ்சென்ற நித்தியானந்தராஜா குலமணியின் அன்புச்சகோதரியும் நந்தகுமார், (கலாநிதி, USA) மோகனகுமார், (கலாநிதி, USA) சுஜேந்திரா, (கொலண்ட்), மயிலநாதன் (கனடா), ஜெயகலைவாணி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மங்களா (USA), Dr.மீரா (USA), பிரியதர்ஷினி (கொலண்ட்), அமிர்தினி (கனடா) நகுலேச்வரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் ஹரி ,நிசாந்தன், நிசித்தா, சஜனுகா, சஞ்சய், அபிஷா, தர்சனா, சுஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் அராலி வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 205 1505**
**077 758 7755**

**தகவல்: குடும்பத்தினர்**

**கார், வான் வாடகைக்குத் தேவை**

கார்கள் வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 071 0404 978










# பெண்களை குறிவைக்கும் குருதிச்சோகை

இரும்புச்சத்து குறைபாடு காரணமாகத்தான் பெரும்பாலானவர்கள் குருதிச்சோகைக்கு ஆளாகிறார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள்... என அனைத்துத் தரப்பினருக்கும் குருதிச்சோகை ஏற்படும் என்றாலும் ஒப்பீட்டளவில் பெண்கள்தான் அதிக அளவில் குருதிச்சோகைக்கு ஆளாகிறார்கள். பருவம் அடைதல், மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் பெண்கள் அதிக குருதி இழப்பை எதிர்கொள்கிறார்கள்.

தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு, தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காததும் இதற்குக் காரணமாகிறது. தாய்க்கு குருதிச்சோகை இருந்தால், குறை மாதத்தில் குழந்தை பிறக்கலாம் அல்லது குறைந்த எடையுடன் குழந்தை பிறக்கும்; அந்தக் குழந்தைக்கு குருதிச்சோகை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதனால் குழந்தைக்குப் போதுமான இரும்புச்சத்து கிடைக்காமல் போகும். எனவே, பெண்கள் கவனமாகத் தங்களைப் பார்த்துக்கொண்டு, குருதிச்சோகை வராமல் காத்துக்கொள்ள வேண்டியது அவசியம். குடும்பத்தினரும் இந்த விடயத்தில் பெண் குழந்தைகளின் மேல் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது. குருதிச்சோகை பற்றிய விழிப்புணர்வை தாயிடமிருந்து ஆரம்பிப்பதே சரி.

**யாருக்கு ஏற்படலாம்?**

- மகப்பேறு அடையும் வயதை எட்டிய பெண்கள்
- கர்ப்பிணிகள்
- அடிக்கடிக் குருதித்தானம் செய்பவர்கள்
- கைக்குழந்தைகள்
- குறைமாதத்தில் பிறந்தவர்கள்
- வளர்ச்சியில் குறைபாடு உடையவர்கள்
- அசைவ உணவைத் தவிர்ப்பவர்கள்.
- இரும்புச்சத்துக் குறைபாடு (Iron deficiency) உள்ளவர்கள்
- விற்றமின் குறைபாடு (Vitamin deficiency) உள்ளவர்கள்
- சிறுநீரக பாதிப்புள்ளவர்கள்
- குடல் புற்றுநோய், அல்சர் உள்ளவர்கள்.

**தீர்வுகள்...**

- முதல் இரண்டு வயதுக்குள், 10 - 14 இடைப்பட்ட வயதில், கர்ப்ப காலங்களில் தான் குருதிச்சோகையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் அந்த வயதுகளில் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஊட்டச்சத்துக் குறைபாடு சோதனை செய்துகொள்வது நல்லது.
- கீரை, இரும்புச்சத்து அதிகமுள்ள பயறு, பருப்பு வகைகள், ராகி, சத்துமாவு, இறைச்சி, மீன், முட்டை போன்ற உணவுப் பொருள்களை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- குருதியில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்க இரும்புச்சத்து மிக அவசியம்.
- ஆரோக்கியமான உணவுகள், பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிகமாகச் சாப்பிட வேண்டும்.
- உலர் திராட்சை, முந்திரி, பாதாம், பேரீச்சை, நெல்லிக்காய், கரட் போன்றவையும் குருதியில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்க உதவும்.
- தினசரி ஒரு வகைப் பழம் என்கிற கணக்கில் பழமாகச் சாப்பிடலாம்; பழச் சாறாகக் குடிக்கலாம்.
- உடலில் தேவையான அளவு இரும்புச்சத்து இருக்கவேண்டியது அவசியம். உணவில் கிடைக்கவில்லை யென்றால், மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இரும்புச்சத்து மாத்திரைகளைச்சாப்பிடலாம்.
- கர்ப்பிணிகளுக்கு மூன்று மாதங்கள் போலிக் அசிட் மற்றும் அதன் பிறகு கொடுக்கப்படும் இரும்புச்சத்து சப்ளிமெண்ட்டரி மாத்திரைகளைத் தவறாமல் சாப்பிட வேண்டும்.

மேலும், பிறநோய்களால் குருதிச்சோகை ஏற்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சாவல்கட்டு
ஆனைக்கோட்டையை
சேர்ந்த

**பொன்னம்பலம் சவுந்தலாதேவி**
**(கிளி அக்கா)**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நாளை மறுதினம் (30.04.2018) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தோற்றம் 01.10.1947 மறைவு 30.03.2018

**குடும்பத்தினர்**

## சிந்தனை நிறுத்தி 6ஆம் ஆண்டு பூர்த்திநாள்

மண்ணில் 16 . 06 . 1946



விண்ணில் 28 . 04 . 2012

### புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

பப்பா உங்கள் சிந்தித்தல் நின்று இன்றொடு ஆறாண்டு பூர்த்தி பப்பா!
மாணவர்களின் அறிவு விருத்தி "Bloom" தன் பிள்ளைகளின்
விருத்திக்கு திட்டமிட்டு கட்டமைத்தவர் எம் பப்பா!
சுய நலம் கருதாது தம் பிள்ளைகளை வெளிநாடு செல்லவிட்டு
மனதால் கூட நோகாமல் பொறுப்புக்களை தனித்து சுமந்தவர் எம் பப்பா!
உங்களுடன் இருந்த அந்த நாள்களை எண்ணிப் பார்க்கையில்
இதயம் இனிமையான சுரங்களை வென்ற சுகங்களை மீட்டி நிற்கின்றன பப்பா!
பாச அறிவில் வளர்த்தீர் பப்பா
கஷ்ட நஷ்டமில்லாது வாழ வைத்தீர் பப்பா!
இடர்கள் முழுவதும் தனியச் சுமந்தீர் பப்பா!
தீங்கிலாச் சிந்தையை வளர்த்துச் சென்றீர் பப்பா!
மௌனத்தில் முழுப் பொருளும் விளங்க வைத்தீர் பப்பா!
அனுதினமும் உம்மை எண்ண வைத்து விட்டீர் பப்பா!
கனவிலும் நினைவிலும் பப்பா!
எங்கள் பாவம் உம்மை தொலைத்ததுவோ பப்பா!
கடவுள் கைவிட்டதுபோல் கைவிட்டு சென்றதெங்கே பப்பா?
உமையிழந்த உம் மனைவி காசிக்கு போறேன்
ஆளைவிடு என்றதுபோல் நிற்கின்றார் பப்பா!
"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வரார்"
உம் தூய உள்ளம் கோயில் கொண்டதுவோ, பப்பா!
ஆறு வருடமென்ன ஆறுயுகம் ஆனாலும் ஆறாது
பப்பா உங்கள் பிரிவு?

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS 16133)(10)


**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியில் ஆயிரம் சதுரஅடி உள்ள வீட்டின் மேல்மாடி வாடகைக்கு உண்டு. ஒரு சிறிய அலுவலகம் அல்லது சிறு குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு - 077 2530 865

**தேங்காய் மட்டை தேவை**

தேங்காய் மட்டை (பொச்சுமட்டை) தேவை. உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்யப்படும். தொடர்பு - 077 6544 428

**வாடகைக்கு**

நல்லூரில் மூன்று மாடி கட்டடத்தொகுதி மற்றும் வீடு வாடகைக்கு உள்ளது. அலுவலகத்திற்கு ஏற்றது.

தொடர்பு - 077 3973 166









## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை

**(ஓய்வு பெற்ற பிரதான பிராந்திய முகாமையாளர், இலங்கை போக்குவரத்து சபை வடக்கு)**



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை நேற்று (27.04.2018)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மனோன்மணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தநாயகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் உமாசுதன் (கணக்காளர், இ.போ.ச வடக்கு யாழ். பருத்தித்துறை), கௌரிசங்கர்(பிரான்ஸ்), முரளி (இத்தாலி), வாகீசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் உ.மதுரா, மு.காயத்திரி ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்ற அருந்ததி மற்றும் சந்திரமோகன், சகாதேவன், சிவயோகம் (கலா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.05.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 33, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.**

**தகவல்: குடும்பத்தினர் 077 6082 313**

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 50 | 60 | 60 | 50 | 60 |
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 60 | 50 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 80 | 120 | 90 | 140 | 70 |
| பாகல் | 100 | 200 | 120 | 150 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 60 | 140 | 100 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 150 | 150 | 100 | 160 | 140 |
| பூசணி | 40 | 50 | 50 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 40 | 60 |
| கீரை | 50 | 30 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 35 | 20 |
| ப.மிளகாய் | 50 | 60 | 30 | 50 | 60 |
| புடோல் | 70 | 70 | 60 | 60 | 40 |
| கோவா | 50 | 60 | 70 | 40 | 50 |
| வெண்டி | 80 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 200 | 180 | 170 | 180 | 140 |
| தேங்காய் | 65 | 80 | 80 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 280 | 200 | 140 | 160 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 60 | 100 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 280 | - | 350 | 200 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 800 | 800 |
| நண்டு | 500 | 600 | 400 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 800 |
| | 500 | 600 | 600 | 900 |
| பாரை | 500 | 700 | 700 | – |
| சுறா | 350 | 450 | 400 | 500 |
| சீலா | 400 | 450 | 500 | 600 |
| விளை | 300 | 400 | 400 | 400 |
| முரல் | 450 | 350 | 400 | – |
| | 800 | 400 | 500 | – |
| கும்பிளா | 300 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 250 | 200 | 200 | 200 |
| ஓரா | 200 | 250 | 400 | – |
| திரளி | 300 | 180 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 200 | – |
| | 350 | 300 | 400 | – |
| சூடை | 200 | 250 | 300 | 250 |
| ஒட்டி | 100 | 80 | 50 | 100 |
| திருக்கை | 250 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 350 | 400 | 200 |

# பெண்கள் தூக்கத்தில் பற்களை கடிப்பது ஏன்?

பலருக்கும் அதிலும் குறிப்பாக இளவயது பெண்களுக்கு தூக்கத்தில் நற நறவென பற்களைக் கடிக்கும் பழக்கம் இருக்கிறது. இது பல நேரங்களில் அருகில் படுத்திருப்பவர்களின் தூக்கத்தைக் கெடுத்து விடும்.

தூக்கத்தில் பற்களைக் கடிப்பதை மருத்துவ உலகு 'ப்ருக்ஸிஸம்' என்கிறது. இது மன வெளிப்பாடு என்கிறார்கள் மருத்துவர்கள். வெறுப்பு, கோபம், இயலாமை, ஏமாற்றம் என்று பல்வேறான மன அழுத்தங்களுக்கு தீர்வு காணாமல், மனதுக்குள்ளேயே போட்டு புதைத்துக்கொண்டால், அவை தூக்கத்தின் போது இப்படி வெளிப்படும் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

பொதுவாக கட்டிளமைப் பருவத்தில் இருப்பவர்கள்தான் இந்தப் பிரச்சினையில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களின் மன அழுத்தத்துக்கு பரீட்சை தொடர்பான பயம் முக்கிய காரணமாக இருக்கிறது. அதற்கடுத்து காதல் விவகாரமும் சேர்ந்து கொள்கிறது. பிரச்சினை என்னவென்று தெரிந்துகொண்டால் தீர்ப்பதும் சுலபம். பற்கள் தொடர்ந்து இப்படி நறநற வென்று அரைபடுவதால் நாளடைவில் கீழ்த்தாடையின் முன்பற்கள் தேய்ந்து விடும். எந்தவொரு இனிப்பான உணவையும், சூடான அல்லது குளிர்ச்சியான பானங்களையும் சாப்பிட முடியாது. வெகுநாட்கள் இந்த பிரச்சினை தொடர்ந்தால் தாடையின் சதைகள் இறுகி முகத்தின் அமைப்பே குலைந்து போய்விடும். தாடை எலும்பை மண்டை ஓட்டோடு இணைந்திருக்கும் மூட்டுப் பகுதியும் பாதிக்கப்பட்டு வலி உண்டாகும்.

தூக்கத்தில் பற்களைக் கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் தற்காலிக தீர்வாக 'சாப்ட் ஸ்ப்லின்ட்' என்ற கிளிப்பை பயன்படுத்தலாம். படுக்கப்போகும் போது மட்டும் இதை பற்களில் பொருத்திக்கொள்ளலாம். இதன் மூலம் பற்களின் கீழ் தாடையும் மேல் தாடையும் ஒட்டாமல், உரசாமல் தடுக்கலாம். ஆனாலும் இது நிரந்தரமான தீர்வு அல்ல. மன அழுத்தத்துக்கான காரணத்தை தேடி, அதைச் சரி செய்த பிறகே இந்தப் பிரச்சினையில் இருந்து முழுமையாக வெளிவர முடியும். இதற்கு நல்ல மனநல ஆலோசகரின் அறிவுரை, யோகா, தியானம் போன்ற வழிமுறைகளையும் நாடலாம். அவை நல்ல பயன் தரும். நிச்சய தீர்வு கிடைக்கும்.

## சிறை...

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். நகரில் நேற்றிரவு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவர் தாக்கப்பட்டனர். அவர்கள்பயணித்தவாகனமும்அடித்துநொறுக்கப்பட்டது. சிறை அலுவலர்களைத் தாக்கினார் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் சம்பவ இடத்தில் இருந்து பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும் சிறைச்சாலைவட்டாரங்களோபொலிஸாரோ தர மறுத்துவிட்டனர்.

சம்பவம்யாழப்பாணம்சத்திரச்சந்திக்குஅண்மித்த பகுதியில் இரவு 8 மணியளவில் இடம் பெற்றது. யாழ்ப்பாணச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவரே தாக்கப்பட்டனர். அவர்கள்பயணித்ததுஎன்றுகூறப்படும்வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடி அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் இருந்தே சிலர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களைத் தாக்கித்துரத்திக்கொண்டுவந்தனர்என்றுநேரில் பார்த்தவர்கள் கூறினர். உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வாகனங்களுக்குள் ஏறிய போதுவாகனம்அடித்துச்சேதமாக்கப்பட்டது. சிறைச்சாலை அலுவலர்கள் சிவில் உடையில் காணப்பட்டனர். சம்பவத்தை அடுத்து பொலிஸார், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறப்பு அதிரடிப்படையினர் அந்த இடத்துக்குவரவழைக்கப்பட்டனர். தாக்குதல்நடத்தியவர்கள் தப்பினர் என்று சம்பவத்தை நேரில் கண்ட சிலர் கூறினர். பொலிஸார், படையினர், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிஐடியினர் எனப் பலர் அங்கு குழுமியிருந்தனர். சிறிது நேரத்தில் அங்கிருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டார்.

"உணவு வாங்குவதற்காகச் சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்களை மதுபான நிலையத்தில் இருந்து வந்தவர்கள் அடித்துள்ளனர். சம்பவத்தில்உத்தியோகத்தர்கள் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்துத்தாக்கப்பட்டவாகனமும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவத்துடன்தொடர்புடைய 36 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பபட்டுள்ளார்'' என்று பொலிஸ் தரப்பினர் தெரிவித்தனர். எனினும் தெல்லிப்பழைக்குச் சென்ற சிறைச்சாலைஉத்தியோகத்தர்களே இடையில் மறித்துத் தாக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைத் தரப்பினர் தெரிவித்திருந்தனர். இந்தத் தகவல்கள் உத்தியோகபூர்வதாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21,105.8.4)

## இந்திர விழா...

இருந்தும் விழாவைக் காண பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதற்கேற்ற வகையில் வல்வெட்டித்துறை நகரம் தயாராகி வருகின்றது.

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவமானது, சித்திரா பௌர்ணமிநாளைஇறுதிநாளாகக்கொண்ட 15 நாள்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். இறைவனின் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைத்தல் தொழிலை உணர்த்தும் வகையில், கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகும் உற்சவம், எட்டாம் நாள் வேட்டைத் திருவிழாவும், 9 ஆம் நாள் பாம்புத் திருவிழாவும், 11ஆம்நாள்பூங்காவனத்திருவிழாவும்12ஆம்நாள்புலிவேட்டைத்திருவிழாவும் இடம்பெற்று 13 ஆம் நாள் இரவு சப்பைரதத் திருவிழாவும், 14 ஆம் நாள் தேர்த்திருவிழாவும்,15ஆம்நாள்தீர்த்தோற்சவமும்அதனைத் தொடர்ந்து இந்திரவிழாவும் இடம்பெறும்.

நாளைஇந்திரவிழாவுக்கானஆயத்தங்களை அந்தப்பகுதி இளைஞர்கள், பொது அமைப்புக்கள், ஆலயத்தினர், மக்கள்என அனைவரும் முன்னின்று மேற்கொண்டுள்ளனர். கடந்த வருடங்களைப் போன்று இந்த முறையும் அம்மன் வீதியுலா வரும் காங்கேசன்துறை பருத்தித்துறை வீதியின் இருபக்கங்களிலும் ஊரிக்காடு தொடக்கம் பொலிகண்டி வரையான இரண்டு கிலோ மீற்றர் தூரம் உள்ள தெருவெங்கும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கட்டவுட்கள், தமிழர் பாரம்பரியத்தைவெளிப்படுத்தும்வகையானஉருவப் படங்கள், அறுநூறுக்கும்மேற்பட்ட வாழைப் பழக்குலைகளுடன்காட்சிதரும்வாழைகள், சவுக்க மரங்கள், தோரணங்கள், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டமூங்கில்மரங்கள், அலங்கார வளைவுகள், மின் அலங்காரங்கள் என்று இந்திர விழா ஞாயிறன்று எழுச்சிபெறவுள்ளது.

வீதியின்மேல்இசைக்கச்சேரிகள்இடம்பெறுவதற்கு ஏற்றவாறு பரண் அமைத்து மேடை வடிவமைக்கப்பட்டுள்ளது.ஒன்பதுக்கும்மேற்பட்டஇசைக்கச்சேரிகள்,இசைநிகழ்வுகள்என இந்திர விழா மக்களுடைய பெரும் வரவேற்பைப்பெறும். வழமை போன்று இந்த முறையும் மக்கள் வெள்ளம் படையெடுக்கும் என்பதால் மக்களுடைய பாதுகாப்புக்கான வசதிகளும்ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றுஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-21, 26)

## ஈ.பி.டி.பியினர்...

ளான ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்கள் இருவரையும் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணக்களத்துக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிடப்பட்டுள்ளது.

17.04.2018 திகதியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கடிதத்தின் பிரதி கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாண மேல் நீதி மன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக்குச் சென்ற சமயம் அவர்கள் மீது கடும் தாக்குதல்நடத்தப்பட்டது. இந்தக்கொலைவெறித் தாக்குதலில் இரண்டுபேர் கொல்லப்பட்டனர். தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ. சேனாதிராசா உள்ளிட்ட பலர் காயமடைந்தனர்.

இந்தவழக்கைவிசாரித்தநீதிமன்றம் குற்றஞ்தசாட்டப்பட்டவர்களானஈ.பி.டி.பிஉறுப்பினர்களைக்குற்றவாளிகளாக அறிவித்தது. அவர்களில் இருவர் வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைஉடனடியாக நாட்டுக்குக்கொண்டுவருவதற்குநடவடிக்கை எடுக்குமாறே பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

நாடு கடத்தல் உடன்படிக்கையை உடனடியாக நடமுறைப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று பிறப்பித்த உத்தரவைச் சுட்டிக்காட்டியும், ஏற்கனவே சட்டமா அதிபருக்கு 30.11.2017 அனுப்பியகடிதத்தைமீளவும்நினைவுபடுத்தி நாடுகடத்தல் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று தெரிவித்தும் பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபருக்குக் கடிதம் எழுதியுள்ளது. மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக யாழ்ப்பாண மேல் நீதிமன்றுக்கு அறிக்கை அனுப்பப்படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-4)

## உலகத்...

யின் ஊடாக மகா சங்கத்தினர் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும். பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவித்துள்ளார்.

தம்புள்ளை சிறி வலகம்பா மகா பிரிவெனா விகாரையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறந்த ஒழுக்கப் பண்பாடான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வளமான பௌத்த சமூகம் குறித்த செய்தியை தேசிய மற்றும் பன்னாட்டுரீதியாகக்கொண்டுசெல்வதற்கும் இந்த உன்னத வெசாக்தினக்கொண்டாட்டத்துடன்அணிசேருமாறுஅழைப்புவிடுத்தஅரச தலைவர் பௌத்த சமூகத்தைப் பலப்படுத்துவதன் மூலமே சிறந்த ஒழுக்கப் பண்பாடான சமூகம் குறித்த எதிர்பார்ப்பை வைக்க முடியும். பௌத்த விகாரை அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காகவும் தொல்பொருள்களை பாதுகாப்பதற்கும்அரசுமுன்னுரிமையளித்து நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார். (21)

## தொழிலாளர்...

லாம் திகதியே தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக் கடைப்பிடிக்கப்படவுள்ளதால், அன்றைய தினம் பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும்விடுமுறைவழங்கவேண்டும்என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மே முதலாம் திகதி பன்னாட்டு தொழிலாளர் தினம். இலங்கை அரசு, மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக மே 7ஆம்திகதிபன்னாட்டுதொழிலாளர்தினத்தை அறிவித்துள்ளது. மே முதலாம் திகதி விடுமுறை இல்லாமல் செய்யப்பட்டு, 7ஆம் திகதியே விடுமுறை வழங்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே முதலாம் திகதியே தொழிலாளர் தினத்தை கடைப்பிடிக்கவுள்ளது. யாழ்ப்பாணத்தில்கூட்டமைப்பின் தொழிலாளர் தினம் இடம்பெறவுள்ளது. ஊர்வலத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசவிடுமுறைஇல்லைஎன்பதால்தனியார் நிறுவனங்களைஅன்றையதினம்தமதுபணியாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புகேட்டுக்கொள்வதாகஅந்தக்கட்சியின்பேச்சாளர்எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

(உ-5)

# கோக்லியின் விலகலால் ஆப்கான் கவலைப்படும்

## பி.சி.சி.ஐ. வருத்தம்


"ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணியின் தலைவர் கோக்லி கட்டாயம் விளையாட வேண்டும்" என்று விருப்பம் தெரிவித்தது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.


ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு அண்மையில் டெஸ்ட் அந்தஸ்தை வழங்கியது பன்னாட்டு கிரிக்கெட் சபை. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பின்னர் தனது முதலாவது ஆட்டம் இந்தியாவுக்கு எதிராக அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது ஆப்கானிஸ்தான். இதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஏற்றுக் கொண்டது. இதையடுத்து ஆப்கானிஸ்தான் - இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஜூன் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆனால், இந்த ஆட்டத்தில் பங்கெடுக்காமல் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் பங்கெடுக்கத் திட்டமிட்டுள்ளார் கோக்லி. இந்திய அணி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளது. இந்தத் தொடரைக் கருத்திற்கொண்டே கோக்லி அவ்வாறு இங்கிலாந்துக்குச் சென்று கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் பங்கெடுத்து விளையாடவுள்ளார். கோக்லியின் திட்டம் இவ்வாறிருக்க, ஆப்கானிஸ்தானுக்கு எதிராகவும் கோக்லி விளையாட வேண்டும் என்று விரும்புகிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

"இந்தியாவுக்கு முதல் முறையாக டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட ஆப்கானிஸ்தான் அணி வருகிறது. அந்த அணி இந்திய அணியைக் காட்டிலும் சிறிய அணியாக இருந்தாலும், தகுந்த மதிப்பு அளிக்க வேண்டும். அதனால் இந்திய அணி, இங்கிலாந்துக் கழக அணியுடன் விளையாடச் செல்வது ஆப்கானிஸ்தான் அணியை அவமானப்படுத்தும் செயலாகும். அத்துடன் கிரிக்கெட் உலகுக்கு இந்திய அணி மோசமான செய்தியை வெளிப்படுத்தும் செயலாக அமைந்துவிடும். போட்டியை ஒளிபரப்பும் உரிமை பெற்றவர்களுக்கும் அது இழப்பை ஏற்படுத்தும். இங்கிலாந்து கழக அணியில் விராட் கோக்லி விளையாடினாலும், உரிய அனுமதி பெற்றுவந்து ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட வேண்டும். ஆப்கானிஸ்தானுக்கு எதிரான கோக்லி பங்கேற்க வலியுறுத்தப்படும்" என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆனால், இது விடயத்தில் கோக்லியின் முடிவே இறுதியாக அமையும் என்று கருதப்படுவதால், ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அவர் விளையாடுவது சந்தேகமே. (ம)





# பார்சிலோனா தொடர் காலிறுதிக்குள் நடால்

ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து கார்சியா லோபஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அவர், தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து அடுத்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதையடுத்து மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் ரபேல் நடால். (ம)

# டோனி 5,000

ரி-20 ஆட்டங்களில் அணித் தலைவராக 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி.

பெங்களூருக்கு எதிராக கடந்த 25ஆம திகதி புதன் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், டோனி ஆட்டமிழக்காமல் ''0 ஓட்டங்களைக் குவித்தார். இதையடுத்தே அவ இந்த அடைவுக்கு உ த்தானவர் ஆனார். (ம)



# லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்; நம்பிக்கையில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு நடைபெறவுள்ள, ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட் இடம்பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் ரிச்சட்சன்.

கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரிச்சட்சன் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒலிம்பிக் தொடரில், கிரிக்கெட் விளையாட்டைச் சேர்க்க பன்னாட்டு கிரிக்கெட் சபை தீவிரமாக முயன்று வருகிறது. அதற்கான நடவடிக்கைகளை வேகமாக எடுத்து வருகிறோம். எங்கள் முயற்சிகள் சரியான திசையில் சென்றால், 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கும் ஒலிம்பிக் தொடரில் நிச்சயம் கிரிக்கெட் இடம்பெறும். கடந்த 1900ஆம் ஆண்டு பரிஸில் நடந்த கோடைகால ஒலிம்பிக் தொடரில் மட்டுமே கிரிக்கெட் இடம்பெற்றது அதன் பின் இன்னும் இடம்பெறவில்லை. 2024ஆம் ஆண்டு நடக்கும் ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட்டைச் சேர்க்கக் கோரும் மனுவை பன்னாட்டு ஒலிம்பிக் சங்கத்தில் அளிக்கும் காலக்கெடு முடிந்துவிட்டது. ஆதலால், 2028ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் தொடரில் சேர்க்கத் தீவிரமாக முயற்சிகள் நடந்து வருகின்றன. எங்களின் பேச்சு சிறப்பாகச் செல்லும் பட்சத்தில் 2028 ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட் இடம்பெறும்" என்று ரிச்சட்சன் மேலும் தெரிவித்தார். (ம)




# தேசிய தடகளத்தில் பதக்கம் வென்ற மாணவர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியால் நேற்று மதிப்பளிப்பு

சாவகச்சேரி, ஏப். 28

இளநிலைப் பிரிவினருக்கான தேசியமட்ட தடகளத் தொடரில், பதக்கங்களை வென்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிச் சமூகத்தால் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்ற அ.புவிந்திரன், பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் பெற்ற பா.கிரிசா, 18 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் பெண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் பெற்ற நே.டக்சிதா, ஆண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் பெற்ற அ.புவிதரன் வெண்கலப் பதக்கம் பெற்ற அ.பானுசன், ஈட்டி எறிதல் போட்டியில் வெண்லப் பதக்கம் பெற்ற ச.சங்கவி ஆகியோரே அவ்வாறு மதிப்பளிக்கப்பட்டனர். (ம-9)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 28

**யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டத் தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் றைரோன் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸி. கழக துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து விக்ரோறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

**இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடர்**

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பறாங் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)




# கொக்குவில் இந்து. இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 28
கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால் பாதியின் 15:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. இரண்டாவது பாதியும் 22:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துவின் வசமானது. இதன்படி அந்த அணி 37:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. மூன்றாவது கால் பாதி 18:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துவின் வசமானது. அந்த அணி ஆட்டத்தின் இறுதிக் கால்பாதியிலும் ஆதிக்கம் செலுத்தியது. இதன்படி நான்காவது கால் பாதி 13:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துவின் வசமானது. முடிவில் 68:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

(ம-23)

## வவுனியா தமிழ் மத்தி. வீரருக்கு வேகநடையில் வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 28



இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான வேகநடையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.தனுசன் வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார். கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான வேகநடையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ஏ.தனுசன் 57 நிமிடங்கள் 24 செக்கன்கள் 98 மில்லி செக்கன்க ளில் நடந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

(ம-422)

# அத்தியார் இந்து சம்பியனானது



யாழ்ப்பாணம், ஏப். 28
சித்திரைப் புதுவருட தினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்வி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தாச்சித் தொடரில், ஆண்கள் பிரிவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் அத்தியார் இந்துக் கல்லூரி அணி 3:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

(ம-422)

## காலிறுதியில் பி.வி.சிந்து



ஆசிய பூப்பந்தாட்டத் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து. இந்திய வீராங்கனை சிந்துவை எதிர்த்து சீன வீராங்கனை ஜியோன் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 21:12, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் சிந்து.

(ம)

# நெடுந்தூர ஓட்டங்களில் வவு. வீரர் கிந்துஜனுக்கு தங்கங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 28
இளநிலைப் பிரிவினருக்கான தேசியமட்ட தடகளத் தொடரில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 5 ஆயிரம் மற்றும் 10ஆயிரம் மீற்றர் ஓட்டங்களில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கிந்துஜன் தங்கப்பதக்கங்களைச்சுவீகரித்தார்.
கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கிந்துஜன் 15 நிமிடங்கள் 56 செக்கன்கள் 10 மில்லி செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கத்தை வென்றார். இவர் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் 33 நிமிடங்கள் 56 செக்கன்கள் 81 மில்லி செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கம் வென்றார்.

(ம-422)






# தோல்விக்கு முற்றுப்புள்ளி நேற்று வைத்தது டெல்லி



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி தொடரில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது டெல்லி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. டெல்லி அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிய கம்பீருக்கு விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமிலும் இடம் மறுக்கப்பட்டது. ஆரம்ப வீரர்களாக பிரித்வி மற்றும் முன்றோ. கம்பீரின் நீக்கம் சரியானதுதான் என்று நியாயப்படுத்தக் கூடிய ஆரம்பத்தை வழங்கினார் பிரித்வி. 7 பந்துப்பரிமாற்றங்களில் அணி 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முன்றோ. அணித் தலைவர் ஸ்ரேயாஸ் பிரித்வியுடன் இணைந்து அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தினார். அரைச்சதம் கடந்தார் பிரித்வி. அவர் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஐ.பி. எல். வரலாற்றில் குறைந்த வயதில் அரைச் சதத்தைப் பதிவுசெய்த வீரர் என்ற வரலாற்று அடைவை நிலைநாட்டினார் பிரித்வி. ஸ்ரேயாஸின் ஓட்ட வேட்டை இரட்டிப்பானது. சிக்சர்களை வாரி இறைத்துக்கொண்டிருந்தார் அவர். குறிப்பாக இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 4 சிக்சர்களையும், ஒரு பவுண்டரியையும் ஸ்ரேயாஸ் விளாசினார். முடிவில் 4 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைக் குவித்தது டெல்லி. ஸ்ரேயாஸ் 40 பந்துகளில் 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். 10 சிக்சர்கள் ஸ்ரேயாஸின் துடுப்பில் இருந்து பறந்தன.

பந்துவீச்சில் சாவ்லா, மாவி, ரசல் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.



கொல்கத்தா அணியின் ஆரம்ப வீரர்களாக லின் மற்றும் நரைன். 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லின். உத்தப்பா 1, ரணா 8 என அடுத்தடுத்து வீழ்ந்தனர். டினேஸ் கார்த்திக் 18 ஓட்டங்களைச் சேர்த்தார். இதற்காக அவர் 18 பந்துகளை எதிர்கொண்டார். ஆக, டினேஸ் கார்த்திக்கின் இன்னிங்ஸால் எந்தப் பயனும் கொல்கத்தாவுக்கு இல்லை. கில் மற்றும் ரசல் இணைந்து சிறிது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனினும், அவர்களால் வெற்றியிலக்கை நோக்கி கொல்கத்தாவை அழைத்துச் செல்ல இயலவில்லை. கில் 37 ஓட்டங்களுடனும், ரசல் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 164 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்தப்பட்டது கொல்கத்தா. இதையடுத்து 55 ஓட்டங்களுடன் வெற்றிபெற்றது டெல்லி. (ம)

## ஏனைய ஆட்டங்களுக்கு சம்பளம் தேவையில்லை

### கம்பீர் அதிர்ச்சிகர அறிவிப்பு



தொடர் தோல்விகளின் எதிரொலியாக, டெல்லி அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிய கம்பீர், ஏனைய ஆட்டங்களுக்குத்தான் ஊதியம் வாங்கப் போவதில்லை என்றும் அறிவித்தார். இதன்படி கம்பீர் பெறமறுக்கும் சம்பளம் இலங்கை மதிப்பில் சுமார் 7 கோடி ரூபா.

கொல்கத்தா அணியுடன் ஏற்பட்ட மனக் கசப்புக்களை அடுத்து அந்த அணியில் இருந்து விலகினார் கம்பீர். இந்த வருடம் அவர் டெல்லி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். அத்துடன் அணித் தலைவர் பொறுப்பும் கம்பீருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் கம்பீரின் தலைமையில் ஆறு ஆட்டங்களில் விளையாடிய டெல்லி ஓர் ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. ஐந்து ஆட்டங்களில் தோல்வியடைந்தது. இதையடுத்து அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து கம்பீர் விலகினார். பதில் தலைவராக ஸ்ரேயாஸ் பெயரிடப்பட்டார். இந்த நிலையில், தனது தலைமையில் ஏற்பட்ட தோல்விகளுக்குப் பொறுப்பேற்று ஏனைய ஆட்டங்களுக்கு ஊதியம் பெறப்போவதில்லை என்று அறிவித்தார் கம்பீர். (ம)

## வித்தியானந்தா சுமாரான ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 28

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில், நேற்றைய முதல் நாளில் 6 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது வித்தியானந்தாக் கல்லூரி அணி. வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக வேணுசாந் ஆட்டம் இழக்காமல் 47, அணித் தலை வர் முகமட் அகில் 40, மதுசன் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் அனுசன் 3 இலக்குகளை கைப்பற்றினார். (ம-422)

## றோமாவை வென்றது லிவர்பூல்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியின் முதலாவது சுற்றில் இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகமான றோமாவை இங்கிலாந்துக் கழகமான லிவர்பூல் வென்றது.

ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள் வரை கோல் எதுவும் பதிவாகவில்லை. ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் சாலா. அவர் 44ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் லிவர்பூர் முன்னிலை வகித்தது. மானி 55ஆவது நிமிடத்திலும், றோபேர்ட்டோ 60 ஆவது மற்றும் 67ஆவது நிமிடங்களிலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய 5:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது லிவர்பூல்.

80ஆவது நிமிடத்தில் எடின், 84ஆவது நிமிடத்தில் பொட்ரோ கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வெற்றிபெற்றது. அரையிறுதியில் இரண்டாவது சுற்று அடுத்த மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவில் எந்த அணி அதிக கோல்களைப் பதிவுசெய்கிறதோ அந்த அணியே இறுதிக்குத் தகுதிபெறும். அந்த வகையில் தனக்கான வாய்ப்பை அதிகப்படுத்தியது லிவர்பூல். (ம)





ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை - மும்பை அணிகள் மோதவுள்ளன. புனேயில் இந்த ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. பெங்களூரில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூருக்கு எதிராக விளையாடிவிட்டு நேற்றுமுன்தினம் புனேக்குத் திரும்பிய சென்னை அணிக்கு ரசிகர்கள் உற்சாகமான வரவேற்பை வழங்கினர். (ம)

**பணியாளர்கள் தேவை**

கொக்குவிலில் இயங்கும் புத்தகசாலைக்கு முகாமையாளர், பணியாளர்கள் தேவை.

**தொடர்பு - 076 989 4676**

**ஒத்துமாறல்**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர் வட மாகாணம்)**

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு ஒத்து மாற விரும்பும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எவரேனும் இருப்பின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 077 225 5636, 077 0626 463**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.